

# ஞானச்சுடர்

## சந்நிதியான் ஆச்சிரமம்.

மாசி

206 ஆவது மலர்

2015




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்**
**குற்றமும் ஆங்கே தரும்.**

**பொருள் :** ஒருவன் முறைதவறிப் பிறர் பொருளை அபகரிக்க ஆசை கொண்டால் அவ்வாசை அவனது குடியைக் கெடுத்துப் பல குற்றங்களையும் அப்பொழுதே அவனுக்கு விளைவிக்கும். (171)

**படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்**
**நடுவன்மை நாணு பவர்.**

**பொருள் :** நடுவுநிலைமை அல்லாமைக்கு அஞ்சுகின்றவர் தமக்கு உண்டாகும் பயனை விரும்பித் தருமமல்லாத செயல் களைச் செய்யார். (172)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்



ஈன்றாளு மாயென் தந்தை யாகியும்
ஆன்றோ ராகியு மடியா ராகியும்
மூன்றா யொன்றாய் முளைத்த முதலை
நான்றா னிரண்டற நாடு வோமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 20

உம்பர் தலைவனை யூழி முதல்வனைச்
செம்பொ னம்பலத் தாடிய செல்வனை
வம்பவிழ் மலர்கொடு வணங்கி நாளும்
தம்பதம் சென்னியில் சாத்துதும் நாமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 21

உண்ணா துறங்கா திருந்த வொருவனை
பண்ணா ரிசைபோல் பரிந்துநின் றானை
அண்ணா மலையானை அம்புலி சூடியை
எண்ணாம லெண்ணி யெம்வினை தீர்ப்போமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 22

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

0777 9006997 உடுப்பிட்டி. வைத்தியர் விசுவா

8-4 45 இந்திரன் நாற்றங்கோட்டம் இலைக்கஞ் பிரசவித்தோன்

# ஞானச்சுடர்



வெளியீடு - 02 | 206ஆவது மலர்
2014 | மாசி

## பொருளடக்கம்



| | | |
|---|---|---|
| மனிதப் பண்புகள் | பாலன் சுதாகரன் | 01 -02 |
| போற்றித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 03 -05 |
| அன்பின் மகத்துவம் | திருமதி ப. நடராஜா | 06 -07 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 08 -09 |
| யாழ்ப்பாணத்திலும்... | ச. லலீசன் | 10 -12 |
| சைவநெறி | பூ. சோதிநாதன் | 13 -16 |
| வாழ்வில் புராணம் | S. குணாகரன் | 17 -18 |
| திருவருட்பயன் | முனைவர் ஆ. ஆனந்தராசன் | 19 -21 |
| சந்நிதியான் ஆச்சிரமத்தின்... | இ. ஶ்ரீதரன் | 22 -23 |
| ஶ்ரீ ரமண நினைவலைகள் | தொகுப்பு | 24 -26 |
| உயிரினும் மேலான ஒழுக்கம் | இ. சிவராசா | 27 -31 |
| சைவ சமய வினாவிடை | ஆறுமுகநாவலர் | 32 -33 |
| தெய்வம் தந்த வீடு | க. நல்லையா | 34 -35 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 36 -37 |
| மகா சிவராத்திரி சிறப்பு | ஆர்.வீ. கந்தசாமி | 38 -39 |
| ஶ்ரீ கருட புராணம் | இரா. செல்வவடிவேல் | 40 -41 |
| உண்டு உறங்குவதல்லால்... | பு. கதிரித்தம்பி | 42 -43 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 44 -49 |
| வேதங்களால் பூட்டப்பெற்ற... | நா. நல்லதம்பி | 50 -53 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 54 -57 |
| என் அப்பாவுக்கு... | R. இராஜகோபால் | -58 |
| திருக்கேதீஸ்வரம் ... | சந்நிதியான் ஆச்சிரமம் | -59 |
| திருக்கோயில் வரிசை | வல்வையூர் அப்பாண்ணா | 60 -64 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் தைமாத வெளியீடு

## வெளியீட்டுரை:

தைமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை திரு ஆறு. திருமுருகன் (தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில், சந்நிதியான் ஆச்சிரமமானது முன்பள்ளிகளை நிறுவுதல், மாணவர்களுக்கு சீருடை வழங்கல், கல்வி புகட்டும் முன்பள்ளி ஆசான்களுக்கு நிதியுதவி வழங்கல், விதவைகளுக்கு உதவுதல் இன்னும் பல சேவைகளை ஆற்றிவருகின்றது என்பதனை புகைப்படங்களுடன் இணையத்தளத்தில் வலம் வருவதை நாம் எமது கண்களூடாகக் காணமுடிகின்றது.

அடுத்து அவர் தனது உரையில், 205ஆவது ஞானச்சுடர் வரையும் தொடர்ந்து வெளிவருதற்கு சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளின் ஆற்றலும், முருகனின் அருளுமே கைகூடியுள்ளது என்று சபையில் இருந்த அடியார்களுக்குக் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில் சந்நிதியான் ஆச்சிரமமானது எங்கெல்லாம் தேவை ஏற்படுகின்றதோ அங்கெல்லாம் சென்று தனது பணியை முன்னெடுத்து வருகின்றது என்பது பெருமைக்குரிய விடயமாகும் என்று கூறித் தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:

205ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திரு ஆ. சிவநாதன் (அதிபர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில் இச்சுடரை மதிப்பிடும் ஆற்றல் எமக்கு இல்லை. ஆனால் முருகப்பெருமானின் திருவருளால் மதிப்பீடு செய்யும் பணி கிடைத்துள்ளது என்று கூறினார். ஞானச்சுடர் மலரில் இடம்பெற்றுள்ள ஆக்கங்கள் யாவும் மனித வாழ்க்கைக்குத் தேவையான விழுமியக் கருத்துக்களைக் கூறுவனவாய் அமைந்துள்ளது.

தொடர்ந்து கூறுகையில் ஞானச்சுடர் மலரில் உள்ள விபூதிப் பிரசாதம் வெளிநாடுகளுக்குச் சென்று அவர்களுக்கு நோய் தீர்க்கும் மருந்தாக அமைவதை நாம் அறியமுடிகின்றது. சமயத்தைப் பரப்பும் சைவப் பெரியார்களை நினைவுபடுத்தும் ஒரு சிறந்த பணியை ஞானச்சுடர் வளர்த்து வருகின்றது.

அடுத்து அவர் தனது உரையில் ஆச்சிரமமானது, பொலநறுவை, அப்புத்தளை, கோமாரி, பதுளை இன்னும் பல இடங்களுக்குச் சென்று பல்வேறு உதவிகளைச் செய்துவருகின்றது. இவை யாவும் போற்றுதற்குரிய விடயமாகும். இதேபோன்ற பணிகளை ஏனைய சமய நிறுவனங்களும் முன்னெடுத்துச் செய்யவேண்டும் என்று கூறினார்.

அவர் இறுதியாக ஆச்சிரமமும் ஞானச்சுடரும் மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என்று கூறித் தனது மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

# மாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**M. இந்துசேகரம்**
(அவுஸ்திரேலியா)
**சிவபாலன் சுந்தரமூர்த்தி**
(சுவிஸ்லாந்து)
**N. கதிர்காமநாதன்**
(கொழும்பு)
**திருமதி. த. சுரேந்திரநாதன்**
(இளை. அதிபர், மயிலியதனை, தொண்டைமானாறு)
**செ. நவரெத்தினராசா J.P**
(கப்பூது, குப்பிளான்)
**ந. யோகேஸ்வரன்**
(பாடசாலைவீதி, கோண்டாவில்)
**அதிபர்**
(யா/ தொண்டைமானாறு வீ. ம. வித்தியாலயம்)
**த. இராசேஸ்வரன்**
(இராஜ உதயம், அல்வாய்)
**V.R. கனகராசா**
(சண்றைஸ் ஸ்ருடியோ, சுண்ணாகம்)
**தலைவர், செயலாளர்**
(வேவிலந்தை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்)
**சி. பத்மநாதன் J.P**
(உப தவிசாளர், நகரசபை, பருத்தித்துறை)
**சி. சிவம்**
(சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி)
**வ. நந்தகுமார்**
(அம்மன் கோவிலடி, கரணவாய் தெற்கு)
**உரிமையாளர்**
(ஜெகா மோட்டோர்ஸ், நெல்லியடி)
**நா. பவளம்**
(அச்சுவேலி)
**திருமதி தேவதாஸ் தயானி**
(அச்சுவேலி)

சி. மகாலிங்கம் J.P
(மலையன் தோட்டம், கொற்றாவத்தை)
சு. சிவதாசன் G.S
(புன்னாலைக்கட்டுவன் வடக்கு)
தலைவர், செயலாளர்
(கலைவாணி சனசமூக நிலையம், தொண்டைமானாறு)
உரிமையாளர்
(ஜெயகிருஷ்ணா, K.K.S. வீதி, சுண்ணாகம்)
ஐ. லோகஞானம்
(அஞ்சல் அதிபர், சுண்ணாகம்)
ஆ. விஸ்வலிங்கம்
(இளைப்பாறிய ஓவசியர், சுண்ணாகம்)
V. அரியராசா
(இளை. வரை. வல்லுனர், தொண்டைமானாறு)
அ. அரியகுமார் அதிபர்
(யாழ். சித்திவிநாயகர் பாடசாலை, பருத்தித்துறை)
க. யோகேந்திரநாதன் G.S
(தும்பளை, பருத்தித்துறை)
உரிமையாளர்
(ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பு நிலையம், யாழ்ப்பாணம்)
செ. சந்திரமூர்த்தி
(சந்திரா தொலைத்தொடர்பு நிலையம், உடுப்பிட்டி)
சி. பஞ்சலிங்கம்
(ஞானவைரவர் கோவிலடி, உரும்பராய் கிழக்கு)
செல்வி ஷாலினி தேவேந்திரா
(ஒஸ்காவீதி, உரும்பராய்)
இராசரெட்ணம் வசந்தன்
(ஊரெழு மேற்கு சுண்ணாகம்)
இ. குமாரதாசன்
(இளை. பிராந்திய மருந்தாளர், இடைக்காடு)
உரிமையாளர்
(உதயா பேக்ஹவுஸ், வல்லைவீதி, சங்கானை)
N. K. தங்கராசா
(இளை. தபாலதிபர், புலோலி)
இ. பாலகிருஷ்ணன்
(முகமாலை)
புஸ்பராஜா பத்மலோஜினி
(கல்வியங்காடு, யாழ்ப்பாணம்)

உரிமையாளர்
(நாதன் மெடிக்கல் சென்ரர்,நெல்லியடி)
**சோ. புவனதாஸ்**
(சங்கானை)
**த. விவேகானந்தன்**
(சியாமி பேபி நீட்ஸ், பருத்தித்துறை)
**இ. ஜெயபாலன்**
(பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)
**மா. ந. பரமேஸ்வரன்**
(கந்தசுவாமி கோவிலடி, இணுவில்)
**K. சிவம்**
(காரைநகர் றோட், யாழ்ப்பாணம்)
**S. ஈஸ்வரன்**
(டச்சுவீதி, சித்தங்கேணி)
**ச. மதனகுமார்**
(சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில்)
**கெ. தவராசா**
(விவேகானந்தர் வீதி, இணுவில்)
**வி. ந. ஸ்ரீதரன்**
(இளை. அதிபர், நீராவியடி, யாழ்ப்பாணம்))
**செ. செல்விகா**
(நாவலடி ஒழுங்கை, மானிப்பாய்)
**சி. இராசரத்தினம்**
(இராஜஸ்தான், சுதுமலை)
**வே. மதிபாலசிங்கம்**
(செட்டியதெரு, கரவெட்டி)
**நா. முருகையா**
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)
**செல்வராசா பொன்னுத்துரை**
(கரந்தன், நீர்வேலி)
**விஸ்வலிங்கம் குகலிங்கம்**
(பண்ணாகம், சுழிபுரம்)
**மா. தேவகுரு**
(செட்டிவளவு லேன், இணுவில்)
**சசிகரன் கௌதமன்**
(அச்சுவேலி)

**செ. பாலச்சந்திரன்**
(கொக்குவில் மேற்கு, கொக்குவில்)
**இ. புவனேந்திரராஜா (பிள்ளையார்)**
(நெல்லியடி, கரவெட்டி)
**தி. பாலசுப்பிரமணியம்**
(பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்)
**விஸ்வலிங்கம் துரைசிங்கம்**
(பண்ணாகம் தெற்கு)
**நாகன் கிருஸ்ணபிள்ளை**
(கோண்டாவில்)
**சி. கந்தையா**
(சுண்ணாகம்)
**K. விஷ்ணுமோகன்**
(உரும்பராய் கிழக்கு)
**சி. கனகசபை**
(நீர்வேலி)
**ச.க. தம்பு**
(அல்லாரை, மீசாலை)
**சிதம்பரநாதன் ஸ்ரீகரன்**
(புத்தூர்)
**நாகராசா சாந்தி**
(அச்சுவேலி)
**க. ரட்ணேஸ்வரன்**
(சங்கானை)
**சுப்பிரமணியம் மங்களேஸ்வரி**
(பருத்தித்துறை)
**சிவபாதசுந்தரம் கீதா**
(கரணவாய் மத்தி)
**க. கிருஷ்ணேஸ்வரக்குருக்கள்**
(ஆனைக்கோட்டை)
**திருமதி விஜயலட்சுமி இராசநாயகம்**
(வட்டுக்கோட்டை)
**திருமதி செல்வநாயகம்**
(வடலியடைப்பு)
**திருமதி சீதாதேவி இந்திரன்**
(மீசாலை)
**உரிமையாளர்**
(சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்)

# சுடர் தரும் தகவல்

ஒரு தூய்மையான ஆன்மீக வாழ்வு வாழ்பவனது வாழ்க்கைமுறை எல்லா நற்குணங்களாலும் அலங்கரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். வெளிப்பார்வைக்கு பரிசுத்த சான்றோனாக சமுகத்துக்கு காட்சியளிக்கும் ஆன்மீகவாதி உடலாலும் உள்ளத்தாலும் தான் செய்யும் செய்கையினாலும் தூயோனாக இருத்தல் வேண்டும்.

எண்ணிறந்த பலவித குறைகட்கு இருப்பிடமாயுள்ள நாம் உய்வடையும் பொருட்டு எல்லாம் வல்ல இறைவனையோ, அல்லது குருவையோ சரணடைகின்றோம். ஒரு பெரிய பள்ளத்தை நிரப்ப வேண்டுமாயின் ஒரு பெரிய மண்மேடு தேவையாக உள்ளது. அதேபோன்று நாம் எமது வாழ்வில் அடையும் சிறுமைகளைக் களைவதற்கு எம்மால் மேற்கொள்ளப்படும் தர்மகாரியங்கள்மூலம் அச்சிறுமைகளைப் போக்கலாம். இச்செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு ஒரு ஆன்மீக வாதியின் பங்கு அளப்பரியது.

தற்கால நிலையில் நாம் எவ்வழியிலாயினும் முன்னேற வேண்டுமாயின் அதற்கு முதற்காரணமாக எமது குறைகளை நன்குணர வேண்டும். பின்னர் அவற்றை நீக்குவதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்து அதன்மூலம் அக்குறைகளைப் போக்க வேண்டும். இச்செயற்பாட்டின்மூலம் நாம் பல துறைகளிலும் முன்னேற முடியும். கல்வியும் கேள்வியும் மிக அவசியமான அளவிற்கு மேலாக நாம் பெற்றிருப்பதை அறிந்து அகமகிழ்வும் பெருமையும் அடைகின்றோம். ஆயினும் வள்ளுவப் பெருந்தகையின் "கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற வள்ளுவ வாக்கிற்கு அமைவாக நாம் நடக்கின்றோமா என்றால் அதுதான் இல்லை. கல்விமூலம் நாம் பெற்ற அறிவை அனுபவ வாயிலாக மற்றவர்களது வாழ்வின் முன்னேற்றத்திற்கு வழி சமைப்பதற்குப் பதிலாக அவர்களின் வாழ்விற்கு தடையாக இருக்கின்றோம். இந்நிலை மாறவேண்டும்.

தற்கால நிலையில் ஒரு ஆன்மீகவாதியின் தூயமனம், தூய சிந்தனை, தூய செயல்மூலம் எம்மிடம் காணப்படும் தீய எண்ணங்களைப் போக்குவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். அதேபோன்று அவர்களும் தங்களிடம் உள்ள எல்லா ஆற்றல்களையும் சமுக மேம்பாட்டிற்கு வழங்கித் தாமும் மேன்மையுற்று சமுகம் சார்ந்தோரையும் மேன்மையுற வைப்பதற்கு முயற்சிக்க வேண்டும். இதனடிப்படையில் நாம் வாழ்வோமானால் சகல நன்மைகளும் கிடைப்பதற்கு குருவருளும், திருவருளும் கைகூடும் என்பது ஆன்றோர் வாக்கு.



# அன்னப்பணியுடன் ஞானச்சுடரும்

குன்று தோறா டுகோல குமாரனே
குவலய மெல்லா துதித்த திருத்தலம்
நன்று ஆடியே நாடி யடியார்கள்
நல்ல உள்ளமே கோயிலாய் யாடுவான்
என்று கந்த புராணம் முருகனை
ஏத்திடும் போற்றி புகழ்ந்துரையா நிற்கும்
இன்று அந்தக் குமாரவேள் ஆடும்
இனிய நல்ல திருத்தலம் வேறுண்டோ

ஏறு மா மயில் ஏறி விளை யாடும்
இனிய அந்தத் திருத் தலம் யாதெனில்
கூறும் யாழ்ப்பாணம் தொண்டை மானாற்றிலே
குலவும் முருகனின் ஆடலைக் காண்மினே
நாறு நல்ல கடம்பணி கந்த வேள்
நயந்து தன்னையே நம்பிடும் அடியார்க்கு
சோறு நன்கு அவித்துக் குவித்திடும்
சுவாமி நாதனே தங்குந் திருத்தலம்

சேவ லங்கொடி வீசுடும் கோபுர
குலவும் மேலான சந்நிதிக் கோயிலில்
ஆவல் கொண்டே யடியார்க் கருளிடு
அம்பலவாணன் அருமகன் சண்முகன்
நாவல் லோர்களும் நாடியே பாடிட
நல்லடி யார்க்கே நன்மை பயக்கவே
காவலாகியே அன்னக் குலமகல
கலந்து வாழ்ந்து கருணை பொழிவானே

முன்னால் வாழ்ந்த மயில்வானஞ் சுவாமி
முத்துக் கந்தனுக் கேற்புடைத்தாகிய
அன்னதானத்தை அன்று போல
அவரைப் பின்பற்றி மோகனதாஸ் சாமி
அவர்களும் அன்னப் பணியுடன் பற்பணி
யாக ஞானச்சுடர் விளக்கினை
மின்னல் போல உலகெங்கும் சுமந்து
மேவியே செய்து வருபவர் வாழ்கவே

*– முதுபெரும் புலவர் வை.க. சிற்றம்பலம் –*

# மனிதப் பண்புகள்

– திரு பாலன் சுதாகரன் அவர்கள் –

சிந்துநதி பாய்ந்திராவிட்டால் இந்துக்கள் நாமெங்கே? சிந்துநதிதான் இந்துநதியாகி இந்துக் களது வாழ்வியல் வளர்ச்சிக்கு வித்திட்டது என ஆன்றோரும் சான்றோரும் சான்று காட்டுவதை ஏற்காமல் இருக்க முடியாது. கால வெள்ளத்தால் கரைந்தழிந்து போகாத இனிய மதம் இந்துமதம் என்பதனை, கல்தோன்றி மண்தோன்றாக் காலமதில் தோன்றி முன் தோன்றிய மூத்த மதம் இந்துமதம் எனும் வரிகள் பறைசாற்றும். தோற்றுவிக்கப்பட்டதெங்கே? தோற்றுவித்தவர் எங்கே? எனும் வினாக்களுக்கு விடைகாண முடியாதளவு பெறுமதி மிக்கது எமது இந்துமதம். இங்கு வாழ்வாங்கு வாழவேண்டிய விதிமுறைகளை வாழும் வழிமுறைகளாக கூறியிருக்கின்றன இலக் கியங்கள். அவற்றில் சிலவற்றை நோக்குவோம்.

மனிதப் பண்புகளா? மனிதம் என்றால் என்ன? மனிதன் வாழ்வாங்கு வாழவேண்டிய விழுமியக் குணங்களை மனிதமென அழைக்கலாம். காலச் சூழலுக்கேற்ப அவ்வப்போது தோன்றியவர்கள்தான் நாயன்மார்கள். அவர்கள் தாம் தோன்றியிருந்த காலச் சூழலுக்கு இசைவாகப் பாடிய பதிகங்களிலும் மனிதம் மலிந்து காணப்படுகின்றது. குறிப்பாக,

**திருநாவுக்கரசு நாயனார்:**

"என் கடன் பணி செய்து கிடப்பதே" எனப் பாடுவதும், மேலும் "அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கிவிட்டாய் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே" எனப் பாடுவதும் ஈண்டு நோக்கத்தக்கது. இவ்வளவு காலமும் "நான்" என வாழ்ந்த எம்மை "நாம்" என வாழப் பழகச் சொல்வதோடு, மற்றையவருக்காக பணி செய்யும் மனோபக்குவத்தையும் ஏற்படுத்துகின்றது. இப் பண்பையே பாரதத்தில் பாரதியும்,

"ஊருக்கு உழைத்திடல் யோகம்
நலம் ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்
போருக்கு நின்றிடும் போதும்
உளம் பொங்கல் இல்லாத
அமைதி மெய்ஞானம்" எனப் போதனை செய்கின்றார். முதலில் உள்ளத்தில் உண்மையொளி உண்டாக வேண்டும். பின்புதான் அவை செயல்வடிவம் பெறும்.

"காக்கை உறவு கலந்துண்ணக் கண்டீர்" எனத் தாயுமானவர் பாடுவது கூடி உண்ணும் பண்பைச் சுட்டுகின்றது. சேர்ந்து புசியுங்கள். எள்ளானாலும் பகிர்ந்து புசியுங்கள். "யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி" எனத் திருமூலரும் இதனை உறுதிப்படுத்துவது நோக்கத்தக்கது. மேலும் இளையான்குடிமாற நாயனார், வருபவர்களுக்கு விருந்தளித்த விந்தையின் பயனாய் இறைபதம் எய்திய வரலாறு. திருவள்ளுவம்,

"செல்விருந்தோம்பி வரு விருந்து பார்த்திருப்பான்
நல் விருந்து வானத்தவர்க்கு" எனக் கூறுவது நாம் விருந்தோம்பலில் ஈடுபட வேண்டும் என்பதையே காட்டுகின்றது.

தன் மனையாள் என்று அறிந்திருந்தும்கூட அவள் கழுத்தை கத்திகொண்டு அரிய முற்பட்ட அரிச்சந்திரனது வாழ்க்கை வரலாறு சத்தியத்தின் மேன்மைக்காக உயிர் துறப்பது அற்ப செயல் என்பதனைக் காட்டுகின்றது. மேலும் இச்செயல்தான் "உண்மையே உயர்வு தரும்" என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றது எனலாம்.

நாடிழந்து நகரிழந்து கட்டிய மனை இழந்து கடைசியில் திரௌபதி மானபங்கப்படும் வரை பொறுமை காத்த தரும மகாராஜாவின் பொறுமை வியக்க வேண்டியுள்ளது.

"பொறுமை என்னும் நகையணிந்து பெருமை கொள்ள வேண்டும் பெண்கள்" என்பதெல்லாம் நாம் பொறுமை காக்க வேண்டும் என்பதனை புடம்போடுபவையே.

"உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யாதே", உப்பிட்டவரை உள்ளளவு நினை", அன்னமிட்டவர் வீட்டில் கன்னமிடாதே" என்பன நன்றி மறவாத நற்பண்பின் நல்வரிகள் இவை. எதிரிகளாக இருந்தாலும் தம்மைப் போற்றி வளர்த்த உயர் பண்பிற்காக இராவணனுக்காக கும்பகர்ணனும், துரியோதனனுக்காக கர்ணனும் உயிர் துறப்பது நன்றி செய்தோரை மறத்தலாகாது என்பதனைச் சுட்டுகின்றது.

"செஞ்சோற்றுக் கடனைத் தீர்ப்பதற்காக
கர்ணனும் கும்பகர்ணனுமே
தன்னுயிர் தனையே மாய்த்தனரே
உள்ளம் வருந்தி கதறுதே ஏ .... ஐயா
உயரிய மனிதரின் நிலை கண்டு - அந்த
உயரிய மனிதரின் நிலை கண்டு"

எனப் பாடுவது ஈண்டு நோக்கத்தக்கது.

இறுதியாக மறப்போம் - மன்னிப்போம் என்பவற்றிற்கிணங்க நடந்து முடிந்தவற்றை மறந்து நடப்பதனை நல்முறையில் ஏற்று இந்துவாகப் பிறந்த நாம் இந்துவாக வாழ்ந்து சமயப் பற்றுள்ளவனாகத் தவழ்ந்து சமூகப்பற்றுள்ளவனாக முகிழ்வதனை மதம் போதிக்கின்றது. ஆக நாங்கள் மனிதப் பண்புடையவர்களாக திகழ மதம் வழிகாட்டுகின்றது. இன்பமே சூழ்க. எல்லோரும் வாழ்க.

## குருபூஜை தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| மார்ச் 07 | மாசி 23 | சனி | திருவள்ளுவர் |
| மார்ச் 19 | பங்குனி 05 | வியாழன் | பரமகுருசுவாமி |
| மார்ச் 20 | பங்குனி 06 | வெள்ளி | குழந்தைவேற்சுவாமி |
| மார்ச் 22 | பங்குனி 08 | ஞாயிறு | செல்லப்பாசுவாமி |
| மார்ச் 27 | பங்குனி 13 | வெள்ளி | நல்லைக்குருமணி<br>ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்<br>தவத்திரு வே. முருகேசு சுவாமிகள் |
| மார்ச் 31 | பங்குனி 17 | செவ்வாய் | யோகர்சுவாமி |
| ஏப்ரல் 06 | பங்குனி 23 | செவ்வாய் | காரைக்காலம்மையார் |
| ஏப்ரல் 20 | சித்திரை 07 | திங்கள் | சிறுத்தொண்டர் |
| ஏப்ரல் 22 | சித்திரை 09 | புதன் | மங்கையற்கரசியார் |



# போற்றித் திருவகவல்

(தொடர்ச்சி...

## சகத்தினுற்பத்தி

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## நிலைமண்டிலவாசிரியப்பா

மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
(யாழ்ப்பாணம் - காரைநகர்)

இடைமரு துறையு மெந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணா மலையெம் மண்ணா போற்றி
கண்ணா ரமுதக் கடலே போற்றி
ஏகம் பத்துறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய போற்றி
பராய்த்துறை வேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி
குற்றா லத்தெங் கூத்தா போற்றி



**பதவுரை:-**

இடை மருது உறையும் எந்தாய் போற்றி- திருவிடைமருதூரில் எழுந்தருளியிருக்கும் எமது தந்தையே நினக்கு வணக்கம்; சடை இடை கங்கை தரித்தாய் போற்றி- திருச்சடையின் கண்ணே கங்கையினைத் தாங்கின வனே நினக்கு வணக்கம்; ஆரூர் அமர்ந்த அரசே போற்றி- திருவாரூரின்கண்ணே விரும்பி எழுந்தருளியிருக்கும் அரசனே நினக்கு வணக்கம்; சீர் ஆர் திருவை யாறா போற்றி- அழகு பொருந்திய திருவையாற்றில் எழுந்தருளியிருப்பவனே நினக்கு வணக்கம்; அண்ணாமலை எம் அண்ணா போற்றி- திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் எம் அண்ணா நினக்கு வணக்கம்; கண் ஆர் அமுத கடலே போற்றி- அறிவுக்கண்ணால் நுகரப்படும் அமுதக் கடலே நினக்கு வணக்கம்; ஏகம்பத்து உறை எந்தாய் போற்றி- காஞ்சிப்பதியிலே திருவேகம்பத்தில் எழுந்தருளியிருக்கும் எமது தந்தையே நினக்கு வணக்கம்; பாகம் பெண் உரு ஆனாய் போற்றி- இடப்பாகம் பெண் வடிவமானவனே நினக்கு வணக்கம்; பராய்த்துறை மேவிய பரனே போற்றி- திருப்பராய்த் துறையில் எழுந்தருளிய மேலோனே நினக்கு வணக்கம்; சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி- திருச்சிராப்பள்ளியில் எழுந்தருளிய சிவபெருமானே நினக்கு வணக்கம்; மற்றோர் பற்று இங்கு அறியேன் போற்றி- உன்னையொழிய வேறொரு பற்றுக்கோட்டினையும்

இவ்விடத்தே அறியேன் பெருமானே நினக்கு வணக்கம்; குற்றாலத்து எம் கூத்தா போற்றி- திருக்குற்றாலத்தில் எழுந்தருளியிருக்கும் எம் கூத்தப்பிரானே நினக்கு வணக்கம்.

இடை மருதுறையும் எந்தை- திருவிடைமருதூரில் எழுந்தருளியிருக்கும் எமது தந்தை. "அந்த இடை மருதில் ஆனந்தத் தேனிருந்த பொந்தை" (பூவல்லி 2) "இடைமருதே யிடங்கொண்ட அம்மானே" (ஏசறு 9) "இடை மருதினி லுறையு மீசனை" (தே நாவு 129.1) என வருவன காண்க. எந்தை- எம் தந்தை. "எந்தை தந்தை" (திவ். திருப்பல் 6) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. "என் தலைவனே" எனினுமாம்.

பகீரதன் பொருட்டு பெருக்கெடுத்து வந்த ஆகாய கங்கையை இறைவன் திருச்சடையில் தாங்கியமையின் "சடையிடைக் கங்கை தரித்தாய்" என்றார்.

ஆரூர் அமர்ந்த அரசு- திருவாரூரில் விரும்பி எழுந்தருளியிருக்கும் அரசு "ஆறணிவார்சடை யானாரூரினிதமர்ந்தான்" (ஞான 105:7) "ஆரூர் மூலட்டானத் தினிதமரும் பெருமானை" (நாவு 247:7) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. அமர்தல்- விரும்புதல். "ஆடலமர்ந்தாற் கரிதால்" (பு.வெ.மா. 236) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

சீரார் திருவையாறு- அழகு பொருந்திய திருவையாறு. இதனை,

"மான்பாய வயலருகே மரமேறி மந்திபாய் மடுக்கடோறும்
தேன்பாய மீன்பாயச் செங்கழுமல மொட்டலருந் திருவையாறே"
ஞான 130:4

"இஞ்சாய லிளந் தெங்கின் பழம்வீழ விளமேதி யிரிந்தங்கோடிச்
செஞ்சாலிக் கதிருழக்கிச் செழுங்கமல வயல்படியுந் திருவையாறே"
ஞான 130:8

"அன்னமலி பொழில்புடை சூழையாற்று" ஞான 130:11
"மல்லிகை மலருஞ் சோலைத் திருவையாறு" நாவு 39:7

என வருஉந் தேவாரப் பகுதிகளாலுமறிக. இது காவிரிக் கரைக்கணுள்ளதென்பது "அழகார்திரைக் காவிரிக்கோட்டத்தை யாறு" (தே.சுந். 77:4) என்பதனாலுமறியப்படும்.

சீர் என்பதற்குப் புகழ் செல்வம் சீர்மை என்னும் பொருள்களுமமையும். "ஒல்லுதல் கற்றண்டை ஒண்புகழழகு. செல்வஞ் சீர்மை சீரென்றாகும்" எனப் பிங்கலந்தையில் (பல்பொருட்) வருதலும் காண்க.

அண்ணாமலை- திருவண்ணாமலை. இது திருமாலும் பிரமனும் அளவாவண்ணம் இறைவன் அழலாய் நின்றமலை.

"விளவார் கனிபட நூறிய கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை கேடில்புக ழோனும்
அளவா வண மழலாகிய வண்ணாமலை"
ஞான 10:9.

"மறையினானொடு மாலவன் காண்கிலா.... அண்ணாமலை" நாவு 119:10.

எனத் தேவாரத்து வருவன காண்க. அண்ணா என்பதனை அண்ணால் என்பதன் கடைக்குறையாகக் கொண்டு பெருமையிற் சிறந்தோன் எனப் பொருள் கொள்க. "அண்ணாமலை யண்ணல்" (ஞான 10:3) "அண்ணாமலையுறையு மண்ணல்" (நாவு 237:5) என வருவன காண்க.

அமுதக்கடல் வாயாற் பருகப்படுவதாக, இறைவன் அறிவுக் கண்ணால் அறிந்தனுபவிக் கப்படும் அமுதக்கடலாய் இருத்தலின் "கண்ணாரமுதக் கடலே" என்றார். "கண்ணாரமுதமாய் நின்றான்" (திருவெம் 18) "மாலமுதப் பெருங்கடலே" (சத 26) என வருவன காண்க.

ஏகம்பம்- கச்சித் திருவேகம்பம். ஏகம்பம்- ஏகாம்ரம் என்னும் வட சொற்சிதைவு. ஏக+ஆரம்பம்= ஏகாம்பரம். ஏகம்- ஒன்று; ஆம்ரம்- மாமரம். காஞ்சிபுரத்தில் தலவிருட்சம் மாமரம்.

பாகம் பெண்ணுருவானாய் என்றது இறைவனது அர்த்தநாரீசுரர் வடிவத்தைக் குறித்தது. "பாகம் பெண்ணுருவமானார்" (நாவு 58:7) எனத் தேவாரத்து வருதலுங் காண்க.

பராய்த்துறை- திருப்பராய்த்துறை. இது காவிரிக்கரைக்கணுள்ளது. "பரப்புநீர்வரு காவிரித்தென்கரைத் திருப்பராய்த் துறை" என அப்பரடிகள் (தே. 144:1) அருளியமையுங் காண்க. மேவிய- பொருந்திய, எழுந்தருளிய. பரன்- மேலோன்.

சிராப்பள்ளி- திருச்சிராப்பள்ளி. "துறை மல்கு சாரற் சுனைமல்கு நீலத்திடை வைகிச், சிறைமல்கு வண்டுந் தும்பியும் பாடுஞ் சிராப்பள்ளி" (ஞான 98:4) என வருதல் காண்க. சிவன்- சிவபெருமான். "எவ்வுயிர்க்கும் எப்பொழுதும் நன்மையைச் செய்தலாற் சிவன்" என்னும் திருக்கோவையார் (358 பேர்) உரை ஈண்டறியற்பாலது.

இறைவனையன்றிப் பிறர் எவரையும் பற்றுக்கோடாகக் கருதாமையின் "மற்றோர் பற்று இங்கு அறியேன்" என்றார். ஐய நின்ன தல்ல தில்லை மற்றோர் பற்று" (சத 73) என அடிகள் பிறாண்டு அருளியவாறுங் காண்க. "மற்றொரு பற்றிலை நெஞ்சமே" என ஆளுடைய பிள்ளையாரும் (தே 282:6), "மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப் பாதமே மனம் பாவித்தேன்" என ஆளுடைய நம்பியும் (தே.சுந். 48:1) அருளியமை காண்க. பற்று- பற்றுக்கோடு. "பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர்" (குறள் 88) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

குற்றாலத்துக்கூத்தன்- திருக்குற்றாலத்தில் எழுந்தருளியிருக்கும் கூத்தன். "குற்றாலத் துறை கூத்தன்" குற்றாலத் தெங்கூத்தனை" குற்றாலத்தமர்ந்துறையுங் கூத்தன்" (நாவு 9:10; 15:7; 294:3) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

(தொடரும்...

## அடியார்கள் வினை அறுப்பவன்

ஆற்றங் கரை உறையும் ஆறுமுக வேலவனே
ஆறுபடை வீடுடைய ஆனந்தக் குருபரனே
வீறுகொண்டு பகைமுடித்த வெற்றிவேல் பெருமானே
கூறுமடியார் வினையறுக்கும் குக சரவணனே
சந்நிதியான் ஆச்சிரமச் சைவகலை பண்பாட்டு
ஞானச்சுடர் விளக்காய் நமக்கு அளித்தவனே
மோகனதாஸ் சுவாமிகளின் உள்ளத்தில் தானிருந்து
மாதமொரு நல்மலராய் மலர்ந்திட செய்தவனே
தோன்றாத் துணையாகி தொல்பொருளும் நீயாகி
தொண்டை மானாற்றங்கரை உறையும் தூயவனே
போற்றி உன்புகழ் பாடினோம் கேட்டிலையோ
தோன்றி நின்று காப்பாய் உன் பாதம் சரணமையா!

-சி. ஸ்ரீகந்தசாமி-

# அன்பின் மகத்துவம்

– திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள் –

அன்பில் அதி உன்னதமானது, உயர்ந்தது, தூய்மையானது, பிரதிபலன் கருதாதது, சுயநலமற்றது இறையன்பு. இறைவன் அன்பு மயமானவர். கருணையைப் பொழிவதால் கருணாமூர்த்தியென அழைக்கப்படுபவர். எல்லா உயிர்கள் மீதும் தயை கொண்டவராதலால் தயாளன் எனப் போற்றப்படுபவர். அவர் தான் படைத்த உயிர்கள் மேல் அன்பும் அக்கறையும் கொண்டு அவர்கள் வாழ்க்கைப் பயணத்தைச் சுகமாகவும் சீராகவும் அமைத்துத் தர அந்த இறைவனேயன்றி வேறு யாரால் முடியும்?

அந்தக் கருணாமூர்த்தியாகிய இறைவனிடம் எமது தேவைகளை வெளியிடும்போது நமக்கு விரும்பியவற்றைக் கேட்கின்றோம். சில உடனே கிடைக்கின்றது. கிடைக்கவில்லையெனில்; கடவுள் அன்பு காட்டவில்லை - கருணை காட்டவில்லை - பாரபட்சம் காட்டுகின்றார் என்றெல்லாம் குறை கூறுகின்றோம். கடவுளுக்குக் கண்ணில்லை, இரக்கமில்லை, வெறும் கல் என்றெல்லாம் தூற்றுகின்றோம். ஏன்? நாம் கடவுளின் அன்பின் மகத்துவத்தைப் புரிந்து கொள்ளாததுதான் காரணம்.

எமக்கு எதை எப்போது கொடுத்தால் நன்மை பயக்குமென அறிந்து அந்தந்த நேரத்தில் அதையதை அருள்பவர் இறைவன். தமது பிள்ளைகளுக்கு எப்போது எது தேவை என்பதை அக்கறையுடன் கவனித்து எந்நேரமும் கூட இருந்து கவனிக்கும் அம்மையப்பனாக இருக்கும் இறைவன் எமக்கு வேண்டாததைச் செய்து துன்பப்படுத்துவாரா?

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நமக்கு நல்லறிவாம் அமிர்தத்தை ஊட்டுபவர் அந்த இறைவன். உலகில் உயர்ந்தது தாயன்பு என்பதை யாவரும் அறிவர். ஆனால் அதையும்விட உயர்ந்தது கடவுளின் அன்பு. நமது கர்மவினையால் நாம் துன்பப்படுகின்றோமேயன்றி இறைவன் நம்மை ஒரு போதும் துன்பப்படுத்துவதில்லை. கர்மவினை போக்கியெம்மை நற்கதிக்கு ஆளாக்குவதே இறைவனின் தூய அன்பாகும்.

இத்தூய அன்பு கருணை எனப்படும். இது அறக்கருணை, மறக்கருணை என இரு வகைப்படும். தாய் தந்தையர் பிள்ளைகட்கு ஊட்டும் நல்லுணவும் அறவுரைகளும் அறக் கருணையாகும். நாம் நோய்வாய்ப்படும்போது இறைவன் மருத்துவராக இருந்து அளிக்கும் மருந்து கசப்பாக இருந்தாலும் அது நம் நோய் தீர்த்து நம்மைச் சுகப்படுத்துவதே யாகும், இது மறக்கருணையாகும்.

"நல்ல குருநாதன் நம்மை வருத்துவது
கொல்ல வல்ல கொல்ல வல்ல
பொல்லாப் பிணி போக்க"

என்பதை அறிந்து கொண்டால் எல்லாம் நன்மைக்கே என்பது புலனாகும். தாம் தாம் செய்து கொண்ட முன்வினையால் துன்பப்படுவோர்க்கு இறைவன் தரும் மருந்து அவரவர் நோய்க்கேற்ப வேறு வேறாக இருப்பது போலவே உலக வாழ்வில் நமக்குத் தரும் மருந்துகளும் சிகிச்சை முறைகளும் அமைகின்றது. உதாரணமாக சில நோய்களுக்குச் சாதாரண மருந்துகளும் சில நோய்களுக்கு ஊசிமூலம் மருந்துகளும் வேறு சில நோய்களுக்குச் சத்திர சிகிச்சையும் (அறுவைச் சிகிச்சை) தேவைப்படுகின்றது. இதைவிடச் சில நோயாளருக்கு அதிர்ச்சி வைத்தியமும் தேவைப்படுகின்றது. வாழ்க்கைக்கு உதவும் நல்லுணவு, உடை, நல்லறிவூட்டும் கல்வி, நல்ல நண்பர், நல்ல சுற்றம் என்பன எமது முன்செய் நல்வினையால் அமைவது. இது இறைவன் நமக்களிக்கும் வரமாகும்.

நோய் வறுமை தீயோர் சேர்க்கை வீண் விரயம் இவை முன் செய்த தீவினைப் பயனாகும். இதற்காக இறைவன் நமக்குச் செய்யும் சிகிச்சை தண்டனையாகத் தெரிகின்றது. எமது கர்ம வினைப்பயனே நோயாகவும் வேறு துன்பங்களாகவும் வந்தமைகின்றது. "நன்றும் தீதும் பிறர் தர வாரா" எனவே பிறரை நொந்து பயனில்லை. இறைவனே நம்மை இத்துன்பத்தினின்றும் மீட்க வல்லார். அத்தகைய எல்லாம் வல்ல இறைவனைப் பூரண நம்பிக்கையோடு சரணடைந்தால் நிச்சயம் நமக்குச் சுகம் உண்டாகும். சாதாரண மனித மருத்துவர்கள் தங்கள் கல்வி அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப சிகிச்சை மேற்கொண்டு தம்மால் முடியாத பட்சத்தில் இறைவன் செயல் என்று விட்டு விடுவர். இவ்வாறே மனித சக்தியும் புத்தியும் அறிவும் செயலிழக்கும்போது இதற்கும் மேலாக ஒரு சக்தி புலனாகின்றது. நம்மைப் படைத்தவர் - நமக்கு விதியை வகுத்துத் தந்தவர் காலில் வீழ்ந்து "கதி நீயே இனி எனக்குப் போக்கிடம் இல்லையென" இறுகப் பற்றிக் கொண்டால் அந்தக் கருணாமூர்த்தி நிச்சயம் நம் கண்ணீரைத் துடைத்து நம்மைச் சமாதானப்படுத்தி அவரது அன்பான சிகிச்சை முறையால் நிச்சயம் நம்மைக் குணப்படுத்துவார்.

எல்லா வினைகளையும் பொடியாக்கி மீண்டும் முளைக்கா வண்ணம் வேறுக்கும் சக்தி அந்த இறையன்புக்கு மட்டுமே உண்டு. சரணடைவோம் - சந்தோஷம் பெறுவோம்.

## சந்நிதிக் கந்தன்
## கழற்கோர் கவிமாலை - 61

**பல்லவி**

தெண்டனிட்டே பணிந்தேன் தேவ தேவா! – வந்து
தொண்டைமா னாறுறையும் தூமறை புகழ் பாதா!

**அநுபல்லவி**

கண்டநஞ் சணிசிவனார் கண்கன லுதிவேலா
அண்டகோ டிகட்கும்தாயா மணங்குமை கௌரிபாலா

**சரணம்**

தொண்டரோ டன்பரெல்லாம் தோத்தரித்தே பாடும்
வீண்டிடற் கரியதான வியனடி தொழுதுநின்றேன்
கொண்டபே ரன்பினாரின் குலதெய்வ மானகந்தா!
எண்டரு நிதியம்தன்னை இருநிலத் தருளாயோ?

கொண்டலிற் கரியகூந்தல் குறவள்ளி தெய்வியொடு
தண்டையும் சிலம்பும்வெள்ளிச் சதங்கையும் சலசலக்க
முண்டகப் பீடமதில் மிடுக்கொடு சுமந்துவந்தே
திண்டிறல் அருள்வாரிச் சேயெனைக் காவாயோ?
(தொண்)

-இராசையா குகதாசன்-

(தொடர்ச்சி...

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி



– வாரியார் சுவாமிகள் –



48. அறிவொன் றறநின் றறிவார் அறிவில்
பிறிவொன் றறநின்ற பிரான் அலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும் வேலவனே.

## பதவுரை

செறிவு ஒன்று அற வந்து- உலக பந்தபாசத்தில் நெருக்கமான உறவுகள் அற்றுப்போகும் நிலை வந்து, இருளே சிதைய- அதனால் மல இருள் முற்றிலும் வலி குன்றி ஒழியும்படி, வெறிவென்றவரோடு- மயக்கத்தை வென்ற சிவஞானிகளுடன், உறும் வேலவனே- பொருந்தி யிருக்கும் வேலாயுதரே! அறிவு ஒன்று அற- சீவபோதம் என்ற ஒன்று நீங்க, நின்று அறிவார் அறிவில்- சிவபோத நிலையில் அடங்கி அந்த அருட்காட்சியில் நின்று பதிஞானத்தால் உணர்கின்ற சிவஞானிகளது உள்ளுணர்வில், பிறிவு ஒன்று அற- பிரிதல் சிறிதும் இல்லாமல், நின்ற பிரான் அலையோ- கலந்து நின்ற பெருமான் நீரேயன்றோ? (ஞானவடிவாய் நின்ற நீர் அந்த ஞானத்தை அடியேனுக்கு அருளுவீராக)

## பொழிப்புரை

உலக பந்தபாசத்துடன் கலந்த உறவுகள் அற்றுப்போன அருள்நிலையில் வந்து, ஆணவமல இருள் முற்றிலும் நீங்கப் பெறுமாறு, மயக்கத்தை வென்ற ஞானிகளுடன் பொருந்தும் வேலாயுதக் கடவுளே! சீவபோதம் அற்ற நிலை வந்து, சிவபோதத்துள் அடங்கி அந்த அருள் நிலையில் நின்று மெய்யுணர்வால் அறிகின்ற சிவஞானிகளுடன் அத்துவிதமாகக் கலந்து நின்ற பெருமான் நீரேயாகும். அந்நிலையை அடியேனுக்கு அருளுவீராக.

## விரிவுரை

**அறிவொன்றற நின்றறிவார்:-**

தான் என்ற சீவபோதம் அற்று சிவபோதத்துள் அடங்கி மெய்யுணர்வால் அறிகின்ற சிவஞானிகள்.

**அறிவில் பிறிவொன்றற நின்ற பிரான்:-**

அத்தகைய சிவஞானிகளின் மெய்யுணர்வில் ஞான வடிவாய் முருகன் கலந்து நிற்கின்றான். கண்ணொளி கதிரொளியில் கலப்பதுபோல் ஞானிகளின் அறிவும் முருகனுடைய அருள் ஞானமும் ஒன்றிவிடுகின்றன. அத்துவிதமாகின்றன. பிரியான் என்ற சொல்லின் மரூஉ பிரான். பிரிவு என்ற சொல் பிறவு என எதுகை நோக்கி வந்தது.

*உனது கௌரவம் உனது நாக்கின் நுனியில் இருக்கிறது.*

**செறிவொன்றற வந்து:-**

செறி- கலப்பு. உலக பந்தபாசத் தொடர்பில் கலந்து நிற்கும் மாயநிலை. இந்தக் கலப்பு அற்ற அருள் நிலை கைவரப் பெற்று.

**இருளே சிதைய:-**

ஆணவ இருள் முற்றிலும் கெட்டொழிய.

**வெறிவென்றவரோடுறும் வேலவனே:-**

வெறி- பயித்தியத் தன்மை. இந்த மயக்கத்தை வென்ற சிவஞானிகளுடன் அத்துவிதமாக முருகன் கலந்து நின்று அருள் புரிகின்றான்.

"பாசம் ஒருவ" என்று சிவஞான போதம் 9ஆம் சூத்திரத்தில் வரும் கருத்தை இங்கு உன்னுக.

**கருத்துரை**

சீவபோதம் அற்ற சிவஞானிகளது அறிவில் கலந்து நின்ற வேலவனே! அந்நிலையை எனக்கும் அருள் செய். (தொடரும்...




*தேசிய இலக்கிய விழாவை முன்னிட்டு கலாச்சார அலுவல்கள் திணைக்களம் வலி. தென்மேற்கு நடாத்திய திறந்தவெளியரங்கக் காப்பிய கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்றமைக்காக திரு கலாபூஷணம் கலைமாமணி க. தெய்வேந்திரம் அவர்களுக்கு திருமதி உஷா சுபலிங்கம் வடமாகாண திணைக்களப் பணிப்பாளர் விருது வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்கள்.*

*இவர் எமது ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவைக்கு சிறு தொண்டு புரிந்து செயற்படுவதுடன் ஞானச்சுடருக்கு சுமார் பத்து ஆண்டுகளாக மோகன் சுவாமியின் வாய்மைக்கேற்ப கவிதை கட்டுரை ஆக்கமும் அளித்து வருகிறார். எனவே பேரவை சார்பில் வேலவனை வேண்டி வாழ்த்துகிறோம்.*

# யாழ்ப்பாணத்திலும் வள்ளலார் காட்டிய வழிபாட்டு நெறி

– திரு ச. லலீசன் அவர்கள் –

இராமலிங்க வள்ளலாரின் வழிபாட்டு நெறி தென்மராட்சி மீசாலை வேம்பிராய்ச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானகோட்டத்தில் முன்னெடுக் கப்படுகின்றது. கடந்த தைப்பூச நாளன்று (03.02.2015) பல நூற்றுக்கணக்கான அன்பர்கள் காலை மதியம் இரவு என ஜோதி தரிசனம் கண்டு பசியாற்றுவித்தல் செயற்பாடுகளிலும் பங்கேற்றுச் சென்றுள்ளனர். வள்ளலார் காட்டிய அருட்பெருஞ் சோதி வழிபாட்டில் பலரும் ஆர்வத்துடன் பங்கேற்கும் நிலையில் வள்ளலார் பற்றிய பதிவாகவும் இலங்கையில் அதன் செல் வாக்குக் குறித்த முன்வைப்பாகவும் இக்கட்டுரை அமைகின்றது.



05.10.1823இல் சிதம்பரத்திற்கு அருகில் உள்ள மரு தூரில் பிறந்த இராமலிங்க அடிகளாரே பின்னாளில் வள்ளலார் என உலகோரால் போற்றப்படலானார். கடவுளுக்கு உருவம் இல்லை என்றும் அவரே அருட்பெருஞ்சோதி என்றும் குறிப்பிடும் அவர் 30.01.1874இல் தைப்பூச நாளில் சோதியில் கலந்தார். பசியாற்றுவித்தலே உலகோர் செய்யக் கூடிய மிகப்பெரும் அறப்பணி எனக் குறிப்பிடும் வள்ளலார் 23.05.1867இல் தமிழகம் வடலூரில் தருமச் சாலை நிறுவி பசிப்பிணி அகற்றும் தருமத்தைத் தொடக்கினார். வடலூரில் உள்ள தருமச் சாலையில் மூன்று வேளையும் உணவு வழங்கி பசியாற்றுவிக்கும் செயற்பாடு தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது. தைப்பூச நாளில் இலட்சக்கணக்கானோர் வடலூரில் கூடி ஜோதி தரிசனம் மேற்கொள்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இலங்கையில் மீசாலையிலேயே வள்ளலார் வழியில் அமைக்கப்பட்ட வழிபாட்டிடம் முதன்முதலாக 2010இல் நிறுவப்பட்டது. சுவிஸ் நாட்டில் இருந்து இலங்கைக்கு வந்த அளவெட்டியைச் சேர்ந்தவரான கனகசபாபதி கேதீஸ்வரன் என்பவர் பல இலட்ச ரூபாக்களைச் செலவிட்டு பிரமாண்டமாக சத்தியஞான கோட்டத்தை அமைத்துள்ளார். இவர் தற்போது தென்மராட்சி கல்வயலில் வாழ்கின்றார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் - வள்ளலார் பாடல்களை மறுத்து அவை மருட்பாக்கள் என வழக்குத் தொடர்ந்தது வரலாறு. நாவலர் மீதிருந்த பக்தியினால் இலங்கையில் வள்ளலார் சிந்தனைகள் இன்று வரை செல்வாக்குப் பெறவில்லையாயினும் உலகளாவிய நிலையில் வள்ளலாரின் சிந்தனைகள் பலரையும் கவர்ந்து வருகின்றன. இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் சிந்தனைப் புலத்தில் ஏற்பட்டுள்ள திசைமாற்றமோ? என எண்ணத் தோன்றுகின்றது.

வள்ளலார், தன் வாழ்வில் பெரும்பகுதியைச் சென்னையில் கழித்தவர். தீவிர இந்துவான இவர் திருவாசகம் மற்றும் திருமுறைகளை நன்கு படித்தவர். இந்து சமயத்தில் உள்ள

குறைகளைக் கண்டு தீர்வு காண முயன்றார். வேறு சமயங்களில் உள்ள நல்ல அம்சங்களை இந்து சமயத்திற்குள் கொண்டு வரவேண்டும் எனக் கருதினார். இந்து சமயத்திற்கெனப் பல சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார். இதனால் பலத்த எதிர்ப்புக்களையும் சந்தித்தார்.

**இராமலிங்க அடிகள் கொள்கைகள்**

- கடவுள் ஒருவரே. அவர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர்.
- புலால் உணவு உண்ணக்கூடாது.
- எந்த உயிரையும் கொல்லக்கூடாது.
- சாதி, மதம், இனம், மொழி முதலிய வேறுபாடு கூடாது.
- இறந்தவர்களை எரிக்கக் கூடாது. சமாதி வைத்தல் வேண்டும்.
- எதிலும் பொது நோக்கம் வேண்டும்.
- பசித்தவர்களுக்கு சாதி, மதம், இனம், மொழி முதலிய வேறுபாடு கருதாது உணவளித்தல் வேண்டும்.
- சிறு தெய்வ வழிபாடு கூடாது. அவற்றின் பெயரால் பலி இடுதலும் கூடாது.
- எல்லா உயிர்களும் நமக்கு உறவுகளே. அவற்றைத் துன்புறுத்தக்கூடாது.
- மத வெறி கூடாது .

வள்ளலார் பாடிய ஆறாயிரம் பாடல்களின் தொகுப்பு திருவருட்பா என அழைக்கப்படுகின்றது. சைவ சமயத்தில் சீர்திருத்தம் ஏற்படுத்தப்பட வேண்டும் என நினைத்த வள்ளலாரின் திருவருட் பாவை நம்நாட்டைச் சேர்ந்த ஆறுமுகநாவலர், சதாவதானி கதிரைவேற்பிள்ளை போன்ற பழைமை வாதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. திருவருட்பாவிற்கு எதிராக கண்டன நூல்களை அவர்கள் வெளியிட்டனர். இக்கண்டன நூல்களுக்கு எதிரான பல கண்டன நூல்களும் அக் காலத்தில் எழுந்திருந்தன.

**மதம் என்பது பேயாகுமா?**

பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும் எனப் பாடுகின்றார் வள்ளலார். இதை அடிப்படையாக வைத்து மதத்தைப் பேய் என வள்ளலார் குறித்து விட்டார் எனக் குறைப்பட்டுக்கொள்வோர் உள்ளனர்.

மதம் என்பதை பேய் என வள்ளலார் குறித்தாரா? வள்ளலாரின் தெய்வமணிமாலை என்ற பிரபலமான துதிப்பாடலிலேயே இந்தக் குழப்பம். இங்கு வள்ளலார் குறிப்பிடும் மதம் என்ற சொல்லின் பொருள் ஆணவம் அல்லது கொழுப்பு என்பதாகும்.

வாய்க்கொழுப்பு என்பதை குற்றாலக் குறவஞ்சி "வாய்மதமோ வித்தை மதமோ" எனக் குறிப்பதாக தமிழக அறிஞரான ஜடாயு குறிப்பிடுகின்றார். காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்பவற்றை ஆறு பகைவர்களாக உருவகிப்பர்.

இனி தெய்வமணிமாலையில் வருகின்ற நம் எல்லோர் மத்தியிலும் பிரபலமான பாடலை யும் அதன் சுருக்கப் பொருளையும் காண்போம்.

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும் (சத்சங்கம்)

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும் (தீநட்பு விலக்கல்)

பெருமை பெறு நினது புகழ் பேசவேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும் (நல்லொழுக்கம்)

பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான பேய்
பிடியாதிருக்க வேண்டும் (மதம் அறுதல்)

மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும் உனை
மறவாதிருக்க வேண்டும் (காமம் அறுதல்)

மதிவேண்டும் நின் கருணை நிதி வேண்டும் நோயற்ற
வாழ்வு நான் வாழவேண்டும் (லோபம் அறுதல்)

தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள் வளர்
தலமோங்கு கந்தவேளே

தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. (தெய்வ வணக்கம்)

நாவலர் மண்ணில் வள்ளலார் பற்றிய சிந்தனைகள் விரிவது மக்கள் சிந்தனையின் விரிவுத்திறனே அன்றி வேறொன்றில்லை.

இருப்பினும் யாழ்ப்பாண மக்கள் வள்ளலார் குறித்த தெளிவான பார்வையில் இருப்பதாகத் தெரியவில்லை.

நாவலரை எதிர்க்கும் - நாவலர் குறிப்பிட்ட சாதியம் சார்ந்த நடைமுறைகளைக் கண்டிக்கும் பலர் வள்ளலாரின் சிந்தனைகளை உயர்த்திப் பேசுவதை இக்கட்டுரையாளரால் அவதானிக்க முடிந்தது. இருப்பினும் வள்ளலார் குறிப்பிட்ட அருட்பெருஞ்சோதி வழிபாடு, புலால் மறுத்தல், இறந்தவர்களை எரிக்காது சமாதி வைத்தல் முதலிய செயற்பாடுகளை தொடர்சியாக மேற்கொள்வதற்குத் தயாரான நிலையில் எத்தனை பேர் இங்குள்ளனர் என்பதும் கேள்விக்குரியதே?

பசுவின் பாலிலிருந்து தயிர், தயிரிலிருந்து மோர், மோரிலிருந்து வெண்ணெய், வெண்ணெயிலிருந்து நெய் என்று எத்தனை வகை வகையாக நாம் பிரித்தெடுக்கிறோம். அதுபோல ஆழ்ந்த அனுபவம், அன்றாடப் பிரார்த்தனை, கருணை, மற்றவர்களுக்கு உதவுதல், எல்லோரையும் வித்தியாசமின்றிப் பார்த்தல், பழகுதல் இவற்றை நம் வாழ்வில் கைக்கொண்டு நடந்தால், பாலுக்குள்ளே மறைந்து கிடக்கும் நெய்யைப் போல பகவான் உங்கள் அத்தனை பேர் மனதிலும் உறைந்து கிடப்பது தெரியும்.

(தொடர்ச்சி...

# சைவநெறி

# 05.12.2014 அன்று சந்நிதியான் ஆச்சிரமத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் எழுத்து வடிவம்

– திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

**02. சைவநெறி என்ற தொடரின் விளக்கம்**

சைவநெறி என்ற தொடரில் இரண்டு வார்த்தைகள் உண்டு. ஒன்று, சைவம். இரண்டாவது நெறி. தமிழ் இலக்கியத்தில் சைவம், சைவவாதி என்ற சொற்களை முதலில், சங்க இலக்கியங்களில் காண முடியாது. ஐந்திணையிலே சிவனுக்கு இடமில்லை. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும்தான் முதன்முதல் சைவன், சைவவாதி என்ற வார்த்தைகள் வருகின்றன. இந்த இடத்தில் யார் சைவன்? என்ற ஒரு பிரச்சினையை யாழ்ப்பாணத்தில் ஒரு சமயம் கலாநிதி சி. பண்டிதமணி அவர்கள் எழுப்பியிருந்தார்கள் என்றும் சபையிலிருந்தவர்கள் கூறிய அத்தனை விடைகளையும் அவர் நிராகரித்துக் கொண்டு வந்தார் என்றும் அதனால் நீண்ட நேரத்தின்பின் சபையிலுள்ள ஒருவர் பொறுமையிழந்தவராய் "நீங்கள் யாரை சைவன் என்று கருதுகின்றீர்கள்" என்று திருப்பிக் கேட்டார்.

இதற்கிடையில் கலாநிதி பண்டிதமணி அவர்களை பேராசிரியர் மயில்வாகனம் அவர்கள் ஈழத்து சோக்கிரட்டீஸ் என்று குறிப்பிட்டதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். ஏனென்றால் யார் சைவன் என்ற கேள்வியிலும் பண்டிதமணி அவர்கள் சோக்கிரட்டீசினுடைய வழியையே பின்பற்றியிருந்தார்கள். அந்த முறை என்ன என்று சோக்கிரட்டீசே ஒரு தடவை சொல்லியிருக்கிறார். சோக்கிரட்டீஸ் இளைஞர்களைத் தனது போதனையால் கெடுக்கின்றார் என்று அவரது எதிரிகள் அவர்மீது வழக்குத் தொடுத்திருந்தார்கள். வழக்கினை நீதிமன்றம் விசாரித்தபோது நீதிபதி சோக்கிரட்டீசிடம் நீ இளைஞர்களை உனது போதனையால் கெடுக்கின்றாய் என்று வழக்கு வந்திருக்கிறது; உனது பதில் என்ன என்று சோக்கிரட்டீசிடம் கேட்டார். அதற்கு அவர் சொன்ன பதிலை ஆங்கிலத்திலே முதலில் கூறுகின்றேன். By Asking Questions I Put Their House In Order. I never Taught Them. மீண்டும் மீண்டும் வினாக்களை மட்டுமே கேட்டு அவர்களது சிந்தனையை ஒழுங்குபடுத்தினேனே தவிர ஒருபோதும் நான் அவர்களுக்கு எதனையும் போதிக்கவில்லை. இந்த வழியும் கலாநிதி பண்டிதமணியின் வழியும் ஒன்றே.

அதேபோல பண்டிதமணி அந்தப் பொறுமை இழந்தவருக்கு ஒரு சமயம் ஆபிரகாம் லிங்கன் சைவனாக இருந்திருக்கக் கூடும்" என்று பதிலைக் கூறித் தனது உரையை முடித்தார். இதனை எனக்குக் கூறியவர் பொறியியல் பீடத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் திரு சண்முகரத்தினம் ஆகும்.

இந்த விடை என்னை மேலும் சிந்திக்க வைத்தது; அவர் ஏன் அப்படிக் கூறியிருந்தார் என்று. அதற்கான விடை ஆபிரகாம் லிங்கன் வரலாற்றில் இருந்தது. அக்காலத்தில் அமெரிக்க இந்தியர்களான அந்நிலத்தின் சொந்தக்காரர்களை அடிமைகளாக அங்கு குடியேறிய ஐரோப்பியர்கள் நடாத்தினார்கள். ஓர் அடிமையைத் தூணோடு கட்டி அடிப்பதையும் அந்த அடிமை துன்பத்தால் அலறுவதையும் லிங்கன் பார்க்க நேர்ந்தது. லிங்கனை அச்சம்பவம் மனம் இளகச் செய்துவிட்டது. லிங்கன் அந்த

அடிமைகளுக்குச் சுதந்திரம் பெறக் கடுமை யாகப் போராடி வெற்றிகண்டவர். அவரது கருணையைக் குறிப்பிடவே அது சைவத் திலுள்ள முதல் பரிமாணம் என்பதால் பண்டித மணி அந்த விடையைக் கூறினார் என்று தெளிந்தேன்.

"நாங்கள், இன்று கார்த்திகை விளக் கீடு ஆதலால் சைவம்" என்று சொல்வதைக் கேட்டிருப்பீர்கள். இலங்கையிலும் சரி, அல் லது வேறெந்த நாட்டிலும் சரி கிறிஸ்தவ சாப்பாட்டுக்கடை, பௌத்த சாப்பாட்டுக்கடை என்று பார்த்திருக்கின்றீர்களா? கண்டியிலே சைவன் என்றால் மற்ற சமயத்தவர்கள் சிலர் அது இட்லி தோசை சமயம் என்று கூறுவதை நான் கேட்டிருக்கின்றேன். அவர்களுக்கு இந்து சமயம், வேதாந்தம் தெரிந்திருந்ததையும் அவ தானித்தேன். இதைவிட சைவம் என்றதும் காருண்யம், இரக்கம், தயை, அருள் என்ற விடயங்கள்தான் அதிலிருந்து முதலில் நாம் அறிந்து கொள்ளலாம். சாக்கிய நாயனார் புராண இறுதியில் வழக்கம்போல C.K. சுப்பிரமணிய முதலியார் அப்புராணத்தின் சாரமாகப் 14 விடயங்களைத் தொகுத்துத் தருகின்றார். அதில் முதலாவதாக இடம்பெறுவது இந்தக் கருணை, காருண்யம் என்ற விடயம்தான்.

இப்போது எனக்கு ஒரு சம்பவம் ஞாப கம் வருகிறது. ஒரு தடவை பல ஆண்டு களுக்குமுன் வானொலியில் திரு நடராசா என்பவர் பேசியது. அவர் தனது நேரடி அனு பவம் என்று ஒரு கதை கூறினார். அந்தப் பேச்சில் ஒரு மாட்டுவண்டியில் அளவுக்கு அதிகமான பாரத்தை ஏற்றிவிட்டு இரண்டு மாடுகளைப் பூட்டி அதனை ஒருவர் செலுத்த ஆரம்பித்தார். மாடுகள் இரண்டும் கடுமையாக முயற்சித்தும் அவற்றால் முடியவில்லை. வண்டி ஓட்டி மூர்க்கத்தனமாக அவற்றைத் துவரங் கட்டையால் அடி அடி என்று அடித்தார். அப் போதும் அவற்றால் முடியவில்லை. ஆனால் அவர் அடியை மோசமாய் நடத்தினார். நட ராசாவுக்கு மாடுகள் பாவம் என்ற இரக்கம் அவனுக்கு அதைச் சொன்னால் தனக்கும் அடிப்பானோ என்று; நான் எண்ணினார். ஒரு மாடு நுகத்துக் கயிறை அறுத்துவிட்டு அடி தாங்காமல் வெளியேறியது அவர் அதைப் பிடிக்கச் சென்றார். மாடு அவரைத் தூக்கி எறிந்து குத்தியது. நடராசாவுக்கு இப்போ வண்டியோட்டியின்மீது கருணை. அவர் போய் விடுவிக்கவும் பயம். ஆனால் வண்டிஓட்டி மாட் டைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டார். உடனே மாடு விலகிப்போனது. மாட்டுக்கா, மனிதனுக்கா கருணை கூட? கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும் என்றார் வள்ளுவர்.

எனவே சைவம் என்ற வார்த்தையின் பொருள் என்ன என்றதும் அருள், கருணை என்ற முதலாவது பரிமாணத்தைப் பற்றிச் சிந்திக்கின்றோம். "அருள் என்னும் அன்பு ஈன்குழவி" என்பது வள்ளுவர் வாக்கு. அன்பு பெற்றெடுத்த பிள்ளை அருள் என்பது அதன் கருத்து. அன்பு உறவினர், தெரிந்தவர் என்ப வரிடத்திலே ஒருவருக்கு ஏற்படுவது. அது மனித உறவிலே ஒரு வகை என்று கூறலாம். அப்படியான எல்லாவகை உறவுகளும் சேர்ந் ததுதான் வாழ்க்கை. அன்பு செய்யும்போது, அன்பு செலுத்தும்போது அதில் ஓர் எதிர்பார்ப்பு இருக்கும். தாய் அன்பு மிகமிக உயர்ந்தது. அந்தத் தாய் தனது பிள்ளைக்காக எவ்வளவு தியாகங்களைச் செய்கின்றாள். ஆனால் அவ் வளவு தியாகங்களையும் வேறொரு பிள்ளைக் குச் செய்வாளா? அதிலிருந்தே அங்கு எனது என்ற எண்ணம் கொண்டுதான் அவள் அப்படிச் செய்கிறாள் என்று அறியலாம். அந்த எனது என்றதில்த்தான் அவ்வளவு தியாகத்துக்கும் பின்னால் ஒரு எதிர்பார்ப்பும் இருக்கிறது. ஆனாலும் அன்பு என்ற உறவு மிகப் பெரியது. அதனால்த்தான் வள்ளுவர் "அன்பின் வழியது உயிர்நிலை" என்றார். அந்த அன்பு எண்ண மிலா அன்பாக மாறுவது பற்றி சென்ற

தடவை சிந்தித்தோம். ஓர் ஆங்கிலக் கவிஞ னுடைய கவிதை வரிகள் இது தொடர்பாக இங்கே சிந்திக்கத்தக்கது. அவன் கூறுகின் றான் "நான் கடவுளை நீண்டகாலம் தேடி னேன், அவனை என்னால் காணமுடிய வில்லை. ஆன்மாவை நீண்டகாலம் தேடினேன். அதனையும் என்னால் காணமுடியவில்லை. ஆனால் பின் அயலவனைத் தேடினேன். அப் போது அயலவனைக் கண்டேன்; ஆன்மாவைக் கண்டேன்; கடவுளையும் கண்டேன்" என்று இங்கே அன்பு அருளாக மாறுவது ஓரளவு காட்டப்படுகிறது.

அருள் என்ற வார்த்தையைத் திரு வள்ளுவர் பெரும்பாலும் அருளுடைமை, கொல்லாமை என்ற இரண்டு அதிகாரத்திலுமே கையாண்டிருக்கின்றார். அங்கெல்லாம் கருணை, இரக்கம், தயை என்ற கருத்தில்த்தான் எடுத் தாண்டிருக்கின்றார்.

திருக்குறளுக்கும் முந்தியதாகக் கருதப் படும் தொல்காப்பியமும் அருள்பற்றிக் கூறு கிறது. தொல்காப்பியத்தின் பொருளதிகாரத் தில் வருகிறது. அது 75ஆவது சூத்திரம். பொருளதிகாரம் புறத்திணை இயலில் வரு வது. "அருளொடு புணர்ந்த அகற்சியானும்" என்ற வரிதான் அது. இளம் பூரணர் என்ற உரையாசிரியர் அதற்கு "அருளோடு புணர்ந்த துறவு" என்று பொருள் கூறுவார். அருள் என் பதற்கு விளக்கம் அளிக்குமிடத்து "அருளு டைமையாவது யாதானும் ஓர் உயிர் இடர்ப் படுமிடத்து தன்னுயிர் வருந்தினாற்போல வருந்தும் ஈரம் உடைமை" என்று கூறுவார். அவர் அகற்சி என்பதைத் துறவு என்ற கருத்தோடு நிறுத்திவிட்டார். அகன்றது, மிகப் பரந்தது என்ற பொருளும் அகற்சிக்கு உண்டு. அருள் மிகப் பரந்தது என்ற கருத்து சிறப்பாய் இருக்கும்.

முன்னர் குறிப்பிட்டேன் இந்த அருள் என்ற விடயம் எல்லாச் சமயங்களிலும் காணக்கூடியது என்று. அதாவது, "நீ மற்ற வர்கள் உனக்கு என்ன செய்யக்கூடாது என்று விரும்புகின்றாயோ அதனை நீ முதலில் மற்ற வர்களுக்குச் செய்யாதே" என்பது. உதாரண மாக பௌத்தம் அருள், காருண்யம் என் பதைக் கூறுவதை இங்கு எடுத்துக்கொள் வோம். வைஷ்ணவர்கள் பரமாத்மா எடுத்த 10 அவதாரங்களைப் பற்றிப் பேசுவார்கள். அது "தசாவதாரம்" என்று அழைக்கப்படும். ஜயதேவரின் கீதகோவிந்தம், வியாசருடைய பாகவத புராணம் என்பவற்றில் தசாவதாரத் தில் ஒரு அவதாரம் புத்தருடைய அவதாரம் எனப்படும். ஜயதேவர் கீதகோவிந்தத்திலே தசாவதாரம் பற்றிய விடயத்தை விரிவாக முதலில் கூறுவார். அப்படியான முதலாவது அஷ்டபதி சரணங்களை கூறியபின் இரண்டா வது அஷ்டபதி ஆரம்பத்தில்

"வேதான் உத்தரதே ஜகன்திவகதே பூகோளம் உத்பிரதே
தைத்யம் தாரயதே பலிம்சலயதே ஷத்ரஷயம் குர்வதே
பௌலஸ்த்யம் ஜயதேஹலம் கலயதேகாருண்யம் ஆதன்வதே
ம்லேச்சான் மூர்ச்சயதே தசாக்கிருதிக்ருதே க்ருஷ்யாய துப்யம் நமக"

என்ற துதியைத் தருகின்றார்.

இங்கு பரந்தாமன் "காருண்யம் ஆதன் வதே" அதாவது காருண்யத்தைப் பரப்புவதற் காக புத்தராக அவதரித்தான் என்கிறார் ஜய தேவர்.

சைவத்திலும் உள்ள இந்த விட யத்தை முதலில் முழுமையாக ஒரு சைவன் நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும். வாழ்க் கையின் ஒவ்வொரு கணத்திலும் அதனைக் கடைப்பிடித்து வாழவேண்டும். அப்படி வாழ முயற்சிசெய்யும்போது நீங்கள் ஓர் உண்மை யைக் கண்டுகொள்வீர்கள். மீண்டும் மீண்டும் கடினமான சோதனையை நீங்கள் எதிர்

கொள்ள நேரிடும். பல தடவை தோல்வி போவீர்கள். அந்தத் தோல்விகளில் இருந்து தான் நல்ல படிப்பினைகளைக் கற்றுக் கொள்வீர்கள். அந்த ஒன்றையாவது இந்த வாழ்க்கையில் வெற்றிகொள்ள முடியுமாயின் நீங்கள் சாதனையாளர்களே; செயற்கரிய செய்த பெரியவர்களே. அப்படிச் சோதனைகள் வர நாம் தோல்விபோய் ஒரு கட்டத்தில் பேச்சளவில் காருண்யம் அருள் உயர்ந்தது என்று சொல்லிக்கொள்வோமே தவிர அதன் உண்மையை நடைமுறைப்படுத்தி உணர்ந்து கொள்ளாமல் போவீர்கள். விடாது முயற்சி செய்ய முதலில் முயலுங்கள்.

நாம் இறைவனுடைய அருள் கிடைக்க வேண்டும் என்றுதான் முதலில் எண்ணுகின்றோமே தவிர அது நாம் நடைமுறையில் வாழ்க்கையில் சேகரித்துக்கொள்ள வேண்டிய விடயம் என்பதை எண்ணுவதில்லை. அருள் இறைவன் தருவது; அருளது சக்தியாகும்; அது உமையம்மை திருவடி என்று கோட்பாடுகளை பாடிக்கொண்டு வாழ்க்கையைக் கடத்துகின்றோம். அவற்றிலுள்ள உண்மைகளைக் கடைப்பிடித்து மெய்ப்பிப்பதில்லை. இதனால்த் தான் வேத பாடசாலைகளை இந்தியாவில் மட்டுமல்ல மற்ற நாடுகளிலும் நிறுவி நடாத்தி வரும் சுவாமி தயானந்த சரஸ்வதி ஒரு தடவை அருள்பற்றிக் குறிப்பிடுமிடத்து Grace Must Be Earned By You. Not Given By Any Body என்றார். அருளை நீங்கள் உழைத்துக் கொள்ள வேண்டுமே தவிர யாராலும் தரப்படுவதில்லை என்றார். அதனைக் கடைப்பிடிக்கும் போது வரும் சோதனைகளிலிருந்து படிப்பினைகளைப் பெற்று அதனைக் கொஞ்சம் கொஞ்சமாக உழைத்துச் சேகரிக்க வேண்டும். அதனைச் சேக்கிழார் தனது சாக்கிய நாயனார் புராணத்தின் ஒரு பாடலில் ஈசன் அருள்கூட என்ற தொடரில் வைத்துக் காட்டுகிறார். கூட என்றால் கொஞ்சம், கொஞ்சமாக மேலும் அதிகரிப்பது என்று பொருள். அப்படி அது கூடிக்கூடி வரும்போது ஒரு கட்டத்தில் உன்னிடமுள்ள தெய்வத் தன்மையை வெளிப்படுத்தும். இதனைத்தான் விவேகானந்தர் சமயம் என்றால் என்ன என்று கூறும்போது விளக்கினார். முன்கூட்டியே உன்னிடமுள்ள பூரணத் தன்மையை வெளிக்கொண்டுவருவது சமயம் என்றார். கோவில்களும், கிரியைகளும், தத்துவங்களும் வெறும் படிக்கற்களே. அவை முக்கியமில்லை. எவ்வழியிலும் அந்தப் பூரணத்துவத்தை வெளிக்கொண்டு வரவேண்டும். அதுதான் சமயத்திலுள்ள முக்கியம் என்றார். அந்த நிலையை அடைந்த ஞானிகளை எல்லா நாடுகளிலும் எல்லாச் சமயங்களிலும் காணலாம். அதைச் சைவத்திலும் காணலாம்.

(தொடரும்...

## மண் வாழ்வை நிலை என்று நம்பிடாதே மனமே

கண்மூடி நினைக்க முருகன்
உருவம் கண்ணில் தெரியுதே
பண்ணோ டிசை பாடக் கந்தன்
அருமை மனதில் தெரியுதே
விண்ணேகும் வாழ்வின் முடிவில்
வழியும் ஒன்று தெரியுதே
மண்மீது வாழ்விது பொய்
மாயம் என்று புரியுதே.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

# வாழ்வில் புராணம்

– திரு S.குணாகரன் அவர்கள் –

நமது நாட்டில் பல புராணங்கள் மக்கள் மனத்தை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக கவர்ந்திருக்கின்றன. இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம் போன்ற கதைகளைக் காலத்துக்குக் காலம் பலர் படித்திருக்கின்றனர். மேலும் மாலையிலோ, இரவிலோ கற்றவர் ஒருவர் வாசித்து விளக்க கூட்டங்கூட்டமாக மக்கள் சூழ்ந்து கேட்டிருக்கின்றனர். இன்றும் கூட இப்புராண இதிகாசங்கள் பற்றி நமது சமய பிரசாரர்கள் கூறுவதை பல இடங்களில் கேட்கின்றோம்.

இற்றைவரை புராணங்களைக் கேட்குமாறு தூண்டிக்கொண்டிருப்பது அவற்றின் புனிதத்துவமே. இராமாயணம் திருமாலுடைய வேறொரு அவதாரமான இராம சரித்திரத்தையும் மகாபாரதம் திருமாலின் வேறொரு அவதாரமான கிருஷ்ணருடைய சரித்திரத்தையும் கந்தபுராணம் முருகனுக்கும் சூரனுக்கும் இடையே நடைபெற்ற சம்பவங்களையும் கூறுகின்றது. தெய்வ சரித்திரங்களைக் கேட்டால் மகத்தான நற்பலன் உண்டு என்ற நம்பிக்கையில் மக்கள் பக்தியுடன் திரண்டு அவற்றுக்குச் செவி சாய்த்தனர்.

ஆனால் தற்கால நிலையில் அப்போக்கு மிகத் துரிதமாக மாறி வருகிறது. சமீப காலம் வரையில் மக்கள் புராணங்களில் என்ன என்ன கூறப்பட்டிருந்த போதிலும் அவற்றை ஆட்சேபிக்காமல் ஏற்று வந்தார்கள். ஆனால் வளர்ந்து வரும் நாகரீக உலகில் புராணங்களைக் கூடப் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்க்கும் மனப்பான்மை பரவி வருகிறது. இத்தகைய தன்மை கற்றோருடன் நின்றுவிடவில்லை. எழுத்து வாசனையற்ற சாதாரண மக்களிடையே கூட வியப்புக்குரிய வேகத்துடன் பரவி வருகிறது. இவ் ஆராய்ச்சி மனப்பான்மையை நாம் வரவேற்க வேண்டுமேயொழியக் கண்டிக்கவோ, நிந்திக்கவோ கூடாது. நம்பிக்கை நிலையிலிருந்து பகுத்தறியும் நிலைக்கு நாம் வருவது இயற்கையான இயல்பு. சிறு குழந்தைக்கு "ஒரே ஊரில் இரண்டு தலையுள்ள ஓர் அரக்கன் வசித்தான்" என்று ஒரு கதையைத் துவங்கினால் அக்குழந்தை அக்கதையை ஆர்வத்துடன் கேட்கிறது. அதே குழந்தை வளர்ந்தபின் அக்கதை இயற்கைக்கு முரணாயுள்ளதால் அதைப் பெரிதுபடுத்துவதில்லை. இது போற்றத்தக்க வளர்ச்சியே. ஏனெனில் இதே பகுத்தறிவின்மூலம் அவன் வாழ்வில் முன்னேற்றம் அடைகின்றான். தனி மனிதன் வளரும் போக்கிலேயே மனித சமூகங்களும் வளருகின்றன. சென்ற காலங்களில் சமயத்தைப் பொறுத்த அளவில் பல கதைகளை ஆட்சேபிக்காமல் நம்பி வந்தனர். ஆனால் தற்கால நிலையில் விஞ்ஞான வளர்ச்சி மக்களின் பகுத்தறிவை வளர்க்கவே மக்கள் அத்தகைய வரலாறுகளை நம்புவதில்லை.

இப்பகுத்தறிவுடன் மக்கள் புராணங்களை ஆராயும்போது பல ஐயங்கள் இயற்கையாக எழுகின்றன. உதாரணமாக இராமாயணத்தில் இராவணன் பத்துத் தலையுடையவன் என்பதும் அரக்கர், வானரர் செய்யும் அசாதாரணச் செயல்கள் முதலியன உண்மையில் நிகழ்ந்திருக்க முடியுமா எனும் ஐயம் எழுகிறது. மகாபாரதத்திலும், கந்தபுராணத்திலும் இத்தகைய அரியபல செயல்களைச் செய்யும் வரலாறு இருக்கின்றது. எப்போது ஒரு வரலாற்றின் ஒருபகுதி உண்மைக்குப் பொருந்தியதில்லை என்ற உணர்ச்சி ஏற்படுகின்றதோ,

அக்கணமே அவ்விடயத்தில் சிரத்தை இல்லாமல் போய்விடும்.

இம்மாதிரி புராணங்களின் பல பகுதிகளைப் பற்றிய சரித்திர உண்மை சிலரால் சந்தேகிக்கப்பட்டும், சிலரால் வன்மையாகப் புறக்கணிக்கப்பட்டும் வரும்பொழுது புராணங்கள் முற்றிலும் மதிப்பு இழந்து விடுகின்றனவா என்றால், இழக்கவில்லையென்றே கூறலாம். புராணங்களின் சிறந்த பொக்கிஷம் அவற்றில் நிறைந்து கிடக்கும் அரிய கருத்துக்களே. மானிட வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாக விளங்குகின்றன. அத்துடன் நற்கதியடையும் பொருட்டு சில நன்நெறிகளைக் கடைப்பிடிக்கவும் வழி வகுக்கின்றது. இவ்வகை நன்நெறிகள் எக்காலத்துக்கும் பொருத்தமானவை. காலத்தினால் அவை மாறுபடா. அந்நெறிகளோடு சில எண்ணங்களும், உணர்ச்சிகளும் மனிதனை உய்விக்கின்றன. அந்நெறிகள், எண்ணங்கள் எல்லாம் உண்மையாக சரித்திர வாயிலாக விளக்கப்பட்டாலும், கட்டுக்கதை மூலம் விளக்கப்பட்டாலும் அவற்றின் பெருமையும் பயனும் குன்றா. இதை நாம் எந்த நாட்டு இலக்கியத்துறையிலும் காணுகின்றோம். இலக்கியங்களில் உள்ள கதைகளில் கற்பனை கலந்திருந்தாலும் அவற்றின்மூலமாக கவிஞன் விளக்கியுள்ள எண்ணங்கள், அதனுட் செறிந்திருக்கும் நெறிகளை உள்வாங்கி இன்பமும் பயனும் அடைகின்றான். சுருக்கமாகச் சொன்னால் கதையுண்மை நீங்கினும் புராணங்களில் கருத்துண்மை செறிந்துள்ளன.

இராமாயணத்தை ஓர் உதாரணமாக எடுத்துக் கொள்வோம். அதன் சரித்திர உண்மையைப் பற்றி நாம் சிந்திக்கத் தேவையில்லை. மகன் தந்தையிடம் கடைப்பிடிக்க வேண்டிய அறம், சகோதரர்கள் ஒருவருக்கொருவர் கொள்ளவேண்டிய அன்பு, கணவன், மனைவி இருவரும் ஒருமித்து வாழும் பண்பு, சிநேகிதர்களின் நெறி, பணியாளனின் தருமம், நன்னெறி, தீயநெறி முதலியவற்றின் தன்மை எல்லாம் இராமாயணத்தில் நன்கு விளக்கப்படுகின்றது. இவற்றைச் சித்தரிக்கவே கம்பனும் வால்மீகியும் பாடுபட்டனர். ஒரு மாசற்ற வாழ்வை இராமன் வாயிலாக மனிதன் கடைப்பிடிப்பதற்கு கதையிற்கூட பல மாறுதல்களை கம்பன் செய்தான். இதேபோன்றுதான் மகா பாரதத்திலும் சகோதர ஒற்றுமை, தர்ம உபதேசங்கள், எல்லாவற்றுக்கும் மேலாக கிருஷ்ண பிரானுடைய அறநெறிப் போதனைகள் போன்ற பல விடயங்கள் அடங்கியிருக்கின்றன.

புராணங்களைப் பற்றிய குறைகளையும் நிறைகளையும் நாம் அறிந்தோமானால் அவற்றில் மிகைப்படுத்தக் கூடிய விடயங்களைக் கருத்தில் கொள்ளாது அதனுள் செறிந்திருக்கும் கருத்துக்களை நாம் உணர வேண்டும். ஆகவே புராணங்களைப் படித்து அவற்றைப் பிறருக்கு எடுத்து விளக்குபவர்கள் பகுத்தறிவு மேன்மையுற்று விளங்கும் இக்காலத்தில் கதையம்சத்தை முக்கியமாகக் கருதி அதில் நம்பிக்கையூட்ட முயலாமல் கருத்துச் சிறப்பையும், அவற்றின்மூலம் நாம் அடையப்போகும் நன்மை தீமைகளைப் பற்றியும் எடுத்துக்காட்ட முயற்சி செய்யவேண்டும். இதனைச் செய்வோமானால் புராண இதிகாசங்கள் மேலும் வலுப்பெறும் என்பது திண்ணம்.

## அறியும் அறிவு

பட்டினத்தடிகள் வயல் வரம்பில் தலைக்குக் கீழ் கையை வைத்தபடி படுத்திருந்தார். அவ்வழியால் கூலிவேலை செய்துவிட்டுப் போன பெண்களில் ஒருத்தி சொன்னாள் முற்றும் துறந்தவர் என்று சொல்கிறார்கள், தலைநோகாது கையைத் தலைக்குக் கீழ் வைத்திருக்கிறாரே என்றாள். தான் இன்னும் தன் உடம்பின் சுகத்தை மறக்கவில்லையே என்று அடிகள் வருந்தித் தன் மானசீகக் குருவாக வரித்துக் கொண்டார். அறிவு எங்கு, எப்போது, எவரிடம் இருந்து வருவதென்று தெரியாது.

தொடர்ச்சி...

# உமாபதி சிவம்

அருளிய

# திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்



## 20. இவ்வுயிர் திருவருளை உணர்வது எந்நாளோ?

அன்று அளவும் ஆற்றும் உயிர் அந்தோ அருள் தெரிவது
என்று அளவொன் றில்லா இடர்.

**பொருள்:**

அநாதியாகிய அன்று தொட்டு இன்று வரையிலும் அளவற்ற துன்பங்களைத் தாங்கி நுகர்ந்து வருவனவாகிய உயிர்கள் மிகவும் இரங்கத்தக்கவை. அவை இறைவனது ஞானமாகிய திருவருள் ஒளியைப் பெற்றுத் துன்பம் நீங்கப் பெறுவது எந்நாளோ?

**சொற்பொருள்:**

அன்று- ஆணவமலமாகிய அருளில் அழுந்திய அன்று தொட்டே, அளவும்- (அது காரணமாக வந்து) பொருந்துகின்ற, அளவு ஒன்று இல்லா இடர்- அளவற்ற பெருந்துன்பத்தை, ஆற்றும் உயிர்- தாங்கி நுகர்வனவாகிய உயிர்கள், அந்தோ- ஐயோ!, அருள் தெரிவது- இறைவனது ஞானமாகிய திருவருள் ஒளியைப் பெற்று இடர் நீங்குவது, என்று- எந்நாளோ?

**விளக்கம்:**

**அளவொன்றில்லா இடர்:**

அருளுள்ளம் கொண்ட நம் ஆசிரியர் உயிர்கள் படுந்துன்பம் கண்டு ஆற்றாமல் இவ்வாறு இரங்கிக் கூறுகின்றார்.

உயிர்களுக்கு உண்டாகும் கேட்டிற்கெல்லாம் ஆணவமாகிய இருளே மூல காரணமாகும். அது அநாதி நிலையில் உயிரினது அறிவை முழுதுமாக மறைத்து நிற்கும். அதனால், உயிர் அறிவென்பது சிறிதும் இன்றிச் சடப்பொருள் போலவே கிடக்கும்; தான் ஒரு பொருள் உண்டு என்பதும் தோன்றாமல் உயிர் ஆணவத்தில் அழுந்திக் கிடக்கும். இதனினும் கொடிதான துன்பநிலை வேறு என்ன இருக்கிறது?

இத்துன்பநிலை கண்டு இரங்கிய இறைவன் அவ்விருள் நிலையிலிருந்து உயிரை எடுத்து அதன் அறிவை விளங்கச் செய்வதற்கு உடம்பு முதலியவற்றைக் கொடுத்துப் பிறவியிற் செலுத்துகிறான். பிறப்பு நிலையில் ஆணவத்தின் ஆற்றல் சிறிது அடங்கப் பெறுகிறது. உயிரறிவு சிறிது விளங்குகிறது. இந்நிலையில் ஆணவம் வேறொரு செயலைச் செய்கிறது; ஓரளவு விளங்கிய உயிரறிவை அது திரிவுபடுத்துகிறது; நிலையாத பொருளை நிலைத்த பொருளாகக் கருதும்படி செய்கிறது; அற்பமான பொருளை உயர்ந்த பொருளாக

மதிக்கும்படி செய்கிறது. இவ்வாறு ஆணவம் உயிருக்கு விபரீத அறிவை உண்டாக்குகிறது; உயிருணர்வை மயக்கி உலகியல் பொருள் கள்மீது அளவு கடந்த ஆசையைப் பெருக்கி அவற்றை "என்னுடையவை" என்று, விடாது பற்றும் படியாகத் தூண்டுகிறது.

ஒரு பொருளை "என்னுடையது" என்று நினைக்கும்போதுதான் துன்பம் உண்டாகின் றது. எடுத்துக்காட்டுக்கு ஒரு நிகழ்ச்சியைக் கூறலாம். வீதியில் பிள்ளைகள் விளையாடு கிறார்கள். ஒருவன் அடித்த பந்து பாய்ந்து வந்து நமது வீட்டுக் கண்ணாடிக் கதவின்மீது பட்டுக் கண்ணாடி உடைந்து போகிறது. அப் பொழுது நமக்கு எவ்வளவு வருத்தம் உண் டாகிறது! "வீடு என்னுடையது" என்ற பற்றே இத்துன்பத்தை விளைவிக்கிறது. இப்படி நடப் பதற்குப் பதிலாக, எதிர்த்த வீட்டுக் கதவின் கண்ணாடி உடைந்தால் நமக்குத் துன்பம் உண்டாகுவதில்லை. நமது வீட்டையே விற்று விட்டுச் செல்வதாக வைத்துக் கொள்வோம். ஒரு சமயம் அந்த வழியாகச் செல்ல நேர் கிறது. முன்பு நடந்ததுபோலவே ஒருவன் அடித்த பந்துபட்டு நமது பழைய வீட்டின் கண்ணாடிக் கதவு உடைகிறது. ஆனால், அதைக் கண்டு நமக்குத் துன்பம் ஏற்படு வதில்லை. அதற்குக் காரணம் அந்த வீடு என்னுடையது என்ற பற்று இப்பொழுது இல்லை.

உலகப் பொருள்களின் தன்மை என்ன என்பதை நாம் தெரிந்து கொண்டால் துன்பமில்லை. நாம் ஒரு நண்பரது வீட்டிற்குப் போகிறோம். அவர் அவ்வளவு வசதியுடைய வரல்லர். வீடுதேடி வருபவர்கள் அமர்வதற்கு அங்கே நல்ல இருக்கைகள் இல்லை. ஒரு மூலையில் உடைந்த நாற்காலி ஒன்று கிடக் கிறது. அதிலேதான் நாம் உட்கார வேண்டும். அதற்கு ஒரு கால் இல்லை மற்றக் கால் களும் ஆடிக்கொண்டிருக்கின்றன. அந்த நாற்காலியின் தன்மையை நாம் நன்கு தெரிந்து கொண்டபடியால் மிகுந்த கவனத்தோடு அதிலே அமர்வோம்; கீழே விழுந்து துன்பப்பட மாட்டோம். அதுபோல, உலகில் நாம் காணும் எல்லாப் பொருள்களின் தன்மையையும் தெரிந்துகொள்ள வேண்டும். அவை யாவும் நிலையற்றவை என்பதைத் தெரிந்துகொண் டால் அவற்றால் வருத்தப்படமாட்டோம்.

உலகின் உண்மை நிலையைத் தெரியவொட்டாதபடி ஆணவம் நமது அறிவை மறைக்கிறது; வேறுபடுத்துகிறது. அதனா லேயே நமக்கு இத்தனை பற்றுக்கள்! இத் தனை துன்பங்கள்!

பற்றினால் விளைவதே வினையாகும். நமக்குப் பிடித்தமான பொருள்களை, அவற் றின்மீது கொண்ட பற்றினால், எப்பாடு பட்டா கிலும் அடைவதற்கு முயல்கிறோம். நமக்குப் பிடித்தவை நம்மை விட்டுச் செல்லும் என்று தெரிந்தால் எப்பாடு பட்டாகிலும் அவை நம்மைவிட்டு நீங்காமல் நிறுத்திக்கொள்ள முயல்கிறோம். அம்முயற்சிகள் யாவும் நல்லன வும் தீயனவுமாக அமைகின்றன. அவையே நல்வினை தீவினைகள் ஆகின்றன. அவ் வினைகள் பிறப்பிற்குக் காரணமாகின்றன.

உயிர்களுக்குப் பிறத்தலும் இறத் தலும் பெருந்துன்பங்கள். மற்றை எல்லாத் துன்பங்களும் அவற்றுக்கு இடையே விளை வன. பிறப்புப் பெருந்துன்பமாதலைக் கருதியே திருவள்ளுவர் "பிறவிப் பெருங்கடல்" என்றார். அதனையொட்டி ஆசிரியர் உமாபதி சிவமும் சிவப்பிரகாச நூலில் "இடர்கடல்" (செ.18) என்று குறிப்பிட்டார்; அதனையே விரித்து "அளவொன்றில்லா இடர்" என இங்கே கூறி யுள்ளார் எனலாம்.

### அருள் தெரிவது என்று?:

உயிரை அறியாமையுட்படுத்தித் துன் பத்தை விளைவித்து வந்த ஆணவ மலத்தின் சத்தி படிப்படியே மெலிவடைந்து பின் நீங்கும் நிலையை ஒரு காலத்தில் எய்தும். அந்நிலை "மலபரிபாகம்" எனப்படும்.

மலபரிபாகம் வருமானால் அவ்வுயிர் பற்றிலிருந்து விடுபடும். திருவருளையே பற்றாகப் பற்றும்; திருவருட் சார்பினால் இருள் மலச் சார்பை நீக்கிக் கொள்ளும்; இருளால் வந்த துன்பம் நீங்கப் பெற்று அருளால் வரும் பேரின்பத்தை நுகரும். இதனை,

"புணரும் இருள்மலபாகம் பொருந்தியக்கால்
அருளால்
உள்நிலவும் ஒளியதனால் இருளகற்றிப் பாதம்
உற்றிடும் நற் பசு வருக்கம்" (செ.19)

என்னும் சிவப்பிரகாசச் செய்யுளால் அறியலாம்.

உயிரவை நிலையில் இறுதியாக நிற்கும் இக்குறளில், உயிர்கள் அருளைத் தெரிந்து இடர் நீங்குவது என்று? என வினவுகிறார். அதற்குரிய விடையை இங்கே தரவில்லை. சிவப்பிரகாசத்தில் உயிரிலக்கணம் கூறும் செய்யுளில் அதனை அமைத்திருக்கிறார். அச்செய்யுட் பகுதிதான் மேலே உள்ளது. மலபரிபாகம் வரும் காலத்தில் உயிர் குருவருளால் தன்னுள்ளே விளங்கும் திருவருள் ஒளியைப் பெற்று மல இருளைப் போக்கித் துன்பத்திலிருந்து விடுபடும் என்பதே அவ்விடையாகும். (முற்றும்)

## குருவடி போற்றிய திருவடி மகிமை

திருக்கேதீஸ்வரம் ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபையார், மேற்படி சுவாமிகளின் 27ஆம் ஆண்டு குருபூஜையையும், திருவாசக விழாவையும், திருவடி பூஜையையும் 25.01.2015, 26.01.2015 ஆகிய இரு தினங்களிலும் வெகு சிறப்பாகத் திருக்கேதீஸ்வர சபாரத்தின சுவாமிகள் மடத்தில் கொண்டாடினார்கள். அதன் நிமித்தம் பாடியருளப்பட்ட பாமாலை.

1) தேன்பொந்து ஒன்றுண்டு இங்கிருக்குதாம்
தேடியதை மாந்திடவே ஓடிவாருங்கள்.
'நான்' என்ற எண்ணத்தை விட்டு விடுங்கள்
நம்புங்கள் மாந்தையிலே கண்டுகொள்ளுங்கள்.

2) திருவாசகத் தேன்பாயும் கேதீச்வரமதிலே அதை
தித்திக்கவே வைத்தார் ஸ்ரீசபாரத்ன சுவாமிகள்.
ஒருவாசகம் உனக்கு வீடுபேறளிக்கும் அதற்கு
இந்தப் பிறவி கிடைத்திருக்கு வீணாக்காதே

3) என்னதான் உனக்குத் துன்பம் வந்தாலும்
இருக்கிறதே திருவாசகம் இயன்றளவும் படி!
அன்னதானம் சந்நிதிபோல் அவசியமென்றுணர்ந்து
அதற்கான அத்தனையையும் அரங்கேற்றி வைத்தார்

4) குருவடி போற்றிய திருவடி மகிமையை
உருகிடவே போற்றி வணங்கினரே
கருதிய பணிபல பெருகிட அருள்வரம்
கேதீச்சரமதில் இன்று விளைகிறதே பாரீர்

5) அவர்நினைவாக ஒருபெரு மண்டபமதில்
அனைத்திலும் ஒலித்திடும் திருவாசகமே.
நவயுகம் தொடர்ந்தும் இதைப் போற்றிடுமே
நம்பிக்கை தந்தனர் வந்திருந்தோர்.

*-கே.எஸ்.எஸ். ராஜா-*

*மௌனம் மலையைச் சாய்க்கும்.*

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் சாத்வீகப் பணிகள்

– திரு இராசையா ஸ்ரீதரன் அவர்கள் –

முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன் முருகன். சதா சர்வ காலமும் தமிழ்க் கடவுள் முருகனை தயையுடன் நன்கு பணிந்து வந்தித்துச் சிந்தித்துச் சேவித்து நிற்பவர்களைத் தன்னுடன் இணைத்துக் கொள்ள செல்லச்சன்னிதி முருகன் வழிகாட்டி நிற்கின்றான்.

ஆற்றங்கரை வேலவன் வாழ்வில் மாற்றங்கள் செய்யும் ஆற்றல் படைத்தவன். எமது வாழ்நாளில் நாங்கள் பட்ட துன்பங்களும் துயரங்களும் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கிவிடும். செல்லச்சன்னிதி வேலவனை உண்மையாக நம்பியோர்களை ஒருபோதும் கைவிட மாட்டான். இருளகற்றி அருள்புரியும் வேலவன் எமக்குத் திருவருள் தந்து நிற்பான்.

அப்பேர்ப்பட்ட ஆற்றங்கரையான் திருவருட் துணையோடு மோகனதாஸ் சுவாமிகள் சந்நிதியான் ஆச்சிரமத்தின்மூலம் செய்துவரும் சாத்வீகப் பணிகள் காத்திரமானவை. ஏழை எளியவர்களுக்கு உதவுவதென்றால் அவருக்குத் தனி இன்பம். என்ன ஏதென்று கேட்டு உடனடியாக உதவும் மனங்கொண்டவர். அவருடைய ஆக்கபூர்வமான அரும்பணிகள் போற்றப்பட வேண்டியவை. கல்வி கற்க வசதியின்றித் தத்தளிக்கும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு உதவுவதில் சுவாமிகளுக்கு நிகர் சுவாமிகளே! இவன் உண்மையாகக் கஷ்டப்படுகிறான் என்பதை பார்த்த மாத்திரத்திலேயே கண்டுபிடித்து விடுவார். அவருடைய கண்கள் அருட்கண்கள். அந்தப் பார்வையில் ஆற்றங்கரையானின் அருள் இருக்கும்.

இந்த ஆச்சிரமம் யாருமே செய்ய முடியாத அறப்பணிகள் பலவற்றை ஆனந்தமாகச் செய்து வருகின்றது. ஏழை மக்களுக்கு ஏற்றமளிக்கும் எழில்மிகு பணிகள் மகத்தானவை. கல்விக்கு ஊக்கமளிக்கும் முகமாக அப்பியாசப் புத்தகங்கள், எழுதும் பேனாக்கள் மற்றும் போக்குவரத்து வசதிக்கான சைக்கிள்கள் கொடுத்து வருகின்றது. கணவனை இழந்து கதியற்று நிற்கும் குடும்பப் பெண்களுக்கு தையல் மெஷின் போன்ற பல பொருட்களை இலவசமாக வழங்கி வருகின்றது.

நோயினால் அவஸ்தைப்படும் நோயாளிகளுக்கு தக்க சமயத்தில் உற்ற உதவிகளை வழங்கி, அவர்களை உயிர் பிழைத்து வாழ்வதற்கு அச்சாணியாயிருந்து மருத்துவ வசதிகளும் வழங்கப்பட்டு வருகிறது. பார்வைக் குறைபாட்டினால் கண் தெரியாத அன்பர்களுக்கு கண்ணாடிகளைக் கொடுத்து அவர்களை இந்த உலகைப் பார்த்து வாழ்வதற்கு வழிகாட்டியாய்த் திகழ்பவர் சுவாமிகளே எனில் மிகையாகாது.

சேவைக்காகத் தம்மையே முற்றாக அர்ப்பணித்து அரும்பணியாற்றிவரும் அன்புள்ளங்கொண்ட மோகன்சுவாமிகளின் அறப்பணியால் உய்வடைந்தோர் இப்போதும் இருக்கின்றார்கள். முக்கியமாக முதியோர்கள், சமூக சேவையாளர்கள் ஆகியோரை உண்மையாக இனங்கண்டு அவர்களுக்கேற்றாப்போல் இன்ன இன்ன செய்ய வேண்டும் என்று தீர்மானித்து

அந்த உதவியை உடனடியாக வழங்கி, ஆபத்பாந்தவராக விளங்கும் சுவாமிகள் திருத் தல யாத்திரைகள் மேற்கொண்டு ஈழம் வாழ் மக்களின் நலத்துக்காகப் பிரார்த்தனையும் செய்து வருகின்றார்கள். இவருடைய அரும் பணியாம் அறப்பணிகளின் விபரம் சொல்லில் அடங்காது.

ஆற்றங்கரை வேலவனைத் தரிசிக்க வரும் ஆறுமுகப் பெருமானின் அடியார்கள் பசியோடு போகக்கூடாது என்று தினசரி அன்னமளித்து அவர்களின் பசியாற்றுவதோடு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் "வாராந்த நிகழ்வு" என ஒன்றை ஏற்பாடு செய்து அவர் களுக்கு நல்ல செவிக்குணவும் வழங்குவதை எண்ணும்போது அவருடைய அரும்பணி அர்த் தமுள்ள அறப்பணி எனில் அது சாலப்பொருந் தும்.

அது மாத்திரமன்றி, இந்தச் செல்லச் சன்னிதி வேலவப்பெருமானின் அருட்பெருங் கருணையை அயல்நாடுகளிலிருக்கின்ற அடி யவர் பெருமக்களும் அறியவேண்டும் என்னும் பெருநோக்கோடு ஓர் அருமையான சைவ மணங்கமழும் "ஞானச்சுடர்" எனும் பெயரில் சைவ சஞ்சிகையும் வெளியிடப்படுகிறது. ஞானச்சுடரின் இருநூற்றைந்து இதழ்கள் இதயம் மகிழ வெளிவந்தது மட்டுமல்லாமல் பல்வேறு கோணங்களில் நின்று பார்த்து, அந்த மலர் நல்லமுறையில் வெளியாகி, ஆன் மீகக் கட்டுரைகள், அறிவுக் கட்டுரைகள். சுகாதார அவசியம் பற்றிய விடயங்கள், மாண வர் பக்கம் என்று ஒரு பகுதியை ஒதுக்கி கல்விச் செல்வம் பெறுகின்ற இளம் சிறார் களுக்கு சாத்வீகமான வழியில் பல உதவி களைச் செய்து காலத்தின் தேவையறிந்து நிறைவேற்றும் பல்துறை சார்ந்த கட்டுரைகள் வெளியாகி வருவது பாராட்டுக்குரியது.

தொண்டைமானாறு செல்லச்சன்னிதி வேலவர் கோயில் சிறப்புற்றுத் திகழ்வதன் தாற்பரியம் என்ன? இந்த முருகனுக்கும் கதிர் காமத்திலுள்ள முருகனுக்கும் ஓர் உற்பவ ஒற்றுமை இருக்கின்றதாகச் சொல்லப்படுகின் றது. அதாவது கதிர்காமத்தில் பூசை செய் வோர் ஒரு துணியினால் தமது வாயைக் கட்டி மூடியிருப்பார்கள். இதேபோன்று இந்த செல்லச்சன்னிதி முருகன் கோயிலிலும் பூசை செய்பவர்கள் வாயைத் துணியினால் கட்டி மூடியிருப்பார்கள்.

முருகன் கலியுகத்தில் கண் கண்ட தெய்வம். அவனுடைய கடைக்கண் பார்வை எம்மீது படாதா? என ஏங்குவோரும் உளர். கந்தன் கலியுகவரதன். அந்தக் கந்தன் இந்தச் செல்லச்சன்னிதி கோயிலிலே அன்னதானக் கந்தனாக எழுந்தருளி வீற்றிருந்து அருள் பாலிக்கிறான். இந்தச் செல்லச்சன்னிதிப் பதி யுறையும் செல்வக்குமரன் செந்தில்குமரன் தம்மை வழிபடும் அடியார்களின் அல்லல் போக்கி இன்னல் களைந்து பசிப்பிணி போக் கும் பரம்பொருளாக விளங்குவது வரலாற்றுச் சிறப்பைத் தரும் ஒரு பிரதான விடயமாகும். வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த் தச் சென்னியும் தந்த தலைவனான முருகப் பெருமான் தமிழ்க் கடவுளாக வீற்றிருந்து அடிபணியும் அடியார்களுக்கு அருள்புரியும் பாங்கு அளப்பரியது.


ஆறுபடை வீட்டிலுறையும் ஆறுமுகன் கந்தன் எல்லோருக்கும் அருள்புரியும் ஏழை பங்காளனாக பசியோடு வருபவர்க்கு புசி என்று கொடுக்கும் புனிதவேற் பெருமானாக இந்தச் சன்னிதியிலே உறைந்திருந்து அன்ன தானக் கந்தனாக அருள்புரிந்து வருவது அனைவரும் அறிந்ததே. அந்தவகையிலே ஆறுமுகப்பெருமான் திருமுருகனாக அருள் பாலிக்கும் அழகே தனி; ஆகவே, அடியார்கள் அனைவரும் சந்நிதியான் ஆச்சிரமப் பணி களுக்கு உந்து சக்தியாக விளங்கும் முருகப் பெருமானை வாழ்த்தி வணங்குவோமாக.

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

(தொடர்ச்சி...

## 16. தன்னிகரற்ற ரமணன்

"ஒரு சமயம் நான் அவருடைய குடிசைக்குப் போனபொழுது ஒரு இளம்பெண் தன் வாழ்க்கையிலுள்ள கஷ்டங்களைச் சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்தாள். ஆனந்தம்மாள் ஆறுதலாக அவளுக்குச் சொல்லி சமாதானம் செய்த வார்த்தைகள் இன்றும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. இந்தத் துன்பங்களை நினைக்க நினைக்க, அவை உன் மன உறுதியை மேன்மேலும் பலவீனப்படுத்துகின்றன. இந்த எண்ணங்களின் சங்கிலியை அறுத்துவிடு. பகவானின் சன்னிதியில் போய் உட்கார். அது உன் பிரச்சினைகளைத் தீர்த்து நலமருளி விடும்!" என்றார். மேலும் தொடர்ந்து, "சாதனை செய்ய விரும்பும் பெண்களுக்கு அருணாசலம் தான் உத்தமமான ஷேத்திரம். பார்வதிதேவி இங்கு தானே தவம் செய்து சங்கரனின் இடப்பாகம் பெற்றாள்! அண்ணாமலையில் பெண்களுக்கு ஆன்ம சித்தி கிட்டுமென்பதே இதற்குச் சான்று. ராமனைப் பெற்ற கௌசல்யா தேவிக்கும் கிருஷ்ணனைப் பெற்ற யசோதாதேவிக்கும் கோயில்களுள்ளனவா? பகவானின் அம்மாவைப் பார்! இங்கு அழகம்மை தனயன் தன் அன்னைக்கு ஆலயம் எழுப்பத் திருவருள் செய்ததன்றோ? இதைவிடப் பெண்மையின் பெருமைக்கு வேறென்ன சான்று வேண்டும்?



பகவானின் மகா சமாதிக்குப்பின் அடியார்கள் திருவண்ணாமலையை விட்டுச் சிதறி விட்டனர். எனினும் வேறெங்கும் மன அமைதி கிடைக்கவில்லை என்றறிந்து மெள்ள மெள்ள பகவானின் சமாதி ஸ்தலத்துக்கே திரும்பி வந்தனர். அவர்கள் அனைவரும் பகவானின் 'நூல் திரட்டை' விளக்கும்படி முருகனாரை வேண்டினர். அவருடைய அழகான விளக்க உரைகளும் நடுநடுவே வைரம் பதித்தாற்போல் பகவான் நிகழ்ச்சி நினைவுகளும் எங்களை ரமணாமிர்தம் பொழிந்ததுபோல் மகிழ்வூட்டின. முருகனாரின் பேச்சுக்களைக் கேட்டவர்கள் பாக்கியம் செய்தவர்கள். ஆனந்தம்மாளும் நானும் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்!

நூல் திரட்டைப் பூர்த்தி செய்த பிறகு முருகனார், ஆன்ம புராணம் முதலிய பல்வேறு ஆன்மீக நூல்களுக்கு விளக்கம் அளித்தார். ஞானி வாமதேவரின் ஆத்ம புராணத்திலிருந்து ஒரு பாகத்தை விளக்கும்படி ஒருநாள் ஆனந்தம்மாள் கேட்டார்.

"வாமதேவருக்குப் பிராரப்த கர்மம் எஞ்சியிருக்கவே அவருக்கு கர்ப்பவாசம் செய்ய வேண்டி வந்தது. ஆனால் அந்தக் கர்ப்பத்திலேயே அவர் ஆன்மானுபூதியடைந்தாரில்லையா?" என்று கேட்டு முடிந்தவுடன் ஆனந்தம்மாள் குப்புறக் கவிழ்ந்து விழுந்து விட்டார், நமஸ்கரிப்பதுபோல். சில நிமிடங்கள் கழித்தும் அவர் எழாமல் போகவே, நான் அவரைத் தூக்கி

உட்கார வைத்தேன். அவருக்கு ஸ்மரணை இல்லை. முகத்தில் தண்ணீர் தெளித்தும் பிரக்ஞை திரும்பாமல் போகவே, ஊருக்குள் இருந்த அவருடைய உறவினர் வீட்டுக்கு அவரை அனுப்பி வைத்தோம். அதன் பிறகு அவர் கண்களைத் திறக்கவேயில்லை. இது மாலை ஆறு மணிக்கு நடந்தது. ஒன்பது மணிக்கெல்லாம் அவர் அடங்கி விட்டதாக அறிவித்தார்கள். அவருடைய கடைசி நினைவு வாமதேவரின் முக்தியைப் பற்றியது!"

அவருடைய உடலை, அவருடைய மகனும் சகோதரனும் ஆச்ரமத்தருகில் அடக்கம் செய்தனர். ஆனந்தம்மாள் ஆன்ம சாதகர்களால் பின்பற்றப்படவேண்டிய உத்தம அடியார்களில் ஒருவராவார்.

* * *

பின்னர், கனகம்மா விநோதமான மகிழ்ச்சி பொங்கும் ஒரு நிகழ்ச்சியைக் கூறினார்.

"ஆச்ரமத்துக்கு நான் 1946இல் வந்தேன். அந்தக் காலத்தில் வேதபாராயணம் பகவான் முன்னிலையில் காலை ஐந்து மணிக்கு நடந்து வந்தது. மார்கழி மாதம் தமிழ்ப் பாராயணம் காலை வேத பாராயணத்திற்கு முன்னரே நான்கு மணிக்கே ஆரம்பித்து விடும். மார்கழிதான் குளிர் அதிகமான மாதம். தமிழ்ப் பாராயணத்தில் முருகனாரின் சன்னிதி முறையிலிருந்து 'திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பல்லாண்டு, மாணிக்கவாசகரின் திருவாசகம் இவை இடம் பெறும். பகவான் வழக்கம்போல் மூன்றரை மணிக்கே எழுந்து தயாராக இருக்கும்.

அன்று பகவான் ஜுபிலி ஹாலில் அமர்ந்திருந்தது. நான்கு புறமும் திறந்திருந்ததால் நடுக்கும் குளிர். ஆனாலும் பகவான் ஒரேயொரு சால்வையால் தலையையும் மூடி போர்த்திக் கொண்டிருக்கும். கனன்று கொண்டிருக்கும் கனலில் தசாங்கத்தைத் தூவியதும் சுகந்தமான புகை எங்கும் பரவி சுற்றுச் சூழல் நறுமணம் கமழும்.

கணப்பச்சட்டி எப்பொழுதும்போல் பகவானருகில் ஒரு முக்காலிமீது வைக்கப்பட்டிருந்தது. சில சமயங்களில் பகவான் தன் விரல்களை விரித்து உள்ளங்கைகளில் உஷ்ணம் படும்படி நெருப்பின் அருகில் காண்பிப்பது, பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும். ஒரு சமயம் அடியார் ஒருவரது கவனக்குறைவினால் நிறையத் தசாங்கம் நெருப்பின்மீது விழுந்து விடவும் கனத்த புகை அலையலையாய்க் கிளம்பி, பகவான் முகத்தை மூடி மூச்சு முட்டச் செய்துவிட்டது. பகவான் சிரித்துக்கொண்டே "போடுங்க, ஓய் போடுங்கோ சாமிதானே? நன்னாப் போடுங்கோ; கோயிலில் இருக்கும் சாமிக்கு தூபம் போடுவதில்லையா? அதைப் போலத்தானே இந்தச் சாமிக்கும் போடணும்? அப்பத்தானே திருப்தி! அதனால் தான் கோவிலில் சாமியை எப்போதும் கல்லால் செய்கிறார்களோ? இல்லாவிடில் இந்தப் பூஜையெல்லாம் எவ்வளவு தொந்தரவாக இருக்கும் அவருக்கு? எனக்கு எப்பொழுதாவதுதான் இந்தத் தொல்லை. கோயில் சாமியின் கதியைப் பார். தினம் ஆறு தடவை- சில சமயம் அதிகமாகக் கூட - இவற்றையெல்லாம் சகித்துக்கொள்ள வேண்டும்!"

* * *

பின்வரும் சுவாரசியமான விஷயம் பலராம ரெட்டியாரிடமிருந்து எனக்குக் கிடைத்தது.

ஒரு பிற்பகலில் பகவான், இங்குடி மரத்தைக் காண்பிப்பதற்காக நாயனாவைக் காட்டிற்குள் கூட்டிச் சென்றது. சிறிது நேரம் கழித்து வந்த முருகனார் ஹாலில் பகவானைக் காணாமல், பலாக்கொத்தில் சென்று பார்த்துவிட்டு, அது நாயனாவுடன் காட்டுக்குச் சென்றிருப்பதை அறிந்து, அவர்களைத் தேடிப் போனார். அதன் பின்னர் விசுவநாதசுவாமி மூவரும் வனம் சென்றிருப்பதை அறிந்து தானும் பின் தொடர்ந்து, அவர்களைக் கண்டு பிடித்தார். முருகனாருக்கும், நாயனாவுக்கும்

ஏற்கெனவே இங்குடி மரத்தைக் காண்பித் திருந்த பகவான், விசுவநாதசுவாமிக்கும் அதைக் காண்பித்தது. காவியங்கள் வாசித் தறியாததும், தாவரவியல் அறியாததுமான பகவானுக்கு, இந்த அபூர்வமான இங்குடி மரம் எப்படித் தெரிந்திருந்தது? என்று மூன்று பெரும் வித்துவ ரத்தினங்களும் அதிசயித் தனர். பின்னர் இதில் என்ன ஆச்சரியமிருக் கிறது, சர்வக்ஞனுக்குத் தெரியாதது என்று ஒன்று எப்படி இருக்கமுடியும்? என்று எண்ணித் தெளிந்தார்கள்.

(தொடரும்...

## சரணம் சரணம் சன்னிதிவேலே சரணம்

சொந்தமகற்றும் அனந்தகுணப்பாசம் எவன்பாலுள்ளவோ
கந்தவுலகும் எவனிடத்தில் பதிந்திருந்து கரக்குமோ
சந்தம் மறையா ஆகமக்கலைகள் அனைத்தும் எவன்பால் தகருமோ
வந்த இறையாம் சந்நிதியானை அன்பு கூரத்தொழு தெழுவாம்!

உலக முழுதும் நீக்கமற ஒன்றாய் நிற்கும் பொருளான வேலனை
உலகிற் பிறக்கும் விகாரங்களுநாத மேலான வொளி ஞானம்
உலகம் புரியும் வினைப்பயனையூட்டும் களைகளென வுணர்ந்து
பல்லுலக கலைஞான செல்லச்சன்னிதியை சரணடைவோமின்றே!

மூர்த்தியாகிச் சிவமாகி முந்நீர்க் கங்கை கடலாறாகி
தீர்த்தமாகி யறிந்தறியாவர்க்கும் திறத்தினாலுயர்வுகாட்டி
தம்மடி முதலோர்க்குத் துயரின்றி கருமமென்றும் முடிவாக்கும்
போத ஞான வேலனைப் புகழ்ந்து சரணடைவோமே யின்று!

செய்யும் வினையின் முதல் யாவும் செய்யப்படாது முழுமை நீக்கி
அவலமின்றிக் குருவுலாதாகுமந்தச் சித்திரத் திருக்கை வேலூன்றி
உய்யும் விளைவின் பயனூட்டி விடுப்பானெங்கள் ஆற்றிடையான்
பொய்யில் இறைமைப்புகழ் சுரக்கும் பூவரசில் சரணடைவோமின்றே!

வேகமறந்து அறிவரிய விகிர்தன் யாவன் விழுமைப்புய மோங்கும்
வேத முடிவினடைநவிலும் விமலன் விளங்குபரமன் மைந்தன்
நாத முடிவில் வீற்றிருந்து நாதனெவனெண் குணத்தோனாகு
போத ஞானக் கருணை காட்டும் புகழ் வடிவேலை சரணடைவோமின்றே!

மண்ணினோக்கூடி வதிவான் எங்கும் நீரிடை ஆறாய்த் திகழ்வான்
எண்ணியிருப்பான் தீயின்மீதில் நடப்பான் மூர்த்திக்குத் தலைவனாவான்
எண்ணிரெண்டு குணமாகி இசைமீட்டு வானிடை யொன்றாய் மலர்வான்
மண்டலத்திகழ் மறைஞானசுரர் கீண்டகுக மூர்த்தியை சரணடைவோமின்றே!

*-க. தெய்வேந்திரம்-*

# உயிரினும் மேலான ஒழுக்கம்

– திரு இ. சிவராசா அவர்கள் –

இப்பிரபஞ்சமானது குறிப்பிட்ட ஒரு ஒழுங்கில் பல கோடி வருடங்களாக தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கிறது. இதில் காணப் படும் கோள்கள் சந்திரன் பூமியைச் சுற்றுவது போல் தத்தமக்குரிய சுற்றுவட்டத்தில் குறிப் பிட்ட ஈர்ப்புவிசையுடன் ஒன்றையொன்று வலம் வந்து கொண்டும் இருக்கின்றன. இக்கோள் களும் இவற்றிற்கிடையே காணப்படும் ஈர்ப்பு விசையும் எவ்வாறு தோற்றம் பெற்றன எனும் கேள்விக்கு விஞ்ஞானம் தந்த பதில் பிக்பாங் திகரம் (Big Bang Theory) ஆகும். அதாவது 15000 கோடி வருடங்கட்கு முன் ஒரு பெரிய பிண்டமானது பாரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறிய துகள்களே கோள்கள் எனப்படுகின் றன. ஆனால், மெஞ்ஞானமானது அனைத்தின் உற்பத்திக்கும் மூலம் ஒன்றே எனவும் அந்த ஒன்றே பலவாகப் பரிணமித்துள்ளதாகவும் காலம் அறியப்படாத வேதங்கள் மூலமாக ஏற்கனவே பகர்ந்துள்ளது. எது எப்படியிருப் பினும் இக்கோள்களின் வேகம், சுற்றுவட்டம் என்பன இன்றும் மாற்றமடையாதிருப்பது சத்திய மாகும். பூமியில் வாழும் அனைத்து உயிரினங் களும் தமக்கேயுரிய ஒழுங்குமுறை பிறழாது வாழ்ந்து கொண்டிருக்கின்றன. மானிட வாழ் வும் மேன்மையுறுவதற்கு ஒழுக்கம் கடைப் பிடிக்கப்படுவது இன்றியமையாததென வேதங் கள் பகர்ந்துள்ளன. ஒழுங்கு என்பது சட்ட திட்டங்களைக் கடைப்பிடித்தல், நேரந்தவ றாமை, கொண்ட கொள்கையில் உறுதி என்ப வற்றை உள்ளடக்கியதாகும். இவை பாட சாலையிலோ, புத்தகங்களிலோ கற்றுவிடக் கூடியவையல்ல. சிறுவயது முதல் காலை யிலிருந்து மாலைவரை தினமும் எம்மால் மேற்கொள்ளப்படும் செயல்கள் பழக்க வழக் கங்களாக மாறி அதுவே வாழ்க்கை முறை யாக அமைந்துவிடுகிறது. ஆறு அறிவைப் பெற்றிராத உயிரினங்கள் அனைத்தும் தத் தமக்குரிய ஒழுங்குமுறைகளை செவ்வனே கடைப்பிடிக்கின்றன. குறிப்பிட்ட விதை மண் ணிலிடப்பட்டு இத்தனை நாட்களின் பின் முளை தோன்றுமென்பதில் எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை. மூங்கில் மரத்தின் விதை நாட்டப்பட்டு ஆறு வருடங்களின் பின்புதான் பூமிக்கு வெளியில் முளை வரத்தொடங்கும். பழ மரங்கள் பயன் தருவதற்கும் கால எல் லைகள் காணப்படுகின்றன. செயற்கை முறை யில் ஊக்கிகளைப் பயன்படுத்தி பெறப்படும் ஹைபிரிட் (Hybrid) அறுவடையின் தரம் அனைவரும் அறிந்ததே. வருடம்பூராகவும் பூத்துக் குலுங்கும் தாவரங்களுமுள. வருடத் துக்கொருமுறை பூக்கும் தாவரங்களுமுள. பன்னிரண்டு வருடங்கட்கு ஒருமுறை மலரும் நீலக்குறுஞ்சி பூவுமுள்ளது. பறவையினம் அதிகாலை பிரம்ம முகூர்த்தத்தில் கண் விழித்து ஆனந்தமாக ஆரவாரித்து அன்றைய தினத்தை வரவேற்கின்றன. தமக்கொவ்வாத காலநிலை வருவதை முன்னரே உணர்ந்து குறிப்பிட்ட பாதையில் சமுத்திரங்களைத் தாண்டியும் இடம்பெயர்ந்து வாழ்ந்து பின் அதே இடத்தை மீண்டும் வந்து சேர்கின்றன. விலங்குகளிலும் பல ஒழுங்கு முறைகளை, குறிப்பாக உணவு, உறக்கம், உறவு என்ப வற்றை நாம் அன்றாட வாழ்க்கையில் அவ தானித்திருக்கின்றோம். அந்தந்த இனத்துக் குரிய கர்ப்ப காலத்தில் (Gestation Period) எதுவித மாற்றமும் ஏற்படுவதில்லை. விஞ்ஞா னத்தால் ஏற்படுத்தவும் முடியாது. எத்தனை நாட்கள் பட்டினி போட்டாலும் பல மிருகங்கள் அசைவ உணவை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. ஆனால் உயர்திணையாகிய மானிடரின்

வாழ்க்கை முறையை இந்த அ.'.றிணை களுடன் ஒப்பிடும்போது ஆறாவது அறிவின் மகத்துவம் கேள்விக்குறியாகின்றது.

விளையாட்டில் தீவிரமாக ஈடுபடுபவனும் நடுவரின் விசிலுக்கு நிபந்தனையற்றுக் கட்டுப்படவே செய்கிறான். பாடுவதிலும் ஒழுங்கு விதிகள் பின்பற்றப்படுவது இன்றியமையாதது. ஒரு மேலதிகாரியையோ அல்லது பெரியாரையோ கணம் பண்ணுவதிலும் சில ஒழுங்கு முறைகள் பேணப்பட்டு வருகின்றன. குறிப்பாக முப்படைகளைச் சேர்ந்த அதிகாரிகளிடையே இந்த ஒழுங்கு விதிகள் இன்றும் தீவிரமாகக் கடைப்பிடிக்கப்படுவதை அவதானிக்கலாம். உணவருந்துவதிலும் ஒழுங்குமுறை முக்கியத்துவம் பெறுகிறது. பசித்துப்புசி எனும் முதுமொழிக்கிணங்க சிறுவயது முதல் பசியாறப் பழக வேண்டும். உணவின் அளவு குறிப்பிட்ட எல்லையை மீறும்போது எச்சரிக்கை மணி ஒலிக்கும் வகையில் எமது உடம்பு படைக்கப்பட்டுள்ளது. சாப்பிட்டபின் கால்வயிறு வெறுமனே இருக்கவேண்டும் என்ற விதியை மீறுவதனால்தான் பலவித நோய்களை வலிந்து பெற்றுக்கொள்கின்றோம்.

ஒழுக்கம் தனிமனிதனுக்கும் மற்றும் உயிரினங்களுக்கும் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், பொதுத்தொண்டு மையங்கள் என அனைத்துக்கும் இது அத்தியாவசியமானதாகும். எத்துறையிலும் ஒழுங்கு நிலவும்போது அது மனிதனிடத்து பிணைப்பை ஏற்படுத்தி சமுதாயத்துடன் இணையச் செய்து ஈற்றில் சமூகத்துடன் பின்னிப் பிணைந்து விடுகிறது. சுய கட்டுப்பாட்டுடன் வாழ்பவர்கள் தற்கால சமுதாயத்தில் அரிதிலும் அரிதாகவே காணப்படுகின்றனர்.

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்புடைத்து (குறள்)

ஒரு பிறப்பில் ஆமைபோல் ஐம்புலன்களையும் அடக்கி ஆள்பவனுக்கு அதன் பலன் மறுபிறப்புக்களிலும் காப்பாக அமையும் சிறப்புடையதாகும் என்கிறது வள்ளுவம். மானிடரின் ஒவ்வொரு அசைவிலும் ஒழுங்கு முறை கடைப்பிடிக்கப்படுவது இன்றியமையாததாகும்.

இன்றைய சிறார்கள் முதல் வயதானவர்வரை உடம்பை நேராக வைத்து ஒழுங்காக ஆசனத்திலமர்வதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். முதுகெலும்பை நேராக வைத்து அமரும்போது எம்முள் உறைந்திருக்கும் தெய்வீகத்தை பிரகாசமடையச் செய்வதோடு எம்மில் நல்லெண்ணங்கள், புத்திக்கூர்மை, கவனிக்கும் திறன் என்பவற்றையும் வளர்ச்சியடையச் செய்கின்றன.

எமது ஐம்புலன்களில் நான்கு தத்தமக்கென விதிக்கப்பட்ட ஒரேயொரு தொழிலை மாத்திரம் செய்ய வல்லன. ஆனால் நாவானது இரண்டு செயல்களைச் செய்யும் தகுதி பெற்றது. இந்த மேலதிக செயற்பாட்டினால் நாவிற்கு மேலதிக பொறுப்புகளுமுள. இதன் வாயிலாக தேவைக்கதிகமானவை உட்சென்றாலும் அஜீரணம், உடற்பருமன் போன்ற பல நோய்கட்கு வித்தாகின்றது. இதன்மூலம் வெளிப்படுவனவும் இனிமையாகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் அமையத் தவறும்போது விளைவுகள் பாரதூரமானவையாக அமைந்துவிடும். வில்லிலிருந்து புறப்பட்ட அம்புபோல் அவை மீளப்பெற முடியாதன. நாவானது தனது வீட்டுக்கு வெளியே திரிய விரும்புவதில்லை. 32 இரக்கமற்ற காவலர்க்கிடையில் பல் திசையிலும், அசைந்தசைந்து செயற்பட்டாலும் தாக்குதலுக்குள்ளாகாதவாறு தன்னைத் தற்காத்துக் கொள்கிறது. எமது அசைவுகளும் செயற்பாடுகளும் எச்சரிக்கையுடனும் கூர்மையான கவனத்துடனும் மேற்கொள்ளும்போது எதுவித தீய சக்திகளும் எம்மை இலகுவில் அணுகிவிட முடியாது. பேச்சை அடக்கும்போது மற்றப் புலன்களை அடக்கிவிடுவது சுலபமாகிவிடும். நாவினால் சுட்ட புண் ஆறாது என்பது

வள்ளுவம். எச்சந்தர்ப்பத்திலும் பதற்றமடையாது பொறுமையைக் காப்பவன் புலனடக்கத்தில் சிறந்தவன் என்பதன் அறிகுறியாகும். சலனமற்ற அமைதி நிலவும் இடமே ஆண்டவனின் உறைவிடமாகும். மிருகங்கள் அனைத்தும் தினமும் குறைந்தது ஒரு மணித்தியாலம் அமைதியாக அமர்ந்திருந்து அசை போடுவதைக் காண்கிறோம். பறவைகளும் சிறிது நேரம் சலனமற்று அமைதியாக அமர்ந்திருக்கின்றன. ஆனால் மானிடனோ அமைதியாக அமர்ந்திருப்பதுமில்லை. அசை போடுவதுமில்லை. உடம்பு ஓரிடத்தில் நிலை கொண்டாலும் மனம் பல்திசையிலும் பறந்துகொண்டேயிருக்கும். தன்னால் மேற்கொள்ளப்பட்ட செயல்களை சற்று மீளாய்வு செய்யும் (அசை போடுதல்) வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் ஒவ்வொரு செயலிலும் ஏதோ ஒரு தவறு நடந்திருப்பதை உணரமுடியும். இதனால் அதே செயற்பாட்டை திரும்பச் செய்யும்போது இழைத்த தவறினை நிவர்த்தி செய்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். இப்பழக்கமானது ஞாபக சக்தியை அதிகரிப்பதுடன் எச்செயலிலும் நேர்த்தி ஒழுங்கான பூரணத்துவம் என்பன அமையவும் வழிவகுக்கும்.

பழம்பெருங் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றன பல அறநெறிகளை வலியுறுத்துகின்றன. சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அஹிம்சை என்பன உயர்நிலையில் பேணப்பட்டு சமுதாயம் செழிப்புற வேண்டுமென்ற நோக்குடன் நல்வழி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற பல நூல்கள் வாயிலாக ஔவையார் வலியுறுத்தி உள்ளார். வள்ளுவரும் ஒழுக்கமுடைமை எனும் தனி அதிகாரத்தை ஒதுக்கியுள்ளார். நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம், தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும் எனப் பகர்ந்தும் மக்கள் தீயொழுக்கங்களையே நாடி சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். நல்லொழுக்கத்தைப் பேணுவதைவிட தீயொழுக்கத்தைக் கடைப்பிடிப்பது சுலபமானதால் இன்றைய சமுதாயம் இலகுவானவற்றையே நாடி நிற்கின்றது. இதன் விளைவை அவரவரே எதிர்கொள்ள வேண்டுமென்பதையும் பலரும் அறியாமலில்லை. இருந்தும் செயற்கரிய செய்யும் பெரியாரின் எண்ணிக்கை நாளாந்தம் அருகிக் கொண்டே போகின்றது. ஒரு சீடனுக்கு குருவிடமிருக்கும் பக்திமயமான தொடர்பினால் அவனைச் சுற்றி ஒரு ஆன்மீகக் காந்தப்புலம் உருவாகின்றது. நாளடைவில் அவன் பக்குவமெய்தியதும் அக்காந்தப்புலத்தில் ஒரு சூட்சும மின்னோட்டம் ஏற்பட்டு அவரிடத்தே காணப்படும் வேண்டத்தகாத பழக்கவழக்கங்கள் பொசுக்கப்படுகின்றன.

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்

மக்கள் எண்ணற்ற ஆசைகளையும் தேவைகளையும் வளர்த்து அவற்றை வெகு விரைவில் பூர்த்தி செய்துவிடவே விளைகின்றனர். ஆனால் தமது முயற்சியின் பலனை அனுபவிப்பதற்குரிய காலம் கனியும்வரை பொறுமை காக்கத் தவறுகின்றனர். பாண்டவர்களில் மூத்தவரான தர்மர் பிறந்தபோது கருவுற்றிருந்த காந்தாரி அச்செய்தியைக் கேட்டதும் பொறாமை மிகுதியால் தனது பொறுமையை இழந்து தன் வயிற்றைத் தானே பலமாக அடித்துக் கொண்டாள். கரு கலைந்து ஒரு மாமிச பிண்டத்தையே பெற்றாள். தற்செயலாக அங்கு வந்த ரிஷி வேதவியாசர் அவள்மீது இரக்கம் கொண்டு அப்பெரிய பிண்டத்தை நூறு கூறுகளாக்கி நூறு பாத்திரங்களில் வைத்து நெய்யிட்டு நன்கு மூடிவிட்டார். அந்த மாமிச கூறுகட்கு தனது பிராண சக்தியைச் செலுத்திய ரிஷி குறிப்பிட்ட காலம்வரை அப்பாத்திரங்களைத் திறக்க வேண்டாமெனப் பணித்து விடை பெற்றார். ரிஷியின் சங்கல்ப சக்தி பூரணத்துவம் பெறும்வரை பொறுமை காக்க முடியாத

காந்தாரி அப்பாத்திரங்களைத் திறந்து விட்டாள். முழுநிலையடையாத மனதைக் கொண்டவர்களாக கௌரவர்கள் தோன்றினார்கள். காந்தாரி பொறுமையைக் காத்திருப்பின் பாண்டவர் போன்ற நற்புத்திரர்களை ஈன்றெடுத்திருப்பாள்.

தற்கால சமுதாயம் வேத, புராணங்களின் வசனங்களை மேலோட்டமாகப் படித்து அவ்வாறே அர்த்தம் கொண்டு வீண் விவாதங்களில் ஈடுபடுகின்றனர். கற்றறிந்தவர்களைக் கலந்தாலோசித்து ஆராய்ச்சியை மேற்கொள்ளாது புராணங்களைக் குறைகூறுவது தவறாகும். அவை, அழியாவரம் பெற்ற வியாசர் வால்மீகி போன்ற முனிவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றன. புலனடக்கத்துடனும் நிதானமாகவும் வாசிக்கும்போது அவ்வசனங்களின் உண்மையான அர்த்தம் வெளிச்சத்துக்கு வரும். அவற்றில் உண்மைக்குப் புறம்பானவை யாதும் இல்லை. படித்தவர்கள் அதர்ம வழிகளை நாட அனுமதி அளிப்பதுமில்லை. பதிலாக நிலையான சத்தியத்தை உணரும் வண்ணம் எமது அறிவைப் பிரகாசிக்கச் செய்கின்றன. வேதங்களை மறை எனவும் அழைப்பர். அதாவது மேலோட்டமாக ஒருவித கருத்தையும் ஆழ்ந்து நோக்கும்போது இன்னொரு கருத்தையும் புலப்படுத்தவல்லன. உதாரணமாக தூங்கும்போது எது கண் இமைப்பதில்லை என்ற யக்ஷனின் கேள்விக்கு தருமர் மீன் எனப் பதிலளிக்கிறார். இது மேலோட்டமான பதிலாயினும் ஆழ்ந்து நோக்கும்போது, சம்சாரக் கடலில் விளையாடி பாவ புண்ணியங்கட்கிடையில் பந்தாடப்பட்டு அடங்கும் காலம் வந்தாலும் எமது ஆன்மா உறங்குவதேயில்லை என்ற விளக்கம் வெளிப்படும். நாம் தூங்கும்போது வெளிப்புலன்கள் உட்புலன்கள் மற்றும் மனம் என்பன செயலற்ற நிலையிலும் ஆன்மா விழிப்பு நிலையிலேயே இருக்கும். அதனால்த்தான் தூங்கி எழும்போது கடைசி நிமிடம் வரை நடந்த நிகழ்வுகள் அனைத்தும் அழிக்கப்படாத நிலையுடன் கண்விழிக்கின்றோம்.

போர்க்காலச் சூழலில் காலத்தின் தேவை கருதி ஏற்படுத்தப்பட்ட ஒரு சில கலாச்சார பிறழ்வுகள் சிறிது சிறிதாக உண்மை நிலையிலிருந்து விலகி இன்று ஆங்கிலேயரை விஞ்சும் அளவிற்குச் சீரழிந்துள்ளது. எமது இனத்தின் கலாச்சார விழுமியங்களை நாமே அழித்துக் கொண்டு வருகின்றோம். எதிர்காலச் சமுதாயத்தின் நன்மை கருதியாவது இந்து அமைப்புக்கள் முதலில் சமய விழுமியங்களை இளைஞர் மத்தியில் வேரூன்றச் செய்ய வேண்டும். ஆன்மா லயப்படும் இடமாக ஆலயச்சூழல் அமையும் வண்ணம் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். சமய உணர்வுகளுக்கு மதிப்புக்கொடுக்காது ஆடம்பர நிகழ்வுகளை நடாத்தி ஆலயங்களைத் தியேட்டராக மாற்றுவதைத் தடுப்பதற்கு தன்மானமுள்ள ஒவ்வொரு இந்துவும் முன்வரவேண்டும். பிற மதங்கள் சார்ந்த ஆலயங்களில் இவ்வாறான கேலிக்கூத்துகள் இடம்பெறுகின்றனவா எனச் சற்று சிந்தியுங்கள். இளம் சமுதாயத்தை ஒழுக்க நெறியுடன் வாழ வழி சமைக்கும் விடயங்களையும் எமது கலாச்சார மேன்மைகளையும் பிரச்சாரம் செய்தல் வரவேற்கத் தக்கதாகும். ஆடம்பரங்களுக்காக இலட்சக் கணக்கில் செலவாகும் பணத்தை மீதப்படுத்தி அடிப்படை வசதிகளற்று காணப்படும் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு உதவி செய்யலாம். யோகாசனம், தியானம் பற்றிய பயிற்சி அளித்ததுடன் உடற்பயிற்சி மையங்களையும் அமைத்து இளைஞர் சமுதாயத்தை அழிவுப் பாதையிலிருந்து திசைதிருப்ப முயலலாம். இன்னும் அத்தியாவசியமான சமுதாயப்பணிகட்கும் நலிவடைந்தோரின் வாழ்வாதாரத்துக்கும் முன்னுரிமை கொடுக்கலாம். இந்து அமைப்புகள் இக்குறைபாடுகளைக் கவனித்து நிவர்த்தி செய்தால் பிறசமயத்தவர் அக்குறைகளை நிறைவேற்றும் போர்வையில் மக்களை மதமாற்றம் செய்வதையும் தடுத்துக் கொள்ளலாம்.

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல. ஆனால் புதியன என்ற பெயரில் எமது சமய விழுமியங்களை அழிப்பதானது எமக்கு நாமே புதைகுழி தோண்டுவது போலாகும். இளம் சமுதாயத்தை பூண்டோடு அழிக்கும் பகட்டு சமய விழாக்களையும் ஆரவாரங்களையும் மேற்கொள்வது அநேக விழாக்களின் மூல காரணத்தையே திரிபு படுத்தி பிறசமயத்தவரின் நகைப்புக்கிடமாகின்றது. ஒழுங்காக இருக்கும் ஆலயங்களை புனருத்தாரணம் என்ற பெயரில் நவீன முறையில் திருத்தியமைப்பதும் இன்றைய சூழலில் அத்தியாவசியமானதா என்பதை சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அண்மையில் ஒரு தாய் தனது இரண்டு பெண் குழந்தைகளை கிணற்றுள் வீழ்த்தி தானும் உயிரை மாய்த்துக்கொண்டாள். இவ்வாறான நலிவடைந்த அநேக குடும்பங்கள் நம் மத்தியில் காணப்படும்போது அவற்றின் அடிப்படைத் தேவைகளையாவது பூர்த்தி செய்வதும் அவர்களை தமது சொந்தக்காலில் நிற்க வைப்பதும் மனிதநேயமுள்ள ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும். அன்பே சொரூபமான ஆண்டவனையும் அவ்வாறான செயற்பாடுகள் மூலமாகவே சந்தோசமடையச் செய்ய முடியும். அன்பையே ஆதாரமாகக் கொண்டு நாயன்மார் பேணி வளர்த்த சமயத்தை அந்த அன்பின் வெளிப்பாட்டின்மூலம் பேணி வளர்ப்பது ஒவ்வொரு இந்துவினதும் தார்மீகக் கடமையாகும். புன்நெறியில் முன்னேறவும் அமைதியும் சுபீட்சமும் நிறைந்த சமுதாயம் உருவாகவும் திரிகரண சுத்தியுடன் செல்லும் போக்கினை மாற்றி சைவம் காட்டும் நன்னெறியில் அனைவரும் முயற்சிப்போமாக.

## ஆன்மீகச் சிந்தனை

பசிப்பிணி என்ற பாவி ஒருவனைப் பிடித்துவிட்டால் தன்மானம், குடிப்பெருமை, கல்வி, வளமை, அறிவுடைமை, கொடை, தவம், உயர்வு, ஊக்கம், காதல் ஆகிய குணங்கள் மறைந்துவிடும். வருவாய்க்குத் தக்க வகையில் செலவு செய்ய வேண்டும். வரவுக்கு மீறிச் செலவு செய்பவன் மாணத்தை இழப்பான். நல்லது கெட்டதை பிரித்தறியும் அறிவினை இழந்து விடுவான். திருடன் என்று பெயர் எடுப்பான். ஏழு பிறப்பிலும் பாவத்தைச் செய்யவேண்டி வரும்.

துன்பங்களைச் சேர்த்து வைக்கும் இடமாக உடல் இருக்கிறது. இந்தப் பொய்யான வாழ்க்கை நிலையானது என்று எண்ணி ஏமாந்து விடாதீர்கள். சேர்த்து வைத்த பொருளைக் கொண்டு வறியவர்களுக்கு உதவி செய்யுங்கள். நாம் செய்யும் தர்மமே நம் துன்பத்தைப் போக்க வல்லது. நெல்லுக்குப் பாய்ச்சிய நீர் வாய்க்கால் வழியாகப் புல்லுக்கும் பாய்வதுபோல, மண்ணுலகில் நல்லவர் ஒருவர் இருந்தாலும் அவருக்காகவே மழை பொழிகிறது. அம்மழை நீரால் உலகில் உள்ள அனைவரும் பயன்பெறுகின்றனர். நாம் வருந்தி அழைத்தாலும் நமக்கில்லாத பொருள் கிடைக்காது. நமக்கான பொருளை வேண்டாம் என்று புறக்கணித்தாலும் அது நம்மைவிட்டு நீங்காது. இந்த உண்மையை அறியாமல் மனிதர்கள் வருந்துகின்றனர்.

*-ஔவையார்-*

நாவலர் பக்கம்: (தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

– ஆறுமுகநாவலர் –

## 15. விரதவியல்

378. விரதமாவது யாது?

மனம் பொறி வழி போகாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விஷேசமாக வழிபடுதல்.

*சிவவிரதம்*

379. சிவ விரதம் எத்தனை?

சோமவார விரதம், திருவாதிரை விரதம், உமா மகேசுவர விரதம், சிவராத்திரி விரதம், கேதார விரதம், கலியாணசுந்தர விரதம், சூலவிரதம், இடப விரதம் என எட்டாம். பிரதோஷ விரதமும் சிவ விரதம்.

380. சோமவார விரதமாவது யாது?

கார்த்திகை மாசமுதல் சோமவாரம் தொடங்கிச் சோமவாரந்தோறும் சிவபெருமானைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் உபவாசம் உத்தமம்; அது கூடாதவர் ஒருபொழுது இரவிலே போசனம் செய்யக்கடவர்; அதுவுங் கூடாதவர் ஒரு பொழுது பகலிலே பதினைந்து நாழிகையின் பின் போசம் செய்க இவ்விரதம் வாழ்நாளளவாயினும், பன்னிரண்டு வருஷ காலமாயினும், மூன்று வருஷ காலமாயினும், ஒரு வருஷ காலமாயினும் அநுட்டித்தல் வேண்டும். பன்னிரண்டு மாசத்திலும் அநுட்டிக்க இயலாதவர் கார்த்திகை மாசத்தில் மாத்திரமேனும் அநுட்டிக்கக் கடவர். (உபவாசம்- உணவின்றியிருத்தல்)

381. திருவாதிரை விரதமாவது யாது?

மார்கழி மாசத்துத் திருவாதிரை நக்ஷத்திரத்திலே சபாநாயகரைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் உபவாசம் செய்தல் வேண்டும். இவ்விரதம் சிதம்பரத்தில் இருந்து அநுட்டிப்பது உத்தமோத்தவம்.

382. உமாமகேசுவர விரதமாவது யாது?

கார்த்திகை மாசத்துப் பௌர்ணமியிலே உமாமகேசுவர மூர்த்தியைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் ஒருபொழுது பகலிலே போசனம் செய்யக் கடவர்; இரவிலே பணிகாரம், பழம் உட்கொள்ளலாம்.

383. சிவராத்திரி விரதமாவது யாது?

மாசிமாசத்துக் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி திதியிலே சிவபெருமானைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில், உபவாசம் செய்து, நான்கு யாமமும் நித்திரையின்றிச் சிவபூசை

செய்தல் வேண்டும். நான்கு யாமம் பூசையும் அவ்வக்காலத்திற் செய்வது உத்தமம்; ஒரு காலத்திற் சேர்த்துச் செய்வது மத்திமம், பரார்த்தம், ஆன்மார்த்தம் என்னும் இரண்டினும், சிவராத்திரி நான்கு யாம பூசையிலே சூரிய தேவர் முதலிய பரிவாரங்களுக்கும் சோமாஸ்கந்த மூர்த்தி முதலிய மூர்த்திகளுக்கும் பூசை செய்ய வேண்டுவதில்லை. பரார்த்தத்திலே மகாலிங்கம் முதலிய மூலமூர்த்திகளுக்கும் ஆன்மார்த்தத்திலே மகாலிங்கத்துக்கும் மாத்திரம் பூசை செய்யக் கடவர். பரார்த்தம், ஆன்மார்த்தம் என்னும் இரண்டினும் விநாயகக் கடவுளுக்கு மாத்திரம் நான்கு யாமமும் பூசை செய்யலாம். சண்டேசுவர பூஜை நான்கு யாமமும் செய்தல் வேண்டும். சிவ பூசையில்லாதவர், நித்திரையின்றி, ஸ்ரீ பஞ்சாட்சர செபமும் சிவபுராண சிரவணமும் செய்து, நான்கு யாமமும் சிவாலய தரிசனம் பண்ணல் வேண்டும். இதில் உபவாசம் உத்தமம்; நீரேனும் பாலேனும் உண்பது மத்திமம்; பழம் உண்பது அதமம்; தோசை முதலிய பணிகாரம் உண்பது அதமாதமம்; சிவராத்திரி தினத்திலே இராத்திரியில் பதினான்கு நாழிகைக்கு மேல் ஒரு முகூர்த்தம் லிங்கோற்பவ காலம், நான்கு யாமமும் நித்திரை ஒழிக்க இயலாதவர், லிங்கோற்பவ காலம் நீங்கும் வரையுமாயினும் நித்திரை ஒழித்தல் வேண்டும். இக்காலத்திலே சிவ தரிசனம் செய்வது உத்தமோத்தமம் புண்ணியம். இச்சிவராத்திரி விரதம் சைவசமயிகள் யாவராலும் ஆவசியகம் அநுட்டிக்கத்தக்கது.

**384. கேதார விரதமாவது யாது?**

புரட்டாதி மாசத்திலே சுக்கிலபக்ஷ அட்டமி முதல் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி ஈறாகிய இருபத்தொரு நாளாயினும், கிருஷ்ணபக்ஷப் பிரதமை முதற் சதுர்த்தசி ஈறாகிய பதினான்கு நாளாயினும், கிருஷ்ணபக்ஷ அட்டமி முதல் சதுர்த்தசி ஈறாகிய ஏழு நாளாயினும் கேதாரநாதரைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் இருபத்தோரிழையாலாகிய காப்பை ஆடவர்கள் வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலும் கட்டிக்கொண்டு, முதலிருபது நாளும் ஒவ்வொரு பொழுது போசனம் செய்து, இறுதி நாளாகிய சதுர்த்தசியிலே கும்ப ஸ்தாபனம் பண்ணிப் பூசை செய்து, உபவசித்தல் வேண்டும். உபவசிக்க இயலாதவர் கேதாரநாதருக்கு நிவேதிக்கப்பட்ட உப்பில்லாப் பணிகாரம் உட்கொள்ளக் கடவர்.

**385. கலியாணசுந்தர விரதமாவது யாது?**

பங்குனி மாசத்து உத்தர நக்ஷத்திரத்திலே கலியாண சுந்தரமூர்த்தியைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாம். இதில் ஒருபொழுது இரவிலே பரமான்னமும் பழமும் உட்கொள்ளல் வேண்டும்.

**386. சூல விரதமாவது யாது?**

தை அமாவாசையிலே இச்சா ஞானம் கிரியா சக்தி வடிவாகிய சூலாயுதத்தைத் தரித்த சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாம். இதில் ஒருபொழுது பகலிலே போசனம் செய்தல் வேண்டும்; இராத்திரியில் ஒன்றும் உட்கொள்ளக்கூடாது.

**387. இடப விரதமாவது யாது?**

வைகாசி மாசத்துச் சுக்கிலபக்ஷ அட்டமியிலே இடப வாகனாரூடராகிய சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாம். இதில் ஒருபொழுது பகலிலே போசனம் செய்தல் வேண்டும்.

(தொடரும்...

# தெய்வம் தந்த வீடு

– திரு க. நல்லையா அவர்கள் –

ஒரு ஊரிலே ஒரு அம்மா இருந்தார். அவருக்கு இரண்டு மகன்களும் ஒரு மகளும் இருந்தனர். வசதியான குடும்பம். மூத்த மகனுக்கு வசதியான குடும்பத்தில் வரன் பார்த்து திருமணம் செய்து வைத்தார். மகளுக்கும் நல்ல வசதியான குடும்பத்தில் திருமணம் செய்து வைத்தார். அதேநேரம் தன் இளைய மகனுக்கு தனக்கு எடுபிடி வேலைகளைச் செய்யக்கூடிய ஒரு பெண்ணை ஏழைக்குடும்பத்திலிருந்து திருமணம் முடித்து வைத்தார்.

மகளோ புகுந்த இடத்தில் ஒருவரையும் மதிக்காமல் நடந்து பிறந்த வீட்டிற்கு வாழாவெட்டியாக திரும்பி வந்துவிட்டாள். தாயும் மகளும் சேர்ந்து இளைய மகனின் மனைவியை மிகவும் கொடூரமாக நடத்தியதோடு கஷ்டமான வேலைகளையும் செய்வித்துக்கொண்டு வந்தனர். இளைய மருமகளோ அதிகாலை தொடக்கம் இரவுவரை வேலை செய்வதோடு மட்டுமல்லாது சிறந்த கடவுள் பக்தியோடும் எல்லோருக்கும் பணிந்து மரியாதை செலுத்தி வாழ்ந்து வந்தாள். இருந்தபோதிலும் விதியின் விளையாட்டும் நடந்துகொண்டே இருந்தது. பல வருடங்கள் கடந்த பின்பும் அவளுக்கு பிள்ளைப் பாக்கியம் இல்லாமல் போகவே அதனைச் சுட்டிக் காட்டி அவளின் மாமியார் தன் மகனுக்கு இரண்டாவது திருமணம் செய்து வைக்க முயற்சி எடுத்தார். இதனை அறிந்த இளைய மகன் அதிர்ச்சி அடைந்து இதற்கு மறுத்து விட்டான். இளைய மகனின் மனைவி வீட்டில் இருப்பதால் தான் மகனுக்கு இரண்டாந் திருமணம் செய்ய முடியாமல் இருக்கின்றது. அவளை விரட்டி விட்டால் வசதியான இடத்தில் திருமணம் செய்து வைக்கலாம் எனத் தாய் எண்ணினாள். "நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்றை நினைக்கும்" என்பது போன்று பல வருடங்களின் பின்பு அவ்வீட்டில் ஒரு நல்ல நிகழ்வு இடம்பெற்றது.

இறையருளால் இளைய மகனின் மனைவி கர்ப்பவதியானாள். அவளின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஆனாலும் அவளது மாமியும் மைச்சாளுமாக சேர்ந்து இவளை வீட்டைவிட்டு வெளியே விரட்டி விட்டனர். அவர்களின் மனம் அந்தளவிற்கு கல்லாகிப் போய் இருந்தது. கர்ப்பவதியான மருமகளோ மிகவும் கஷ்டப்பட்டாள். இறைவனை நோக்கியே அவளின் எண்ணம் வலுப்பெற்று இருந்தது. தன்னால் இயன்றளவு தன் உடலைக் காத்து வந்தாள். ஒருநாள் இவள் தெருவீதியால் நடந்து சென்றுகொண்டிருந்தவேளை திடீரென மயங்கி விழுந்து விட்டாள். அப்போது அந்த வழியால் வந்த வசதிபடைத்த குடும்பத் தம்பதியர் இவளை கண்டு உடனடியாக வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். இறைவனின் அருட்பார்வை என்றுமே அவளைக் காத்து வந்தது. இந்த நிலையில் அவளுக்கு ஒரு ஆண் மகவு பிறந்தது. தனது நிலைமையைக் கூறி அப்பிள்ளையை வசதியான தம்பதியிடம் ஒப்படைத்தாள். ஆனால் தம்பதியரோ அவ்விருவருக்குமான ஒரு வீட்டை அன்பளிப்புச் செய்து அவளுக்கு வேண்டிய தேவைகளையும் மிக மகிழ்வோடு செய்து கொடுத்தனர்.

இதே நேரம் அப்பிள்ளையின் அப்பாவோ தன் மனைவியைத் தேடி காடு, மேடு, பள்ளம் எல்லாம் அலைந்து திரிந்து களைத்து விட்டான். தனது குடும்பத்தை மிகவும்

வெறுத்துவிட்டான். அதேபோல அவனது வீட்டில் தாயும் மகளும் சேர்ந்து செய்யும் பல கொடுமைகளை சகிக்க முடியாமல் அவர்களின் மூத்த மருமகள் இவர்களை வீட்டை விட்டு துரத்தி விட்டாள். வேறு வழியில்லாமல் ஊரெல்லாம் திரிந்து அலைந்து பசியைப் போக்க களவுகள் செய்து பொதுமக்களால் வெறுத்து ஊரை விட்டு ஒதுக்கிவிட்டனர். இப்படியான பல துன்பங்களை அனுபவித்து தமது பிழைகளை ஒவ்வொன்றாக எண்ணி வருந்தினர். பசியைப் போக்க பிச்சை எடுக்க வேண்டிய நிலைக்கும் ஆளாகினர். இதனையே "தன்வினை தன்னைச் சுடும்" என்று பெரியோர் கூறியிருப்பது அவர்களின் நினைவில் அடிக்கடி வந்து உதித்தது.

இளைய மகனோ ஒருவாறாக தன் மனைவி இருக்கும் இடத்தைக் கண்டறிந்தான். அங்கு சென்று தனது தவறையும் வருத்தத்தையும் தெரிவித்து அந்த வீட்டில் மிகவும் சந்தோசமாகத் தன் குடும்ப வாழ்க்கையை ஆரம்பித்தான். அங்கு அவர்களின் வாழ்க்கை மேலும் உயர்வடைந்து சென்றது. இவை அனைத்தும் இறைவனால் அளிக்கப்பட்ட பரிசாகும் என எண்ணினர். உணவு தேடி அலைந்த அவர்களின் தாய், சகோதரி என்போர் அவ்விடம் வந்து சேர்ந்தனர். இவர்களின் துன்பத்தைக் குறிப்பால் உணர்ந்த மருமகள் அவர்களை வரவேற்று தன் தாயைப்போல பராமரித்து இன்பமயமாய் தெய்வம் தந்த வீட்டில் வாழ்க்கையை நடாத்தினர்.

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்"

## அருள் தாகம்

ஒரு சீடன் தன் குருவிடஞ் சென்று "சுவாமி! தமியேனிற்கு ஞானம் புகட்டுதல் வேண்டும்" என்றான். குரு அந்த இளைஞனை நோக்கி எப் பதிலும் கூறாமல் உதட்டுக்குட் புன்னகை செய்து வாளாவிருந்தார். இளைஞன் அடுத்தடுத்து அவரிடம் சென்று தன் வேண்டுகோளைச் சமர்ப்பித்து வந்தான், மிக வற்புறுத்தியும் வேண்டிக் கொண்டான். ஆயின் சீடனது நிலைமையைக் குரு நன்றாக அறிவார். ஒரு நாள் வெப்பமிகுதியான நண்பகற் பொழுதில் பெரியார் இளைஞனை ஆற்றில் நீராட வருமாறு அழைத்தார். அவனும் உடன்பட்டுச் சென்றான். ஆற்றில் இறங்கி முழுகினான். பெரியாரும் ஆற்றில் இறங்கி இளைஞனை நீருள் அமுக்கிப் பிடித்துக் கொண்டார். சிறிது நேரத்தில் அவன் மூச்சு வாங்க முடியாமற் கிடந்து தத்தளித்தபோது கையை விட்டார். அவன் நீருக்கு வெளியே வந்து மூச்சு வாங்கிக்கொண்ட பின் "நீ நீருள் இருந்து தத்தளித்தபோது எது தேவையாயிருந்தது?" எனக் கேட்டார் பெரியார். சுவாசிப்பதற்குக் காற்றுத் தேவையாயிருந்தது என்றான் இளைஞன் "அஃதேபோல, நீ கடவுளை அறிதற்கும் ஆவல் கொள்ளுவையேல் அவரை அடைவாய்" என்று பதிலிறுத்தார் பெரியார். இத்தகைய அருட்தாகம் இல்லாமையாலேயே நாம் அந்த அருளைத் துய்க்காமலிருக்கின்றோம். பொன்னை, மாதரைப் பூமியைப் போற்றுகின்றோமேயன்றி இறைவனைப் போற்றுகின்றிலோம். இப்பொருட்களின் மீதுள்ள தாகம் ஒழிந்து இறையருட்டாகம் ஏற்பட்ட அன்றே நாம் உய்தி நெறி கடைப்பிடித்தவராவோம். அற்றேல் உலகம் முழுவதும் பெற்றும் இறையருள் பெற்றிலோமாயின் அநித்தியத்தைப் பற்றி நித்தியத்தைக் கைவிடும் கசடராவோம்.

-சிவதொண்டன்-

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் தொடர்ச்சி...

| | | | |
|---|---|---|---|
| பத்மநாதன் குணசுந்தரி | | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| பாலசுந்தரம் கணேசலிங்கம் | | ஆனைக்கோட்டை | 35000. 00 |
| கு. குலதிலகமணி (கனடா) | | பருத்தித்துறை | 50000. 00 |
| கா. செல்லத்துரை | டச்சுறோட் | உடுவில் | 10000. 00 |
| க. ஜெயராணி | | உடுப்பிட்டி | 5000. 00 |
| Dr கஸ்தூரி விஸ்வநாதன் | | கனடா | 10000. 00 |
| ம. இராசமணி | | அல்வாய் வடமேற்கு | 10000. 00 |
| சுரேஷ் வாகேஸ்வரி | கோயிற்கடவை | துன்னாலை | 6000. 00 |
| தி. பத்மதீபன் | | உரும்பராய் | 1000. 00 |
| சாந்தி அமிர்தலிங்கம் | | இணுவில் கிழக்கு | 1000. 00 |
| K. குமரன் | | வதிரி | 5000. 00 |
| பொ. சந்திரமோகன் | ஓசன் ரேடர்ஸ் | யாழ்ப்பாணம் | 7000. 00 |
| வைத்தியநாதக்குருக்கள் சண்முகப்பிரியா | | பொலிகண்டி | 2000. 00 |
| திருமதி சாரதா சுந்தரேசசர்மா | | பொலிகண்டி | 2000. 00 |
| சோபிகா சுந்தரேசசர்மா | | பொலிகண்டி | 1000. 00 |
| இ. சிவராசாமூலம் செ. ஜெயகாந்தன் | | டென்மார்க் | 25000. 00 |
| பஞ்சாட்சரம் தர்ஷிகா | | கனடா | 5000. 00 |
| இ. தர்ஷிகா | | சிறுப்பிட்டி | 1000. 00 |
| இராச இராகுலன் | | சுண்ணாகம் | 2000. 00 |
| சுதாகர் காயத்திரி குடும்பம் (பிரான்ஸ்) | | சுண்ணாகம் | 5000. 00 |
| க. சிவராசா | | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| வி. ஜீவானந் | | வல்வை (பிரான்ஸ்) | 8000. 00 |
| சிவ முத்துலிங்கம் | இந்துசமயப்பேரவை | கனடா | 20000. 00 |
| த. சரணா | | மட்டக்களப்பு | 5000. 00 |
| த. நிவேதன் | | மட்டக்களப்பு | 1000. 00 |
| ச. காசிப்பிள்ளை | | மட்டக்களப்பு | 1000. 00 |
| ஜெ. ரஞ்சன் | | அராலி | 5000. 00 |
| க. சுஜீபன் | | லண்டன் | 2000. 00 |
| K. கந்தவனம் | | லண்டன் | 10000. 00 |
| வல்லிபுரம் திலீபன் | | கரவெட்டி கிழக்கு | 1500. 00 |
| திருமதி உமா குமாரலிங்கம் | | நோர்வே | 25000. 00 |
| கெ. தியாகராஜா | | கோண்டாவில் மேற்கு | 2000. 00 |
| ந. வாகீசன் | | கோண்டாவில் மேற்கு | 1000. 00 |

| | | |
|---|---|---|
| ந. நர்மதா | சங்கானை | 2000. 00 |
| ஜெ. மாதினி | சங்குவேலி வடக்கு | 2000. 00 |
| திரு ஞானவேல் (சந்நிதி முருகன் துணை) | லண்டன் | 9000. 00 |
| செல்வி க. பாலாம்பிகை | கரவெட்டி | 1000. 00 |
| திரு கந்தசாமி குடும்பம் | இணுவில் | 1000. 00 |
| T. சத்தியநேசன் குடும்பம் உடுவில் | சுண்ணாகம் | 5000. 00 |
| ம. பிரசாந் | ஊரெழு | 2000. 00 |
| ந. குகசங்கர் | புத்தூர் | 1000. 00 |
| இ. சசிமதன் | நெல்லியடி | 3000. 00 |
| மு. அருந்தவராஜா குடும்பம் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| க. ரூபா | ஊர்காவற்துறை | 2000. 00 |
| மு. புனிதலிங்கம் | ஊர்காவற்துறை | 2000. 00 |
| இ. முத்துலிங்கம் செட்டியார் | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| வி. விஜிதரன் | நவக்கிரி | 1000. 00 |
| சந்திரன் சாளினி | காரைநகர் | 30000. 00 |
| கா. ஆதித்தன் | அச்சுவேலி | 10000. 00 |
| ச. தவபாலன் | கதிரிப்பாய் | 10000. 00 |
| லிங்கம் கூல்பார் | யாழ்ப்பாணம் | 30000. 00 |
| திரு துளசிங்கம்மூலம் ஜெயராணி | லண்டன் | 20000. 00 |
| வே. விஜயகுமார் | நீர்வேலி தெற்கு | 1000. 00 |
| யமுனா விவேகானந்தன் | புலோலி மேற்கு | 2000. 00 |
| அ. சுப்பிரமணியம் நவக்கிரி | புத்தூர் | 3000. 00 |
| சி. கதிர்காமத்தம்பிமூலம் வடிவேல் சின்னத்துரை | அவுஸ்திரேலியா | 12000. 00 |
| சி. கதிர்காமத்தம்பிமூலம் பார்வதிப்பிள்ளை சின்னத்துரை | அவுஸ்திரேலியா | 12000. 00 |
| சி. கோகுலதாசன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திருமதி ஆனந்தி சற்குருநாதன் | அவுஸ்திரேலியா | 12500. 00 |
| T. நாகராஜா | நல்லூர் | 1000. 00 |
| திருமதி G. விக்னராஜேஸ்வரன் | நயினாதீவு - 3 | 1000. 00 |
| இ. தனலட்சுமிமூலம் அமரர் திருமதி இராமலிங்கம் நினைவாக | | 1000. 00 |
| ப. நாகேஸ்வரி | மலேசியா | 2500. 00 |
| ச. தியாகராஜா | கைதடி | 1500. 00 |
| க. நடேசு (தெணியான்) வதிரி | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| கு. தியாகராஜசர்மா | நீர்வேலி | 2மூடை அரிசி 3000. 00 |
| சி. மதனகுமார் ஜெயந்தா | வரணி | 3000. 00 |
| சி. மனோரஞ்சன் | வரணி | 1000. 00 |
| சி. கந்தர் | வரணி | 1000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடர்ஸ் | யாழ்ப்பாணம் | 4புட்டி பருப்பு |
| திரு சபாரட்ணம் குடும்பம் | மலேசியா | 50000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் ஆத்தியடி | பருத்தித்துறை | 5000. 00 |

(தொடரும்...

# மகா சிவராத்திரி சிறப்பு

– திரு ஆர்.வீ. கந்தசாமி அவர்கள் –

சிவனுடைய பெருமையறிந்த அரிஅயன் மட்டுமன்றி தேவர்கள், ரிஷிகள், சித்தர்கள், பூதகணங்கள் மற்றும் சிவகணங்கள் ஆகியோர் சிவனுக்கு பூசை செய்த ராத்திரி சிவராத்திரி என்பதுடன் துக்கத்தை நீக்கி சுகத்தைப் பெறும் ராத்திரி எனவும் சிவராத்திரி கருதப்படுகின்றது. ஏனைய ராத்திரிகள் யாவும் சகல உயிர்களுக்குமுரிய சாதாரண ராத்திரிகளேயாகும்.

"அரியும் யானும் முன்தெடும் அவ்வனற்கிரி அலை
கிரியெனும்படி நின்றதால் அவ்வொளி கிளர்ந்த
இரவதே சிவராத்திரி ஆயினது"

என்று பிரமதேவரே கந்தபுராணத்தில் கூறியுள்ளார்.

சிவராத்திரி ஐந்து வகைப்படும். அவையாவன:

1. மகா சிவராத்திரி :மாசிமாத தேய்பிறை சதுர்த்தசி நாள்.
2. யோக சிவராத்திரி :சதுர்த்தி கூடியிருக்கும் திங்கட்கிழமை
3. நித்திய சிவராத்திரி :சதுர்த்தி கூடியிருக்கும் வளர்பிறை, தேய்பிறை நாட்கள்.
4. மாத சிவராத்திரி :மாதந்தோறும் வருகின்ற சிவராத்திரி.
5. பட்ச சிவராத்திரி :தைமாத பூரணை நாளிலிருந்து 13 நாட்கள் விரத அனுஷ்டானம்.

ஒவ்வொரு வருடமும் மாசிமாதம் வரும் தேய்பிறை சதுர்த்தசி நாள் மகா சிவராத்திரி தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. மகா சிவராத்திரி பற்றி புராணக்கதைகள் பலவாறு கூறுகின்றன.

திருமாலும் பிரம்மாவும் அடிமுடி தேடியும் காணாது அருட்பெரும் சுடராய் திருவண்ணா மலையில் பேரொளிப் பிழம்பாக சிவபெருமான் தோன்றிய நாள் மகா சிவராத்திரி எனவும், ஒரு வில்வ மரத்தடியில் அமர்ந்த பரமசிவனும் பார்வதியும் பேசிக்கொண்டிருக்க அம்மரத் தின்மேலே குரங்கொன்று நித்திரையின்மையால் நான்கு சாமங்களும் வில்வ இலைகளைப் பறித்து பரமசிவன்மீதும் பார்வதிமீதும் வீசியபடி இருந்தது. நான்கு சாமங்களும் நித்திரையின்றிய அந்தக் குரங்கு தங்கள் மீது அர்ச்சித்த வில்வ தாளங்களை அன்புடன் ஏற்ற ஈசனும் மறுபிறப்பில் சக்கரவர்த்தியாக பிறக்க அக்குரங்கிற்கு அருள்பாலித்தார். எனினும், மறுபிறப்பிலும் தான் வாழும் காலங்களில் குரங்குமுகத்துடனேயிருக்க வேண்டுமென அக்குரங்கின் விருப்பத்தை ஏற்று அப்படியேயாகுக! என ஆசீர்வதித்தார். அதன்படி அக்குரங்கு மறுபிறவியில் முசுகுந்தனாகப் பிறந்து சோழகுலப் புகழ்பரப்பி சக்கரவர்த்தியாக ஆட்சி புரிந்ததாக புராணக்கதைகள் கூறுவதன் மூலம் சிவராத்திரியின் சிறப்பையும் மகிமையையும் நாம் அறியக் கூடியதாகவுள்ளது. மகா சிவராத்திரியன்று சிவபெருமான் பிரபஞ்சம் முழுவதையும் ஒடுக்கி தாமே ஏகமாய் நின்று சகல உயிர்களுக்கும் அருள் புரிவார்.

திருமால், பிரமா ஆகியோர் தாம் காணமுடியாத சேவடியை எண்ணி ஐந்தெழுத்தை ஓதி வழிபட்டனர் எனக்கூறும்

"கார்வணன் நான்முகன் காணுவ தற் - கொணாச்
சீர்வனச் சேவடி செவ்வி நாடொறும்

பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வணம் ஆவன அஞ்செ ழுத்துமே!"

என்ற சம்பந்தர் தேவாரமும்,

"திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநாமம் அறியவோர் அந்தணனாய் ஆண்டு கொண்டான்"

என்று தொடரும் திருவாசகச் செய்யுளும்,

"வையகம் பொலிய மறைச்சிலம் பார்ப்ப
மன்றுளே மாலயன் தேட"

என்று தொடரும் பெரியபுராணப் பாடலும் கூறும் புகழ்மிக்க சிறப்பான அற்புதம் நிறைந்த ராத்திரியே மகா சிவராத்திரி ஆகும்.

நூறு ஏகாதசி விரதம் அனுஷ்டிக்கப்படுவதைக் காட்டிலும் ஒரு மகா சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிப்பது சிறந்த பலனைத் தரும் என்பதுடன் சிவபெருமானை உள்ளன்போடு வழிபட்டு இருப்பவர்கள் முக்திநலம் பெறுவார்கள் என்பது நம்முன்னோர் வாக்கு ஆகும்.

எனவே மகா சிவராத்திரி நாளில் விரதம் அனுஷ்டித்து,

முதற் சாமம் - சோமாஸ்கந்தர்
இரண்டாம் சாமம் - தட்சணாமூர்த்தி
மூன்றாம் சாமம் - லிங்கோத்பவர்
நான்காம் சாமம் - சிவபெருமான்

ஆகிய தெய்வங்களை வணங்கி சீரும் சிறப்புமாக வாழ அருள்நலம் பெறுவோம். சிவபெருமானின் சிறப்புப்பற்றி,

"உண்ணாமலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணி திகழ
மண் ஆர்ந்தன அருவித்திரள் மழலை முழவு அதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே"

என்று "நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்" ஞானசம்பந்தர் அண்ணலின் சிறப்பை அளந்தெடுத்து அருளியுள்ளார்.

"அன்பே சிவம்"

## ஆன்மீகச் சிந்தனை

முழுமனத்துடன் இறைவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள். இறைவனின் நாமத்தை ஜபம் செய்வதில் (மந்திரத்தில்) உங்களுக்கு நம்பிக்கை இல்லாவிட்டால் பரவாயில்லை மனதை அடக்குவதற்குத்தான் மந்திரம் தேவை. மனதை அடக்குவதில் வெற்றி கண்ட ஒருவனுக்கு மந்திர ஜபம் அதிகம் தேவையில்லை. ஆரம்ப காலத்தில் மந்திரத்தை ஜபம் செய்வது மிகவும் பெரிய அளவில் உங்களுக்கு உதவியாக இருக்கும். உங்களுக்கும் மந்திரத்தில் நம்பிக்கை இல்லாவிட்டால் உங்களுக்குப் பிடித்த இறைவனின் பெயர்களில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதைத் திரும்பத் திரும்பச் சொல்லுங்கள். இறைவன் எல்லோருக்கும் பொதுவானவர், தம்மை அழைப்பவர்களிடம் அவர் தவறாமல் வருகிறார்.

# ஸ்ரீ கருட புராணம்

(தொடர்ச்சி...



– திரு இரா. செல்வவடிவேல்

## எமலோகத்தில் நடப்பது

எம புரிக்குச் செல்லும் மார்க்கத்தைப் பற்றி ஸ்ரீமத் நாராயணன் ஏற்கனவே கூறியிருந் தாலும் கருடபகவான் மேலும் விளக்கமாகக் கூறுமாறு வேண்டுகிறார். உலக நாயகனும் மனமுவந்து கூறுகின்றார்.

எமபுரிக்குச் செல்லும் பாதை சிறிது தூரம் வரை செம்பை உருக்கி வார்த்தது போன்று நெருப்பைக் கக்கிக்கொண்டிருக்கும். அதற்கு அப்பால் சிறிது தூரம் இரட்டை முட்களும் எரியும் கொள்ளிகளுமாக இருக் கும். மேலும் சிறிது தூரம் குளிர் பிரதேசம் குறுக்கிடும். அங்கு கடுங்குளிர் காணப்படும்.

பூலோகத்திற்கும் எமலோகத்திற்கு மிடையே எண்பதாயிரம் காதவழி தூரம் என் பதை ஏற்கனவே கண்டோம். அவ்வளவு தூர மும் கடந்து செல்பவர் பாவம் செய்தவராக இருந்தால் அந்த உயிருக்கு குடிப்பதற்கு தண்ணீரும் கிடைக்காது. பல கொடுமைகளை ஏற்கவேண்டி இருக்கும். இதைக் கூறிய நாரா யணர் எமலோகத்தின் தன்மையை விவரிக் கிறார். எமலோகமானது தேவர்கள் அசுரர்கள் போன்ற யாராலும் சிதைக்க முடியாத அளவு வஜ்ஜிரம் போன்று உறுதி வாய்ந்த ஒரு பெரிய நகரமாகும். அந்த நரகத்தின் மத்தி யில்த்தான் எமதர்மராஜன் அரண்மனை உள் ளது. அந்த அரண்மனையினுள்ளே ஆயிரக் கணக்கான விவரங்கள் பதிந்த தூண்கள் நிறுத்திய மண்டபமும் மாளிகையும் அமைந் திருக்கும்.

அந்த மண்டபத்தில் எமதூதர்கள் கைகுவித்து பணிவுடன் ஒரு பக்கமாக நின்றிருப்பார். மறுபுறம் பலவித நோய்கள் பயங்கர உருவத்துடன் வரிசையாக நின்றிருக் கும். அவர்களுக்கு மத்தியில் எமதர்மராஜன் வெகு கம்பீரத்துடன் மகிழ்ச்சியுடன் வீற்றிருப் பார். அவர் தோற்றம் மற்றவர் கண்டு அஞ்சும்

*போன விநாடி திரும்பாது.*

படியாக இருக்கும். அந்த மண்டபத்திற்கு அருகில் அழகு செய்யப்பட்ட இன்னொரு அரண்மனை உள்ளது. அதற்குள்தான் சித்ர குப்தன் வீற்றிருப்பான். அவன் எல்லா உயிர் களும் செய்யும் பாவ புண்ணியங்களை ஒன்று விடாமல் கணக்கெழுதிக் கொண்டிருப்பான். அவனுடைய வேலையே அதுதான். அதனால் அவன் எழுதும் கணக்கில் ஒரு சிறு தவறும் உண்டாகாது.

சித்ரகுப்தனுடைய அரண்மனைக்கு கிழக்குப் பக்கமாக காச்சலுக்கும் (ஜுரத் துக்கும்) தெற்குப் பக்கமாக சூலை மற்றும் வைசூரி நோய்களுக்கும் மேற்குப் பக்கத்தில் அசீரணத்துக்கும் வடக்குப் பக்கத்தில் வயிற்று வலிக்கும் தென்கிழக்கில் மயக்கத்துக்கும் தென்மேற்கில் வயிற்றுப் போக்குக்கும் வட மேற்கில் ஜன்னிக்கும் தனித்தனியே மாளிகை கள் உள்ளன. அங்குதான் அவை வசித்துக் கொண்டிருக்கின்றன. (குறித்த நோய்களை ஏற்படுத்தும் நுண்ணுயிர்களின் வாழிடம் பற் றிய விபரங்களாகும்) இந்த நோய்க்காரணிகள் எப்போதும் எமதர்மனுடைய உத்தரவை எதிர்பார்த்து தயார் நிலையிலேயே இருக்கும்.

எமதர்மராஜனின் அரண்மனைக்கு தென்திசையில் பாவஞ் செய்த உயிர்கள் பற்பல முறைகளில் துன்புறுத்தப்படும் இடம் உள்ளது. அங்கு சில உயிர்கள் உலக்கை யால் அடித்துத் துன்புறுத்தப்படுவர். வேறுசில கூரிய கொடிய ஆயுதங்களால் குத்தி சித்திர வதைக்குட்படும். சிலரை செக்கிலிட்டும் வதைப் பார். இன்னும் சிலர் இரும்புக் கம்பிகளில் கோர்க்கப்பட்டு கொழுந்துவிட்டு எரியும் நெருப் பில் வாட்டப்படுவர். மேலும் சிலர் நெருப்புக் குண்டத்தில் போடப்பட்டு கருகிப் போவர்.

அங்கு ஒரு பக்கமாக செம்பினால் செய்யப்பட்ட ஆண், பெண் பதுமைகள் நெருப்பில் சூடேற்றப்பட்டுக் கொண்டிருக்கும். பிறர் மனைவியோடு கூடி மகிழ்ந்த ஆண்களை எமதூதர்கள் இழுத்துச் சென்று எரிந்துகொண் டிருக்கும் பெண் பதுமையோடு ஒன்று சேர்ப் பார். அதைப் போன்றே கணவனையன்றி வேறு ஆண்களுடன் கூடிக்கலந்த பெண்களை ஆண் பதுமையோடு ஒன்று சேர்ப்பார். பூவுலகில் ஆண்களும், பெண்களும் ஒழுக்க நெறியுடன் வாழ வேண்டுவது முக்கியமாகிறது. இல்லை யெனில் இதுபோன்ற கடும் தண்டனைக்கு உள்ளாக நேரும்.

பூவுலகில் வாங்கிய கடனைத் திருப் பிக் கொடுக்காதவர்கள் எமதூதர்களால் அடித் துத் துன்புறுத்தப்படுவர். இவ்வாறு பாவம் செய்தவர்கள் அவர்கள் செய்த பாவத்தின் தன்மைக்கேற்ப தண்டனைக்குட்படுத்தப்படுவர்.

அப்படியின்றி ஒருவர் ஒழுக்க நெறி யுடன் வாழ்ந்து தாம் செய்ய வேண்டிய தான தர்மங்களையும் தவறாது செய்தவர் சொர்க்க லோகத்தை அடைந்து இன்புறுகின்றனர்.

(தொடரும்...

இறைவனை மறந்துவிடுவதால்த்தான் மனிதன் துன்பப்படுகிறான். உலகில் மனிதனுக்கும் பலவகையான துன்பங்கள் ஏற்படுகின்றன. ஆனால் இயல்பாகவே அவை நிரந்தரமானவை அல்ல. இறைவன் தனக்கு மிகவும் நெருக்கமானவன் என்ற எண்ணம் கொண்டவன் உலகத் துன்பங்களால் அதிக அளவில் பாதிக்கப் படுவதில்லை. இறைவனை உங்கள் தாயாகவோ, அல்லது தந்தையாகவோ நினையுங்கள். இறைவனின் திருநாமம் எல்லா இடையூறுகளையும் தகர்த்தெறிந்துவிடும் என்பதில் பூரண நம்பிக்கையோடு இருங்கள். நீங்கள் அழ நினைத்தால் இறைவா எனக்கு உன்னிடம் ஆழ்ந்த நம்பிக்கையையும், பக்தியையும் தந்தருள்க, எனக்கு உன் தரிசனத்தைக் கொடு என்று அவன் முன்னால் அழுங்கள்.

# உண்டு உறங்குவதல்லால் வேறொன்றும் கண்டறியேன் பரா பரனே

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

"உண்டு உறங்குவதல்லால் வேறொன்றும் கண்டறியேன் பரா பரனே" என்னும் அடியான் கூற்று உட்பொருள் செறிந்து ஆழமாக சிந்திக்க வைக்கின்றது. அந்த அடியான் தான் உண்டேன், உறங்கினேன், எம்மைப் படைத்த இறைவனை எண்ணிலேன், அவன் படைத்த உயிரினங்களுக்கு உதவி செய்கிலேன் அவமே காலத்தைக் கழிப்பதாக எண்ணுகிறானென எமது மனக் கண்ணில் படுகின்றது. எது எப்படியாயினும் அடியான் இறைவனைக் காணத் துடி துடிக்கின்றான் என்ற உண்மைப் பொருள் புலப்படுகின்றது. பூமியில் பிறந்த மனிதர்களுக்கும் இவ்வாக்கியம் உண்மையைக் கூறி வைப்பதாக அமைகின்றது.

வினையை ஒழிப்பதற்குப் பிறந்த மனிதன் பூமியில் பிறந்து, வந்த நோக்கம் அறியாது பொருள் தேடுவதில் கண்ணும் கருத்துமாக வாழ்கின்றான். நல்லறமாகிய இல்லறத்தில் வாழ்கின்ற மனிதன் வாழ்க்கையின் தத்துவத்தை உணராது எப்படியும் வாழலாமென எண்ணுகின்றான். இல்வாழ்வானின் கடமையை வள்ளுவப் பெருந்தகை இவ்வாறு கூறுகின்றார்.

"இல்வாழ்வானென்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை"

இல்வாழ்வான் இயல்புடைய பிரமச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி ஆகிய மூவருக்கும் துணையாக உள்ளான் என்பது மேற்பாடலின் பொருளாக அமைந்துள்ளது. இல்லறத்தில் சொல்லப்பட்ட நெறியில் நின்று வாழ்ந்தால் இறைவனை அடையலாமென பொய்யா மொழியர் அடித்துக் கூறுகின்றார். கடவுள் ஒருவன். அவனே எம்மைப் படைத்து, காத்து, அழித்து, அருள் செய்கின்றானென்ற உண்மையை இல்லறவாழ்வில் உணர்ந்து கொள்வான். அதுமட்டுமன்றி "உண்டு உறங்குவதல்லால் வேறொன்றும் கண்டறியேன் பரா பரனே" என்ற கூற்றின் உட்பொருளையும் உணர்ந்து கொள்வான்.

இறைவனின் கைலாயக் காட்சியைக் கண்டு இன்புற்ற திருநாவுக்கரசர் திருவைந்தெழுத்தைத் தினமும் செப்பாதவர்களும், உண்பதன்முன் மலர் பறித்து, இட்டு உண்ணாதவர்களும், தீவண்ணர் புகழைப் பேசாதவர்களும், அனுதினம் கோவிலுக்குச் செல்லாதவர்களும், அருநோய் கெட விபூதியணியாதவர்களும் பெரு நோய்களால் பீடிக்கப்பட்டு, பிறப்பதே தொழிலாகக் கொண்டு இறக்கின்றாரென்பதை பின்வரும் பாடலில் அருளுகின்றார்.

"திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசாராகில்
ஒருகாலும் திருக்கோவில் சூழாராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகில்
அருநோய்கள் கெடவெண்ணீறணியாராகில்
அளியற்றார் பிறந்தவாறேதோ வென்னிற்
பெருநோய்கள் மிக நலியப் பெயர்த்துஞ் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே"

"யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே"
என்ற பாடல்மூலம் தெளியவைக்கின்றார்.

"உண்டு உறங்குவதல்லால் வேறொன்றும் கண்டறியேன் பரா பரனே" என்னும் அடியார்களுக்கு மனம் ஒடுங்கி, புலன் அடங்கி வழிபடும் தலமாக விளங்குவது செல்லச்சன்னிதி என்று கூறினால் மிகையாகாது. அந்த மாயோன் மருகனை மன்றாடி மைந்தனை, வானோர்க்கும் மேலான தேவனை, மெஞ்ஞான தெய்வத்தை அனுதினம் சென்று வழிபட தீராத நோய்கள் நீங்கப்பெற்று எந்நிதியும் கிடைக்குமென்பது உறுதி.

## உதவிகள் இரண்டு

1) பொலநறுவை மாவட்டம் சமன்பிட்டி - கறப்பளை - முத்துக்கல் என்ற கிராமத்திலுள்ள அன்னை ஸ்ரீ சாரதாதேவி அறநெறிப் பாடசாலை,

2) அம்பாறை மாவட்டம் பாணமைப்பற்று - கோமாரி எனும் கிராமத்தில் உள்ள ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை,

ஆகிய இரு இடங்களிலிருந்தும் நேரடியாகவும், கடிதம்மூலம் உதவிகேட்டு வந்த வேண்டுகோள் சுவாமிகளின் தனிக் கவனத்துக்கு வந்தது. தைமாத ஞானச்சுடர் வெளியீட்டு வேளை சிறப்புப்பிரதிமூலம் பெறப்பட்ட தாராள நிதி உதவியினைப் பயன்படுத்தத் தீர்மானித்தார் சுவாமிகள்.

1) பொலநறுவை மாவட்ட முத்துக்கல் கிராம அறநெறிப் பாடசாலைக்கு நேரில் விஜயம் செய்த ஆச்சிரம சுவாமிகள், புதிதாகக் கட்டப்பட்டுவரும் வகுப்பறைக் கட்டிடத்தின் கூரைக்கு சீற்றுக்கள் தேவைப்படுவதை அவர்கள் வேண்டுகோளாக முன்வைத்தனர். அதன்படி லொறிமூலம் 110 அஸ்பெற்ரஸ் சீற்றுகள் 25.01.2015இல் அனுப்பி வைக்கப்பட்டது.

2) அம்பாறை மாவட்டம் - கோமாரியில் அமைந்துள்ள ஸ்ரீ முருகன் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கென 1250மீற்றர் சீருடைத் துணி 07.01.2015இல் நேரடியாக சுவாமிகளால் வழங்கப்பட்டது. அத்துடன் சீருடைகள் தைப்பதற்கான முழுச் செலவையும் ஆச்சிரமமே பொறுப்பேற்கும் எனவும் சுவாமிகள் உறுதியளித்தார்.

ஞானச்சுடர் தைமாத சிறப்புப்பிரதிமூலம் பெறப்பட்ட உதவித்தொகை மூலமே மேற்குறித்த இரு நற்பணிகளும் நிறைவெய்தின என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இதில் பெரும் பங்காற்றிய, திரு சி. பத்மநாதன் (இளைப்பாறிய பிராந்திய முகாமையாளர்- மக்கள் வங்கி), திரு வ சண்முகநாதமுதலி (இளைப்பாறிய முகாமையாளர்- மக்கள் வங்கி) ஆகியோருக்கும், உதவிதனில் பங்குகொண்ட மக்கள் வங்கி ஊழியர்களுக்கும், தைமாத சிறப்புப்பிரதிக்கென உதவிபுரிந்த ஏனையவர்களுக்கும் ஆச்சிரமம் தனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது. இவற்றிற்கெல்லாம் மூலகாரணமான சன்னிதி வேலவனின் அருட்கடாட்சம் அனைவருக்கும் கிட்டவேண்டுமென வேண்டிக் கொள்கிறோம்.

(கட்டுரைத்தொடர் - 05

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## சித்தர்களின் சமுதாய சிந்தனை

01) சமுதாய உணர்வு:

சித்தர்கள் ஆழ்ந்த சமுதாய உணர்வுள்ளவர்களாக இருந்தார்கள். சித்தர்கள் எதைப் பாடினாலும் அதன் அடிப்படையை ஆழ்ந்து சிந்தித்தே பாடியுள்ளனர். ஆரவாரத்திற்கோ, மேலோட்டமான பார்வைக்கோ அவர்கள் பாடல்களில் துளியும் இடமில்லை. சித்தர்களைக் கிளர்ச்சியாளர்கள் என்றே பேராசிரியர் கைலாசபதி தனது ஒப்பியல் இலக்கியம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். சித்தர்கள் மனித குலத்தின் நன்மைக்காகவே உழைத்தார்கள். ஆதலால் அவர்கள் மக்களையோ, உலகத்தையோ, இயற்கைப் பொருள்களையோ நாசமாக்கக் கூடிய தீய சக்திகளைக் கண்டு பிடிக்கவில்லை. இவைகளைக் கண்டுபிடிப்பதில் தங்கள் அறிவையும் காலத்தையும் செலவிட்டு வீணாக்கவில்லை. மனித சமூகம் மகிழ்ச்சியாக வாழ்வதற்கான துறைகளிலே அவர்கள் உழைத்தார்கள்; காலங்கடத்தினார்கள்; கருத்தைச் செலுத்தினார்கள். அவர்கள் தாங்கள் உழைத்து முயன்ற துறையில் வெற்றியும் கண்டனர். சித்தர்களின் கொள்கை தத்துவம் இந்நாட்டிலே பரவினால் மக்களுக்குள் அன்பும் ஒற்றுமையும் வளரும் என்பதில் ஐயமில்லை.

வைதிக சமயங்களின் செல்வாக்கினால் இந்து சமூகத்தில் அறிவியல் சிந்தனையாளர் களாக இருந்த சித்தர்களைச் சமூகம் ஒதுக்கி வைத்தது. இரசாயனம், தாவர சாஸ்திரம், வைத்தியம், வான சாஸ்திரம், உடற்கூறு, சோதிடம் முதலிய பல அறிவியல் துறைகளிலெல்லாம் சித்தர் வாக்குகளே நமது மரபுமுறை விஞ்ஞானத்திற் சிறந்து விளங்குகின்றன. மக்கள் யாவருக்கும் பொதுவான அறிவியல் துறைகளில் ஈடுபட்ட சித்தர்கள் தமது காலத்துப் போலிச் சாத்திரங்கள், சாதிப் பாகுபாடுகள், மூட நம்பிக்கைகள், வைதிகப் பற்று ஆகியவற்றைப் பலவழிகளில் எதிர்த்தார்கள். இவர்களின் எதிர்ப்புக்களைத் தாங்க முடியாதவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மெய்ம்மை வாதிகளான சித்தர்களின் சிந்தனைகளைச் செயல் வடிவம் பெறவிடாமல் தடுத்தார்கள். இவர்களைக் காயசித்திகள், சுயநலமிகள், மாந்திரீகர்கள், சித்தசுவாதீனமற்றவர்கள் என்றெல்லாம் தூற்றினார்கள். சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டார்கள். உன்னதமான அவர்களுடைய விஞ்ஞானப் பரிசோதனைகள் கீழ்த்தரமான மந்திரஜால வித்தைகளாகவும், கண்கட்டு வித்தைகளாகவும் அலட்சியம் செய்யப்பட்டன. இவை யாவற்றின் விளைவாகவும் சித்தர்கள் சமுதாயத்திலிருந்து ஒதுங்கியும் ஒதுக்கப்பட்டும் வாழ்ந்தனர்.

கி.பி. 14-15ஆம் நூற்றாண்டுகளிலிருந்து தமிழகத்திற் சித்தர் கணம் பெருகி வளரக் காண்கிறோம். சித்தர்களில் திருமூலர், சிவவாக்கியர், பட்டினத்தார், பத்திரகிரியார் ஆகிய நால்வரும் 10ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்கள். மற்றையோர் அனைவரும் 14ஆம் 15ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர்களே ஆவார்கள். இஸ்லாமியர்கள் தமிழ் நாட்டின்மீது படையெடுத்து

சில வருட காலம் ஆட்சி செய்தார்கள். இஸ்லாமிய மதத்தில் உருவவழிபாடு கிடையாது. சாதிபேதம் முதலான ஏற்றத்தாழ்வுகளை ஏற்காத சமத்துவ சகோதரத்துவமே இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கை ஆகும். இதன் தாக்கம் தமிழர் சிந்தனையைத் தூண்டியது. இக்காலச் சூழ்நிலையை அடுத்தே சித்தர்கணம் பெருகி சித்தர் பாடல்கள் சாதி சமயம் கடந்து நாடெங்கும் பரவியது.

சமுதாயத்தில் பரவலாகக் குடிகொண்டிருக்கும் சாத்திரம், சம்பிரதாயம், சடங்கு என்பவற்றைச் சாடும் உள்ளத் திட்பம் பெற்றவர்களாகச் சித்தர்கள் திகழ்ந்தார்கள். சாத்திரங் களால் சமுதாயத்திற்கு எவ்வித பயனுமில்லை. சாத்திரங்கள் மக்களிடையே வேற்றுமைகளை உருவாக்குகின்றதே ஒழிய ஒற்றுமையை வளர்க்கவில்லை. ஆகவே சித்தர்கள் சாத்திரங்களைக் கண்டிக்கின்றனர்.

"தத்துவக் குப்பையைத் தள்ளுங்கடி - வேத சாத்திரப்
பொத்தலை மூடுங்கடி
முத்தி பெற ஞான வஸ்து வரக்கண்டு மூட்டிக் கும்மியடி"

என்று வாலைச்சாமி என்ற சித்தர் ஞானக்கும்மி என்ற பாடலிலே குறிப்பிடுகின்றார்.

சாத்திரம் சூத்திரங்கள் எல்லாம் அழுகிப்போன பழங்களுக்குச் சமமானவை. சாத்திரங்களில் நம்பிக்கை வைத்தால் மனதில் சஞ்சலங்கள் அதிகரிக்கும் என்பதை அகப்பேய்ச் சித்தரின் பின்வரும் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

1) "சாத்திர சூத்திரமும் - அகப்பேய்
சங்கற்ப மானதெல்லாம்
பார்த்திடலாகாதே - அகப்பேய்
பாழ்பலங் கண்டாயே"

2) சாத்திரம் இல்லையடி - அகப்பேய்
சலனங் கடந்ததடி

(பாழ் பலம்- அழுகிப்போன பழங்கள், சலனம்- சஞ்சலம்)

மனதில் தூய்மையில்லாமலும், அன்பில்லாமலும் வஞ்சனையோடும் பக்திமான்கள் போல வேடம் போட்டு நடிப்பதனால் எதுவித பயனும் இல்லை. இவர்கள் ஆலயங்களுக்குச் சென்று காணிக்கை செலுத்தியும், அன்னதானம் படைத்தும், தலயாத்திரை செய்தும் வருவதனால் இறையருளைப் பெறமுடியாது. பிறர் நலம் பேணுவோரும், இரக்க மனப்பான்மை கொண்டோரும் எவ்வித பூஜை புனஸ்காரம், புண்ணிய யாத்திரை செய்யாவிட்டாலும் இறையருளுக்குப் பாத்திரமாவார்கள். கோடைக் காலத்தில் தொலைவிலே தோன்றும் கானல் நீரை நம்பி மான் ஓடிச்சென்று களைப்புடன் திரும்புவதைப்போலவே திரிகரண சுத்தியில்லாதவர்களின் செயல்கள் அமைந்துவிடும்.

"காலைமான் நீர் எனவே கண்டு செல்லல்போல்
காசினிவாழ் வினைமூடர் கண்டு களிப்பார்
மேல்நிலை கண்டார்கள் வீணாய் வம்பு பேசிடார்
மெய்யன்பதம் நாடுவார் என்று ஆடுபாம்பே"

-பாம்பாட்டிச் சித்தர்-

மனித நேயம் இல்லாத மானுடன் மிருகத்திற்குச் சமனாவான். பிறர்படும் துன்பத்தை துடைக்க வேண்டும் என்று விரும்புகிறவன் மனிதரில் தெய்வமாக உயர்ந்து விடுவான்.

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடுகின்ற உள்ளம் வேண்டும்" என்கிறார் வள்ளலார். மற்றையவர்களின் துன்பத்தில் பங்குகொள்ள விரும்பாதவன் தேவாரம் படிப்பதனால் பயன் ஒன்றும் இல்லை என்கிறார் குதம்பைச் சித்தர். உட்பொருள் வைத்துப் பாடுவது சித்தர்களின் பெரு வழக்கு.

"தாவாரம் இல்லை தனக்கொரு வீடில்லை
தேவாரம் ஏதுக்கடி"

(தாவாரம்- தா+வாரம், தா- துன்பம், வாரம்- பங்கு)

வாழ்வில் பல துன்பங்களைத் தொடர்கதையாக அனுபவித்துக் கண்ணீர் விட்டு அழுவாரைக் கருதிப் பார்த்து அவர்க்கு உதவுவதே உண்மையான கொண்டாட்டமாகும். "ஜீவ சேவையே சிவபூசை" என்பது இராமகிருஷ்ண பரமஹம்சரின் தாரக மந்திரம். துன்பப்பட்டவர்களின் துயரினைத் துடைக்காது கோயில் கட்டுவதாலோ, கோபுரம் கட்டுவதாலோ, கும்பாபிஷேகம் செய்வதாலோ எதுவித பயனும் இல்லை. பிறர் நலம் பேணல் சித்தர்களின் பார்வையில் முதலிடம் பெறுகிறது.

"கண்டாரை நோக்கிக் கருத்தோ டிருப்பார்க்குக்
கொண்டாட்ட மேதுக்கடி - குதம்பாய்
கொண்டாட்ட மேதுக்கடி"

-குதம்பைச் சித்தர்-

(கண்டாரை நோக்கி- கண்+தாரை+நோக்கி- கண்ணிலிருந்து வழியும் நீரைக் கண்டு உருகி)

02) சாதிப் பிரிவினையைச் சாடும் சித்தர்கள்:

ஒன்றுபட்டு இருக்கவேண்டிய மக்கள் சமுதாயத்தைச் சாதி பிரிக்கிறது. சாதிப் பாகுபாடு ஒழிக்கப்படல் வேண்டும் என்று சித்தர்கள் குரல் கொடுத்தார்கள். "ஓடும் உதிரத்தில் வடிந்தொழுகும் கண்ணீரில் தேடிப் பார்த்தாலும் சாதி தெரிவதுண்டோ" என்று ஆசிய ஜோதியில் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை கூறியதுபோல "இறைச்சி தோல் எலும்பிலும் இலக்க மிட்டிருக்குதோ" எனச் சிவவாக்கியரும் தனது பாடலில் குறிப்பிடுகின்றார். "சாதிபேதமில்லை" என அகப்பேய்ச் சித்தரும் "சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்" எனப் பாம்பாட்டிச் சித்தரும் சாதிக் கொடுமையினைச் சாடி உள்ளார்கள். "சாதியாவதேதடா" என்றும், "சாதிபேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையோ" என்றும் மக்களிடம் வேகமாக வினவும் சிவவாக்கியர் "சாதிபேதம் என்பதொன்று சற்றுமில்லை இல்லையே" என்று முடிந்த முடிபாகக் கூறுகின்றார்.

"ஆதிகபிலர் சொன்ன ஆகமத்தின் சொற்படியே
சாதிவகை இல்லாமல் சஞ்சரிப்பது எக்காலம்"

எனப் பத்திரகிரியார் தமது மெய்ஞ்ஞானப் புலம்பலில் குறிப்பிடுகின்றார்.

உலக வாழ்வில் பிரபஞ்ச மயக்கத்தில் வாழ்கின்ற மக்களிடையே சமய பேதம், சாதிபேதம் என்பன காணப்படுகின்றன. சீவனுக்குள்ளே சிவமனம் பூத்த பக்குவமான யோகிகள், ஞானிகள், சித்தர்கள், சாதிபேதம், சமயபேதம் என்ற குறுகிய வலைகளுக்குள் அகப்படுவதில்லை. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பது சித்தபுருஷர்களில் மூலவராகிய திருமூலரின் வாக்கு ஆகும்.

*அடிமைபோல் உழை. அரசனைப்போல் உண்.*

"சமய பேதம் பலவான சாதி பேதங்கள்
சகத்தோர்க்கே"

என்பார் பாம்பாட்டிச் சித்தர்.

அண்ட சராசரமெல்லாம் வியாபித்திருக்கும் பரம்பொருளாகிய இறைவனுக்கு உருவ பேதங்கள் இல்லை. பாலானது நெய், தயிர், மோர் எனப் பல்வேறு வடிவங்களை எடுப்பது போலவே இறைவனும் பக்தர்களின் விருப்புக்கேற்ப பல்வேறு வடிவங்களை எடுக்கிறான். மனிதர்களைப் பல்வேறு பிரிவுகளாகப் பிரித்து உயர்வு தாழ்வு கற்பிப்பது அறிவீனம்.

"சாதிபேதங்கள் சொல்லுகிறீர் தெய்வம்
தானென் றொருவுடல் பேதமுண்டோ?
ஓதிய பாலதி லொன்றாகி யதிலே
உற்பத்தி நெய்தயிர் மோராச்சு"

-கொங்கணச் சித்தர்-

இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில் அறிவியல் அபரிதமாக வளர்ச்சி அடைந் துள்ளது. பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும் விஞ்ஞான அறிவு பெரு வளர்ச்சியினைப் பெற்றுள்ளது. பண்டைக் காலத்தில் தெய்வச் செயல்கள் என்று எண்ணியிருந்த பல செயல்களை இன்று மனிதனால் செய்ய முடியும் என்று விஞ்ஞானிகள் நிருபித்துள்ளார்கள். இவ்வாறு மனித சமூகத்திலே உலக சம்பந்தமான அறிவு வளர்ந்துவிட்ட நிலையில் மனிதப் பண்பு தேய்வடைந்து வரும் நிலையையே காணமுடிகிறது. நிறவெறி, மதவெறி, மொழிவெறி, இனவெறி, சாதிவெறி போன்ற வெறிகள் வளர்ந்தே வருகின்றன. இவ்வெறிகள் காரணமாக மனிதத் தன்மையையே பலர் இழந்து விடுகின்றனர். பண்டைக் காலத்திலிருந்து இன்றுவரையும் மக்களை ஒன்றுசேர விடாமல் பிரித்து வைப்பதில் முதன்மையாக இருப்பவை சமய பேதங்களும், சாதிபேதங்களுமே ஆகும். உலகப் பெரும் சமயங்கள் எல்லாம் அன்பு நெறியையே போதிக் கின்றன. சமயங்கள் அன்பு நெறியைப் போதித்தாலும் சமயவாதிகள் பலர் இதற்கு எதிர்மாறாகவே நடந்து கொள்கிறார்கள்.

"கொல்லாமையே சிறந்த அறம்" என்பது புத்தரின் வாக்கு. ஆனால் நடைமுறையில் இதனைக் காண்பது மிகவும் அரிதாகவே காணப்படுகிறது. சாதிவேற்றுமை காரணமாக இன்றும் மக்களிடையே நடைபெறும் சண்டை சச்சரவுகளைக் காண்கிறோம். ஆதியிலே இல்லாமல் பாதியிலே வந்து தமிழர் சமுதாயத்திலே குடிகொண்ட சாதி என்னும் கொடிய வியாதி புற்றுநோய் போல உயிர்கொல்லி நோயாக மாறி வருவதை இன்றும் காண்கிறோம். பேய் போல் திரிந்து, பிணம்போல் கிடந்து, நாய்போல் உழன்று, பசித்தால் புசித்து வரும் சாதுக்களாகிய சித்தர்களிடம் இந்த வெறிகள் எதுவும் காணப்படுவதில்லை. சமய வேற்றுமைகளும் பலவகையான சாதிவேற்றுமைகளும் பகுத்தறிவு வாதிகளான சித்தர்களிடம் இல்லை.

சமயபேதம், பலவகையான சாதிபேதங்கள்
சமயத் தோர்க்கேயல்லாது சற்சாதுகளுக்கோ?

-பாம்பாட்டிச் சித்தர்-

## 03) சித்தர்கள் போற்றும் பெண்மை:

இந்து சமயம் கூறுகின்ற ஆச்சிரம தர்மங்களில் இல்லறமும் ஒன்றாகும். உலகில் உயிரினங்கள் வாழ்வதற்கு காற்று எவ்வாறு அவசியமோ, அவ்வாறே மற்றைய ஆச்சிரம நெறிகள் நிலைத்து நிற்பதற்கு இல்லறத்தானின் பங்களிப்பு அவசியம் என மனுதர்ம சாஸ்திரம்

குறிப்பிடுகிறது. காமம் என்பது காதற் காமம், காமக் காமம் என இருவகைப்படும். ஆண்மை பெண்மையையும் பெண்மை ஆண்மையையும் ஒத்த உள்ளத்துடன் விரும்பி அன்பினால் இன்புறுவது காதற்காமம். வெறும் உடற் கவர்ச்சியினாலும், புறக்கவர்ச்சியினாலும் ஏற்படுவது காமக் காமம். காதற் காமம் கொண்டவர்கள் ஜீவியபரியந்தம் இணைந்து வாழ்வார்கள். "ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்" என்ற முதுமொழிக்கு ஏற்ப காமக் காமத்தால் இணைந்தவர்களின் இல்லற வாழ்வில் காலப்போக்கில் விரிசல் ஏற்படும்.

"பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசு" எனப் பட்டினத்தாரும், "கால் காட்டிக் கை காட்டிக் கண்கள் முகம் காட்டி மான் காட்டும் மங்கையர்" எனப் பத்திரகிரியாரும் சிங்கார மடந்தையர்கள் ஆகிய விலைமாதர்களையே சாடியிருக்கிறார்கள். இருமணப் பெண்டிரையே, வரைவின் மகளிரையே பட்டினத்தாரும், பத்திரகிரியாரும் பிறசித்தரும் பழித்தும், தூற்றியும் பாடியுள்ளார்கள். குலமகளாக வாழும் பெண்ணின் பெருமையைப் போற்றி எழுதி உள்ள இடங்களும் சித்தர் பாடல்களில் காணப்படுகின்றன. வாலைக்கும்மி என்னும் தலைப்பில் இளம் பெண்ணை முன்னிறுத்தி "கும்மியடியுங்கடி" என்று கூறிப் பாடல்கள் பாடியவர் கொங்கண நாயனார். அவர் பெண்மைக்குப் பெருமைமிகு புகழாரம் சூட்டியுள்ளார்.

மாதாவாய் வந்தே அமுதந் தந்தாள்;<br>
மனையாட்டியாய் வந்து சுகங்கொடுத்தாள்;<br>
ஆதரவாகிய தங்கையானாள்; நமக்கு<br>
ஆசைக் கொழுந்தியு மாமியானாள்

மாதா, மனையாட்டி, தங்கை, கொழுந்தி, மாமி என ஒரு பெண் ஆணுடன் கொள்ளும் பல்வேறு உறவு நிலைகளையும், அவற்றின்போது பெண்ணால் ஆணுக்கு கிடைக்கும் பலவகை இன்பங்களையும் கொங்கண நாயனார் தனது பாடலின் ஊடாகச் சிறப்பாக விளக்கியுள்ளார். நமக்கு அமுதம் தருபவள் பெண்; ஆதரவு அளிப்பவள் பெண்; சுகம் கொடுப்பவள் பெண்; நம்மேல் ஆசை வைத்திருப்பவள் பெண் எனக் கொங்கண நாயனார் பெண்ணிற்கு பெருமை சூட்டியுள்ளார்.

பெண்களைச் சக்தியின் வடிவம் என்றே சித்தர்கள் குறிப்பிடுவார்கள். உற்பத்திக்கு உறைவிடம் பெண் என்பதே சித்தர்களின் கொள்கை. பெண்கள்தான் படைப்புச் சக்தி; பெண்கள் இல்லாவிட்டால் ஆணும் இல்லை; உலகப் படைப்பும் இல்லை. ஐம்பூதங்களுக்கு ஆதாரமாய் இருப்பது நிலம். நிலம் இன்றேல் வானம் முதலிய பூதங்கள் இல்லை. வாசனையில்லாத பூவும் இல்லை. பூவும் வாசனையும் ஒன்றுதான். பெண் இல்லாமல் ஆண் இல்லை; பெண்ணும் ஆணும் இல்லாமல் உலக உற்பத்தி இல்லை. இதை நீ நன்றாக ஆராய்ந்து பார் வாலைப் பெண்ணே எனக் கொங்கண நாயனார் பின்வரும் தனது பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

மண்ணும் இல்லாமலே விண்ணும் இல்லை; கொஞ்சம்<br>
வாசம் இல்லாமலே பூவும் இல்லை;<br>
பெண்ணும் இல்லாமலே ஆணும் இல்லை; அது<br>
பேணிப் பாரடி வாலைப் பெண்ணே!

வள்ளுவப் பெருந்தகை இல்லற வாழ்வைப் போற்றியது போலவே சித்தர்களும் போற்றியுள்ளார்கள். மங்கையரோடு சேர்ந்து வாழாத தேவர்கள் இல்லை. மாதர்களோடு

இணைந்து வாழ்ந்தால் தான் மனிதனின் வாழ்வும் சிறக்கும். மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்காகவே பெண்ணின் நல்லாளொடு இணைந்து இறைவன் மகிழ்ச்சியுடன் காட்சி தருகிறான் என்கிறார் சிவவாக்கியர்.

மாதர்தோள் சேராதவர் மாநிலத்தில் இல்லையே
மாதர்தோள் புணர்ந்தபோது மனிதர் வாழ்வு சிறக்குமே
மாதராகும் சக்தியொன்று மாட்டிக் கொண்டதாதலால்
மாதராகும் நீல கங்கை மகிழ்ந்து கொண்டான் ஈசனே

கட்டிய மனைவி பெற்ற பிள்ளைகள் அனைவரையும் பரிதவிக்கவிட்டு சிலர் துறவி வேஷம் கொள்வார்கள். காவியுடுத்து சடாமுடி தரித்து, கமண்டலம் ஏந்தி துறவி வேடம் போட்டுத் தேசம் எங்கும் சுற்றித்திரிவார்கள். பொய்த் துறவிகளாகப் போகின்றவர்களை சித்த புருஷராகிய சிவவாக்கியர் தனது பாடலின் ஊடாகச் சாடுகின்றார்.

"காவியும் சடைமுடி கமண்டலங்கள் ஆசனம்
தாவு ருத்திராட்சம் யோகத்தண்டு கொண்ட மாடுகள்
தேவியை அலைய விட்டுத் தேசம் எங்கும் சுற்றியே
பாவி என்ன வீடெல்லாம் பருக்கை கேட்டலைவரே"

குடும்பப் பொறுப்பினை விட்டுப் போலித் துறவினைப் பூண்டவர்கள் சோற்றுப் பருக்கைக்காக உலகெல்லாம் அலைவர் எனக் கூறுகின்றார்.

(தொடரும்...

## மரங்களின் அரசனாக அரசமரம் கருதப்படுவது ஏ ன்?

தாவரங்கள் நிறைந்த இடங்களையே தங்களின் இருப்பிடங்களாக முன்னோர்கள் கொண்டிருந்தனர். மரங்கள்- இறைவன் நமக்களித்த வரங்கள் எனலாம். பொதுவாக மரங்கள் பகல்பொழுதில் நமக்குத் தேவையான மூச்சுக்காற்றையும் இராப்பொழுதில் நச்சுக் காற்றையும் வெளிப்படுத்துவதாகக் கூறுவர். ஆனால் அரசமரம் பகற்பொழுதிலும் இரவுப் பொழுதிலும் பிராண வாயுவையே வெளிப்படுத்துகின்றன. மூச்சுக் காற்றை நெறிப்படுத்தி யோகம் செய்த திருமூலர் திருவாவடுதுறை திருக்கோயிலின் வாயு மூலையில் அரசமரத்தின் கீழிருந்து யோகு புரிந்து 3000 மந்திரப் பாடல்களைச் சைவ நல்லுலகிற்கு அருளி அவ்விடத்திலேயே ஜீவ சமாதி ஆனார். அரச மரத்தின்கீழிருந்து தவம் புரிந்தமையிலேயே புத்தருக்கு ஞானம் பிறந்தது என்பர். அதனாலேயே அச்சமயத்தார் அந்த அரசமரத்தைப் போதிமரம் என்று போற்றி வருகின்றனர். அரசமரத்தின் வேர், பட்டை, இலை, கனி, கிளை என யாவுமே மருத்துவ குணம் மிக்கவை. இம்மரத்தின் இளந்தளிரை பசுப்பாலில் வேகவைத்து வடிகட்டிப் பருகிவர மூளை பலம்பெறும். நிழலில் உலர்த்திய அரச இலையை அரைத்து குள்கந்து சேர்த்து நாள்தோறும் பயன்படுத்தி வர ஞாபகசக்தி அதிகரிக்கும். அரச மரத்தின் உலர்ந்த பழங்கள் மலச்சிக்கலையும், ஆஸ்துமாவையும் நீக்க உதவுகிறது. எலும்புமுறிவு சிகிச்சைக்கு இம்மரத்தின் இளம்பட்டை பயன்படுத்தப்படுகிறது.

அரச மரத்தினை நாள்தோறும் வலம்வந்து நாகப்பிரதிஷ்டை செய்து வழிபடுவோர் புத்திரபாக்கியம் பெறுவர். மருத்துவ குணமும் தெய்வீக சக்தியும் நிறைந்த அரசமரத்தை தலவிருட்சமாகக் கொண்டு விழங்கும் திருத்தலமாகிய திருவாவடுதுறை வந்து புத்திரத் தியாகேசரை வணங்கி அரசமரத்தையும் வலம் வந்து வழிபடுவோர் வளம்பெற்று மகிழ்ந்திருப்பர் என்பது திண்ணம்.

*-மெய்கண்டார்-*

# வேதங்களால் பூட்டப்பெற்ற வேதாரணியர் கோயில் திறப்புவிழா

– திரு நா. நல்லதம்பி அவர்கள் –

வேதாரணியம் என அழைக்கப்பெறும் திருமறைக்காட்டிலுள்ள பார்வதி சமேத பரமசிவன் கோயில், அநேக காலமாக வேதங்களால் பூட்டப்பெற்ற நிலையில் இருந்தது. அக்கதவை வேறு வழியால் திறக்க முடியாது எனக் கண்ட அடியார்களும், அந்தணர்களும், மாற்று வழியால் உள்ளே சென்று தரிசனம் செய்துவரலாயினர்.

பொதுவாக ஆலய தரிசனம் செய்யப்போகும் அடியார்கள், அபிமுகத்திரு வாயில் எனக் கூறப்படும் பிரதான வாசல் ஊடாகவே கோயிலின் உள்ளே செல்ல வேண்டும் என்பது நாம் அறிவோம்.

இவ்வாறு வேதாரணியர் கோயில் பூட்டப்பெற்றிருந்த நிலையில் ஒருமுறை, திருநாவுக்கரசு நாயனாரும் திருஞானசம்பந்த நாயனாரும் சேர்ந்து திருமறைக் காட்டிற்கு வந்திருந்தார்கள். இவர்கள் இருவரையும் அறிந்து கொண்ட அந்தணர்களும் ஏனை அடியார்களும், இவர்களை அணுகித் தமது குறையை எடுத்துச் சொன்னார்கள்.

அதனைக் கேட்ட திருஞானசம்பந்தர், வயதில் மூத்தவரான அப்பரடிகளைக் கதவு திறக்கப் பாடும்படி கேட்டுக் கொண்டார். அதனை ஏற்றுக்கொண்டு நாவுக்கரசர், பார்வதி சமேத பரமசிவனைத் தியானித்துக் கொண்டு,

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார் வலஞ்செய் மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக்க தவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே

என்று தொடங்கிப் பதிகம் பாடத் தொடங்கினார். பத்தாவது பாடலை,

விண்ணு ளார்விரும்பி யெதிர்கொள் ளவே
மண்ணு ளார்வணங்கும் மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே

எனச் சிறிது அழுத்தங் கொடுத்துப் பாடினார். அப்பொழுதும் கதவு அசையவில்லை.

திருவீரட்டானேசுரரது அருளைப்பெற்று நின்று, சமண மன்னன் ஆணையை அலட்சியஞ் செய்து, "நாமார்க்குங் குடியல்லோம்..." என்று மறுமாற்றத் திருத்தாண்டகம் பாடிய திருநாவுக்கரசருக்கு, இங்கே, பரமசிவன் பாராமுகமாக இருப்பது கவலையளித்தது. அதனாற் போலும், இறைவனை "இரக்கமொன்றிலீர்" என விளித்துப் பதினொராம் பாடலைப் பாடுகிறார்.

அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர்
இரக்க மொன்றிலீர் எம்பெரு மானிரே!
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்கா விக்கதவந் திறப்பின் மினே

என்பது தேவாரம்.

சிறந்த சிவபக்தனெனக் கொள்ளப்படும் இராவணனைக் கைலாய மலையின் கீழ்க் கிடந்து நசியும்படி விரலால் அடர்த்திட்டீர்தானே. அதுபோன்றே என்னையும் பதினொரு பாடலைப் பாட வைத்தீர். என்மீது உமக்கு இரக்கம் சிறிதும் இல்லையா? என்கிறார் அப்பர்.

எப்படியாயினும் பதினொரு பாடல் பாடியதும் கதவந் திறந்தது. அப்பொழுது, நாயன்மார் உட்பட அவ்வூர் மக்கள் அனைவரும் பரமனருளை வியந்து ஆனந்தக் கூத்தாடினர். நாயன்மார்களையும் மக்கள் துதித்து வணங்கினர்.

"அழுதால் உன்னைப் பெறலாமே" என்பது போல, இறைவனை மனமுருகிப் பாடியே அவனருளைப் பெறலாம் என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இனிமேல், திறக்கப்பட்ட கதவு, திரும்பவும் அடைக்கப்பட வழி செய்ய வேண்டுமே என அடியார்கள் இந்த நாயன்மார்களையே வேண்டிக் கொண்டார்கள்.

அதனால், அந்த வேண்டுகோளை நிறைவேற்றுமாறு திருஞானசம்பந்தரைக் கேட்டுக் கொண்டார் அப்பரடிகள். உடனே சம்பந்தர்,

சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க எனக்குன்
கதவந் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே

என பதிகத்தின் முதலாவது பாடல் பாடி முடித்ததும் கதவம் திருக்காப்புச் செய்து கொண்டது. மக்கள் ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

இப்படி, ஞான மார்க்கத்தில் ஒழுகிய திருஞான சம்பந்தருக்கு இது எளிய செயலாக இருந்தது. வேதங்களாலே பூட்டப்பட்ட கதவு, வேதத்தாலே பூட்டப்பட வேண்டும் என்ற விதிமுறையை அவர் பின்பற்றினார். அதனால், "சதுரம் மறை" என வேதத்தை முன்வைத்துத் தனது பாடலை ஆரம்பித்தார் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

திருநாவுக்கரசர், முதலாவது சரியை மார்க்கத்திலேயே நின்று தொண்டு செய்தவர். ஆனால் திருஞானசம்பந்தரோ முற்பிறவிகளில் சரியை, கிரியை, யோகம் என்று மூன்று மார்க்கங்களில் நின்று தேர்ச்சி பெற்றவர். அதனாலேதான், குழந்தைப் பருவத்திலேயே உமாதேவியாரிடம் ஞானப்பால் குடிக்கும்பேறு அவருக்குக் கிடைத்தது.

இப்பொழுது, திருமறைக்காட்டுக் கோயில் கதவு திறக்கவும் மூடவும் வசதி செய்து கொடுக்கப்பட்டுவிட்டது. ஆனால், இதனைச் செய்து வைத்த நாயன்மார்களிருவருக்கும் அருள் கொடுக்கும் பணியை இறைவன் எப்படி நிறைவேற்றுகிறார் என்று பார்ப்போம்.

திருநாவுக்கரசு நாயனார் மிகவும் கவலைப்படுகிறார் என்பது தெரிந்த இறைவன், அவருக்குச் சொப்பனத்திலே காட்சி கொடுத்து, "நாம் வாய்மூரிலே இருப்போம். அவ்விடத்துக்குத் தொடர்ந்துவா" என்று அருளிச் செய்தார். இறைவனைப் பின்தொடர்ந்து சென்றும் நெடுந்தூரம் வரையிலும் அவரைச் சமீபிக்க முடியவில்லை. ஆயினும் சமீபத்தில் ஒரு கோயிலைக் காட்டி அதனுள்ளே காட்சி கொடுத்தார். இதனைக் கேள்வியுற்ற திருஞானசம்பந்தரும் அங்கே போய்ச் சேர்ந்து கொண்டார். இருவருமாகச் சிலகாலம் அங்கே சுவாமி தரிசனஞ் செய்து கொண்டு இருந்தனர்.

இவ்வாறாக, கௌதம முனிவரின் சாபம்பெற்றுக் கல்லாகிக் கிடந்த அவர்தம் பத்தினியான அகலிகை, இராமபிரானின் பாதம்பட்டு விமோசனம் பெற்றார். அதுபோல, வேதங்களால் பூட்டப்பெற்றுக் கிடந்த திருமறைக்காட்டுக் கோயிற் கதவு, இந்த இரு நாயன்மாரின் வருகையினாலும் அவர்தம் திருவருட்பாடல்களாலும் திறக்கப்பெற்றது. மாணவர் மேலும் விபரமாகப் படித்துப் பயன்பெறுவாராக.

# சிந்திக்கத் தூண்டும் செயல் அரங்கம்

– செல்வி அ. கந்தையா அவர்கள் –

2015.01.02ஆம் ஆண்டு வெள்ளிக் கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடை பெற்ற திருவாசகப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண் டமை ஒரு பெரும்பேறு என்று நினைக்கின் றேன். நான் பார்த்த தொழில் காரணமாகவோ என்னவோ எப்போதும் என் மனதில் இன்றைய இளம் சந்ததியினர், வளரும் மாணவச் சிறார் கள் என்போரது எதிர்காலம், அவர்களது ஆரோக்கியமான வாழ்வு- ஆன்மீக உணர்வு- மேலாக மனிதப் பண்பு என்பவற்றைப் பற்றிச் சிந்திக்கும் ஒரு தன்மை என்னுள் இருந்து கொண்டே இருக்கும்.

சந்நிதியான் ஆச்சிரம ஞானச்சுடர் மலரில் என்னால் எழுதப்பட்ட கட்டுரைகளிலும் கூட கூடிய பங்கு மாணவர் சார்பாகவே இருக்கும். கோவில்கள், ஆச்சிரமங்கள், மடா லயங்கள் எல்லாமே மாணவரின் ஒழுங்கு, கட்டுப்பாடு, நேர்மை, உண்மை, மன்னிக்கும் மனப்பாங்கு, விட்டுக்கொடுக்கும் தன்மை, இவையெல்லாவற்றையும் அவர்தம் மனதில் ஊன்றச் செய்ய வேரூன்றத் தம்மாலான பங் களிப்புக்களைக் கட்டாயம் வழங்கவேண்டும் என்று எண்ணுவது இயல்பு. ஆடம்பரமான செயற்பாட்டைவிட, மனித மேம்பாட்டிற்காக ஆற்றப்படும் செயற்பாடு எமது இளம் சமுதாய மும், வளரும் பிள்ளைச் சமுதாயமும், மனித ராக வாழும் சமூகமாக மாறும்போது பெரிய வர்களுக்கு அவர்கள் மேல் பற்றும், பாசமும் அதிகரிப்பதோடு பெற்றோரும் தம் பிள்ளை களைப் பற்றிப் பெருமைப்படுவார்கள் என்பது திண்ணம். சனி ஞாயிறு தினங்களில் "டான்" தொலைக்காட்சி ஒளிபரப்பில் நடைபெறும் "சொல்லாடு களமும்கூட" இளம் சந்ததியின ரது வளர்ச்சிப் பாதைக்குரிய கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதை அவதானிக்க முடிகிறது.

திருவாசகப் போட்டியில் வெற்றியீட் டிய மாணவர்களுக்கான பரிசு வழங்கும் நிகழ்விற்கு முன்பாக நல்லை ஆதீன முதல் வரும், சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் அவர்களும் வாழ்த்துரை வழங்கும்போது ஆச்சிரமப் பணிகள் பற்றியும், மாணவர்களை ஊக்கப்படுத்தும் செயல் பற்றியும், பெற்றோ ரின் பங்களிப்புப் பற்றியும் நல்ல கருத்துக் களை வழங்கினர். சின்மயா மிஷன் குரு பிள்ளைகளின் நல்வளர்ச்சிக்கான படிக்கற் களை ஒவ்வொன்றாக மிக எளிமையாக அடுக் கிக்கொண்டு சென்றார். அமைதியாக ஆணித் தரமாக எந்த ஒரு செயற்பாட்டின் நிறைவும் இறுதியில் இறையருளாலேயே கிடைக்கும் என்று குறிப்பிட்டதோடு, சிறார்களுடன் கலந் துரையாடல் மூலமாக "பிள்ளைகளே நீங்கள் சொல்லுங்கோ" என்று கேட்டு அவர்களிட மேயே விடையையும் பெற்றுக்கொண்டமை நிறைவாக இருந்தது. உதாரணமாக "திருவா சகம் எத்தனையாந் திருமுறை" என்று கேட்ட போது பெரியவர்கள் கூறிவிடுவார்களோ என்று யோசிக்கையில் அவர்கள் மௌனமாக இருக்க அப்பிள்ளைகளே 8ஆம் திருமுறை என்று கூறினார்கள். "ஓம் நமசிவாய" என்று அனு தினமும் தியானம் செய்யுங்கள் - ஆன்மீக பலம் பெறுங்கள் என்று அவர் கூறியதை அப் பிள்ளைகளின் பெற்றோரும் வந்திருந்த பெரியோர்கள் தம் குடும்பத்திலும் பின்பற்றி னால் அமைதி எம்மைத் தேடிவரும். இளஞ் சமூகத்தைப் பற்றிக் கவலைப்பட யாருமே இருக்கமாட்டார்கள்.

இந்நிகழ்வை தலைமை ஏற்று நடாத் திய ஆச்சிரம சுவாமிகள் வழமைபோன்று "சன்னிதியான் செய்விக்கிறான் நான் செய் கிறேன்" எனக்கூறி மாணவர்களை 'ஊக்கு

விக்கும் வகையில் தனது கருத்துக்களை முன் வைத்தார். வளரும் பிள்ளைகளுக்கு நல்ல வழிகாட்டியாக இருந்து ஊக்குவித்து அவர்களது வளர்ச்சிக்கு எம்மாலானதைச் செய்கிறோம் என்றதோடு, இந்நிகழ்வு மாண வர்களுக்கு உந்துசக்தியாக அமையும் என்ற நிதர்சனத்தையும் தெரிவித்தார். வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில் வழங்கப்பட்டதுடன் பொலநறுவை மாவட்டத்திலுள்ள சிறுவர் விடுதி ஒன்றின் மிகவும் பின் தங்கிய மாணவர் களுக்குக் கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. வெற்றி பெற்ற இளஞ்சிறார் களது நிகழ்வும் இடம்பெற்றது. அன்றைய அந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்த அனை வர் மனதிலும் தமக்கென வாழாப் பிறர்க்கென வாழும் மனப்பாங்கு சிறிதளவேனும் உருவாகி இருக்கும் என்பதில் ஐயமில்லை. மாணவ சமுதாயத்தை நல்லாற்றுப்படுத்தும் நிகழ்வு கள் தொடரவேண்டும். இளஞ்சமுதாயம் மேன் மையடைய சன்னிதியானே உனதருள் என் றும் வேண்டும்.

## துன்பம் இறைவனின் மறக்கருணை

வாழ்க்கைக்கு வேண்டியதைச் செய்வதற்கு ஒரு காலமும், பிரார்த்தனைக்கென்று தனியாக ஒரு காலமுமாகப் பிரித்து அமைத்துக் கொள்வது அறியாமை. எல்லாக் காலத்திலுமே ஆண்ட வனுடைய தோழமையை நாடவேண்டும். தொழுங்காலத்திலும் சாதாரணத் தொழிலில் செல வழிக்கும் காலத்திலும் இரண்டிலுமே அவன்பால் உள்ளத்தைச் செலுத்த வேண்டும்.

அருகிலிருக்கும் பகவானை இருக்கிறான் என்று கண்டு அந்த உணர்ச்சியை மனதில் கரையாமல் நிறுத்திக்கொண்டு எல்லாக் காரியங்களையும் செய்வதே என்னுடைய பிரார்த்தனை முறை. அந்த முயற்சியில் வெற்றியடைந்து பகவானுடைய சாந்நித்தியத்தை அடையும்போது, வேறு ஏதும் உணர்வில் இடம்பெறாமல் அன்பு ஒன்றே நிற்கிறது. மற்றவை அனைத்தும் கரைந்து போய்விடுகிறது.

சின்னஞ்சிறு பணிகளையெல்லாம் பகவத் பிரீதிக்கென்று செய்யவேண்டும். அதில் தெவிட்டு அடையலாகாது. ஆண்டவன் வேண்டுவதும் மதிப்பதும் அவன்பால் நாம் செலுத்தும் அன்பைத்தான். எந்தப் பணி என்பது முக்கியமல்ல, அவன்மேல் எவ்வளவு பிரீதி வைத்துச் செய்யப்பட்டது என்பதைத்தான் அவன் பார்ப்பது. ஆஸ்திகனுக்கு உரிய குணங்கள் மூன்று. ஒன்று உறுதியான நம்பிக்கை. இரண்டாவது பகவானுடைய கருணையை ஆசையோடு எதிர்பார்ப்பது. மூன்றாவது பகவானையே காதலித்துக் கவலையற்றிருப்பது. இவற்றில் முதல் குணம் ஒன்றிருந்தாலே எல்லாம் அடையலாம். இரண்டாவதும் இருந்தால் எளிதில் சித்தியடை யலாம். மூன்று குணங்களும் இருந்து அவற்றை இழக்காமல் காத்து வாழ்க்கை நடத்தினோமானால் சொல்லவேண்டியதே இல்லை, நிச்சயமாகச் சித்தியடைவோம்.

பக்திசெய்து உய்யப்பெறவேண்டும் என்று தீர்மானித்தோமானால் முதலில் நாம் நம்மை நன்றாகச் சோதித்துப் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்போது நாம் எவ்வளவு அற்பர்கள், எவ்வளவு நீசர்கள் என்பதைக் காண்போம். ஆண்டவன் நம்முடைய ஆணவத்தைக் கரைத்து நம்முடைய சித்த மலங்களை அறுவித்து நம்மை ஓரளவு தகுதிபெறச் செய்வதற்காக நமக்குச் சில துன்பங்களைத் தந்தும் சோதனைகளுக்கு உள்ளாக்கியும் வருவதன் காரணத்தை அப்போது நாம் காண்போம். துன்பங்கள் பலவற்றை உள்ளத்திலும் புறத்திலும் அனுபவித்த பின்னரே நாம் புனிதமடைவோம். ஆனபடியால்தான் பல கஸ்டங்களும் மக்களின் விரோதங்களும் தடைகளும் எதிர்ப்புக்களும் பக்தர்கள் அடைகிறார்கள்., அதற்காகக் கவலைப்படலாகாது. அவையெல்லாம் ஆண்டவன் நமக்குச் செய்யும் உதவி என்று உணர்ந்து மகிழ்ச்சி அடையவேண்டும். அவனுடைய திருவுள்ளம் என்று துன்பத்தை வரவேற்றுப் பொறுத்துக்கொள்ள வேண்டும்.

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

ஆம்! மலையக மக்களின் மேம்பாட்டிற்காக சந்நிதியான் ஆச்சிரமமும் தன்னாலான சிறு பணியையேனும் மாதத்திற்கு ஒரு தடவை இங்கு வந்து செய்யும் என்ற ஓர் நிலைப்பாட்டைத் தெரிவித்த செய்தியானது வெறுமனே குடாநாட்டிற்குள் மட்டும் என் பணியை முடக்கிவிடாது மலையகம், கிழக்குப் பகுதியிலும் என்பணியைச் பரவச் செய்வது உம்பணிகளில் ஒன்றாக இருக்கட்டும் என அந்த ஆற்றங்கரை அழகனே அறிவித்தது போலிருந்தது.



தொடர்ந்து எமது கண்டோம் கதிரகாமம் பயணம் ஆரம்பமானது. இதிலும் சந்நிதியானின் மகத்துவத்தை உங்களுடன் பகிர ஆசைப்படுகின்றேன். இங்குள்ள ஓட்டங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரம வாகனங்களுக்கு மிகவும் கைதேர்ந்த எமது பிள்ளைகள் சாரதிகளாக உளர். ஆனால் இவர்களுக்கு மலையகப் பயணங்கள் பாதைகள் பழக்கமில்லை. பழகிக் கொள்ளவும் வேண்டும். இங்குள்ள வளைவுகள் நெளிவுகள் அந்த நாளைய ஐந்துசத நாணயக் குற்றிகளின் மூலைகள்போல மிகவும் செங்குத்தான வளைவுகள் உடையது மட்டுமல்ல. எம்மூர்களானால் பாதையைவிட்டு வண்டி விலகினால் ஒரு மரத்திலோ மதிலிலோ முட்டி மோதி சம தரையில் அல்லது குழியினுள் வீழ்ந்து நிற்கும். ஆனால் மலையகத் தெருக்களில் வாகனம் பாதையைவிட்டு விலகினால் 400-500 அடி அதல பாதாளத்தில்.... கற்பனை பண்ணிப் பார்க்கவும் முடியாததளவு உயிரிழப்பையும் ஊனங்களையும் சேதங்களையும் தரவல்ல

*பெற்றோர்களின் வாழ்க்கையென்பது குழந்தைகளின் பாடப்புத்தகமாக அமைகிறது.*

பிரயாணம். முருகனுக்கு எல்லாம் தெரியும். எது எப்படி எதனால் யாரால் செய்துமுடிக் கப்படும். இதில் யார் யார்? பங்குபற்ற வேண் டும் என்று சிலருக்கு வசதியைக் கொடுத்து ஆள்பவனல்லவா அழகன். அந்த வகையில் மலையகத்தில் (குண்டசாலையில்) பிறந்து வளர்ந்து அத் தெருக்களில் வாகனங்களை ஓட்டி, ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் எடுத்த ஓர் சின்னஞ்சிறு ஓட்டுநரைப் பார்த்தால் இவரா இப் பெரிய பஸ்ஸை ஓட்டிவரப் போகிறார் என வியக்கவைக்கும் பொடியன் உருக் (முருகனைப் பார்த்து- சூரன் நினைத்தமாதிரி) கொண்ட பார்த்தனுக்குக் கிடைத்த பார்த்த சாரதியைப்போல பன்முகங்கொண்ட ஓர் சாரதியை எமக்கு ஒழுங்கு பண்ணித் தந்து பயணங்களையும், தொடர்பாடலையும் (சிங்கள மகனேதான்) மிக இலகுவாக்கியும் அடியவர் கள் உடனிருந்து அழைத்துச் செல்வது போன்ற ஓர் அரவணைப்பை செய்துள்ளவனும் இம்முருகனே எனச் சிந்திக்கவும் செய்கிறது. ஆம்! இந்தச் சந்நிதியானின் சாரதிகூட இவனுக்கு ஒரு வகையில் உறவானவனான உண்மையும் ஒன்று பொதிந்துள்ளதையும் அறிகிறோம்.

எனவே இச்சாரதி மலையகத்தில் உள்ள அத்தனை ஊர்களையும் எப்படிப் போனால் எப்படி இலகுவாக அடையலாம். அவை எத்தனை கிலோமீற்றர் தொலைவில் உள்ளன. எத்தனை மணிக்குச் செல்லலாம் எனக் கச்சிதமாக சொல்லும் ஆற்றல் மிக்க வர். இவர் தனக்கேயுரிய பாதையில் எம்மை கதிர்காமத் தரணி நோக்கி பசறையூடாக அழைத்துச் செல்கிறார். இடையில் ஓர் பிரபல மான தேநீர்க்கடை. சுடச்சுட தொழிற்சாலை யில் உற்பத்தியான உடன் தேயிலையைக் கொண்டு மிகச் சுவையான தேநீர் தயாரித்து விநியோகிப்பார்கள். அதனருகில் வாகனம் நிற்கிறது. அனைவரும் சென்று அருமையான அந்தப் புத்துணர்வூட்டும் தேநீரை அருந்தியது மட்டுமல்ல யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு செல்வதற்காக அங்கு விற்பனை செய்யப்பட்ட தேயிலைப் பைக்கற்றுக்களையும் வாங்கிய பின் பயணம் மீண்டும் தொடர்கிறது. அழகு என்றால் அது மலைநாடுதான். காரணம் ஒரு இடத்திலிருந்து ஏறக்குறைய மேலும் கீழுமாக 04 கிலோமீற்றர் சுற்றளவு பிரதேசத்தை மிகத் துல்லியமாகப் பார்த்து ரசிக்க முடியும். கீழே பார்த்தால் தீப்பெட்டிகள் நகர்வதுபோல் வாக னங்கள் அதல பாதாள வளைவுகளில் நெளிந்து நெளிந்து ஊரும். மேலே பார்த்தால் மலையும் சிகரங்களும் வானளாவும் மரங் களும் ஒரே பச்சைப் பசேலென்ற அழகுத் தோற்றம் பெரும் பெரும் தேயிலைத் தோட்டங் களின் தொழிற்சாலைகள்கூட நெருப்பெட்டி யில் செய்த புகைவண்டிகள்போல அடுக்கடுக் காகத் தெரிந்தன. மரகதமணித் திருநாட்டை அருகிருந்து ஆழம் பார்க்கும் ஆனந்த அனு பவம் அனைவர்க்கும். சில்லென்ற நீரோடை கள் வேறு வெண்ணிற ஆடையை தொங்கவிட் டதுபோல வடிந்தோடுகின்றன. காட்சியின் அருமை அப்பப்பா....

பயணம் பகல்வேளையாக இருந்தபடி யால் இயற்கையை ரசித்தவண்ணம் மிகவும் இரம்மியமாக நகர்கிறது. அந்தவேளை வாக னத்தின் முன்புறத்திலிருந்து சிறு சலசலப்பு. ஆம் வாகனத்தின் இடதுபுற முன் சில்லில் இருந்து இலேசான புகை மணம் பரவுவது போலிந்தது. ஆனால் எமது சாரதி மிகத் துல்லியமாக முன்சில்லின் Brackeஇல் ஏதோ பழுது ஏற்பட்டுவிட்டதை வாகனத்தை நிறுத்தி உற்றுப் பார்த்ததினால் கண்டுபிடித்துவிட்டார். எமக்கோ இந்நடுக்காடு போன்ற பிரதேசத்தில் முருகா ஏன் சோதிக்கின்றாய் இத்தகு பாதை யில் Bracke இன்றி எப்படிப் பயணத்தை தொடர்வது என்ற கிலி.

ஒன்றுக்கும் யோசிக்காதீர்கள். இன் னும் 2-3 கிலோமீற்றர் சென்றால் மாத்தளைச் சந்தி வரும் அங்கு Parts கடையில் இதற் குரிய Partsஐ மாற்றித் தொடரலாம் என்று


மிகச் சாதுரியமாக ஓட்டிச்சென்று தெருவுக்கு எதிர்ப்புறமாக உள்ள கடையில் வாகனத்தை நிறுத்தினார். நாங்கள் எல்லோரும் முருகனை வேண்டியபடி இறங்கித் தெருவோரமாக நிற்கிறோம். இங்கிருந்து பார்க்க எமது சாரதியும் மோகன் ஐயாவும் கடையில் நின்று கதைப்பது தெரிகிறது. மிகவும் சரளமாக சிங்களம் கதைக்கக்கூடிய எமது சாரதியும் இரு சின்னப் பையன்களும் கதைத்துக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. அவ்விருவரும் வந்து வாகனச் சில்லைப் பார்க்கிறார்கள். பிறகு மூவரும் சென்று உரிய Partsஐ கடையில் வாங்கிக்கொண்டு மீண்டும் வானிற்கே வருகிறார்கள். நீலநிற Tசேட் ஜீன்ஸ் ஒருவர். மற்றையவர் பழுப்புநிற Tசேட் ஜீன்ஸ். ஆம் இவர்கள் இருவரும் இதேரக வாகனங்களைத் திருத்தக்கூடிய Gerrageஐ இதிலிருந்து சற்றுத் தொலைவில் வைத்திருப்பதாகவும் தங்களுக்கும் ஓர் Parts வாங்க வந்ததாகவும் தங்களால் இதனைத் திருத்தித் தரமுடியும் என்றும் தமது Gurrage 5-6 Km தொலைவில் இருப்பதால் அங்கு போவது சிரமம். இந்த இடத்திலேயே திருத்துகிறோம் என்று அதே உடுப்புகளுடன் சில்லைக் கழற்ற முற்பட்டனர். அதற்குரிய Wheel Brushஐ தேடினார்கள். அது எம்முடைய Tool Boxஇல் இல்லை இவர்கள் எடுத்துவரத் தவறிவிட்டனர். வேறோர் சாவியும் தேவைப்பட்டது. பரவாயில்லை இதனையும் கடையில் இலகுவாகக் கேட்டுப் பார்ப்போம் வாருங்கள் என்று கூறி கடைக்காரரிடம் கேட்க அவரும் விற்பனைக்கென வைத்திருந்த Wheel Brushஐயும் சாவியையும் பொதியை உடைத்துத் தந்தார்கள். அருகில் கிடைத்த ஒரு மரக்கட்டையை வைத்து மிக இலகுவாகக் கழட்டி Partsஐ மாற்றி பூட்டிவிட்டது மட்டுமல்ல அதனுடன் இணைந்த ஓர் பகுதியையும் தந்து இது உங்களுக்கு மீண்டும் பாவிக்கலாம் கவனமாகக் கொண்டுசென்று பேணி வைத்திருங்கள் என்று தந்தார்கள். இவர்களைப் பார்த்தவுடன் எம்போன்ற சிலர் இவர்கள் என்ன வலிய வந்து உதவுகிறார்கள். பொடியன்களாக இருக்கிறார்கள் ஏதும் சுத்து மாத்துப் பேர்வழிகளோ என்று எடைபோட்டாரும் உண்டு.

இப்படி இருக்க, ஐயா அவர்களுக்கு நன்றிகூறி இதை வைத்திருங்கள் என்று ஒரு தொகைப் பணத்தைக் கொடுக்க எத்தனிக்க அவர்கள் சொன்ன கூற்றும் அவர்களின் நடத்தையும் எம்மை மீண்டும் ஒருக்கால் முருகனை நினைக்க வைத்தது.

ஐயா "மனிதனுக்கு மனிதன் உதவாவிட்டால் நாம் பிறந்து என்ன பயன்" என்ற சித்தாந்த தத்துவத்தை அந்தப் போதிமாதவனைப் போற்றும் பொடிப்பயல்கள் எமக்குப் போதித்து மனிதம், இனம், மதம், சாதி பேதங்களைக் கடந்த அன்பே சிவத்துள் அடங்கும் என்பதை உணர்த்தி நாங்கள் அளித்த அன்புக் காணிக்கையாக வெறும் சோடாவை மட்டும் அன்போடு பருகி எம்மை மலைக்கவைத்த அந்த மலையானின் மகிமையின் ஊடகமாக அவர்கள் இருவரும் இன்றும் எம்கண்முன் நிழலாடுகின்றனர். அன்பு வாசகர்களே! இப்போ இளைஞர்கள் பலர் தர்மத்தை மதிக்காது, பெரியோரை மதிக்காது, தறுதலையாகப் பல்வேறு தீய பழக்கவழக்கங்களில் ஈடுபட்டுச் சீரழிகிறார்கள் என்று எம்மில் பலர் ஆதங்கப்படுவதுமுண்டு. ஆனால் இச்சிறப்பான சிங்களச் சிறார்களைப்போல பலர் எம் இளைஞர் மத்தியிலும் இருக்கத்தான் செய்கிறார்கள். தறிகெட்டு நிற்போரையும் திருத்தித் தருவான், தரவேண்டும் என் தமிழ்க்கடவுள் அந்தக் கதிரமலையான் என இம்மலருடாக அவர்களுக்காகவும் ஒருகணம் பிரார்த்திப்போமாக. இக்கணத்தை முருகன் ஆற்றிய நாடகமாகக் கொள்ளலாம் என்பதையும் எம்மால் அறிய முடிந்தது. நாங்களும் சந்நிதியானின் விலாசத்தைக் கொடுத்து யாழ்ப்பாணம் வரும் பொழுது சந்நிதியானிடமும் வாருங்கள்

உங்களை என்றும் அன்போடு அழைத்து நிற்கிறான் என்ற செய்தியைச் சொல்லி அவர்களிடமிருந்து அன்புவிடைபெற்று கதிரமலையானை நோக்கி எமது வண்டி ஓடுகிறது.

இப்போ நேரம் பி.ப 2.00 மணி. நடுகாடு. அங்கே றோட்டில் ஓர் கரிய உருவம் தெரிகிறது. சாரதி வேகத்தைக் குறைக்கிறார். யானை யானை பாருங்கோ. பார்த்தோம். நட்ட நடுறோட்டில் மிகப் பெரிய தோற்றமுள்ள விநாயகர் தும்பிக்கையை மிகவும் அழகாக யானைப் பாகனின் கட்டளைக்கு அடிபணிந்து நடக்கும் பழக்கப்பட்ட யானையைப்போல அசைத்து அசைத்து நிற்கிறது. எமக்கு பயபக்தி. ஆம் பயத்துடன்கூடிய பக்திநிலை. மிக மெதுவாக அதனை விலத்தி வண்டி ஓடுகிறது. அதுவும் எங்களை ஆசீர்வதிப்பது போல தனது துதிக்கையை வளைத்துநிற்க அதற்கு வாழைப்பழத்தை அன்புக் காணிக்கை யாகக் கொடுக்க ஏற்று வாங்கி எம்மை தம்பி யிடம் வழி அனுப்பியது காட்டுயானையா?. அவனது அண்ணனான விநாயகரா? வாசகர் களே தீர்மானியுங்கள்.... வண்டி தொடர்கிறது பயணத்தை கதிர்காமக் காட்சி மீண்டும் காண.....



(தொடரும்...

## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



சந்நிதியான் ஆச்சிரம ஆரம்பகால வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவரும், மேலதிக அரசாங்க அதிபருமாகிய திரு செல்லமுத்து ஸ்ரீநிவாசன் அவர்கள் 23.02.2015 அன்று தனது 60ஆவது அகவையைப் பூர்த்திசெய்வதையிட்டு நாமும், சந்நிதிவேற் பெருமானின் அருளை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

-பேரவையினர்-

## நீடு வாழ்க...



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மேற்கொள்ளப்படும் சகல பணிகளுக்கும் தன்னாலான பங்களிப்பை வழங்கிவரும் உயர்திரு லயன் சிதம்பரப்பிள்ளை பத்மநாதன் JP அவர்கள் மேன்மேலும் சகல நலன்களும் பெற்றுவாழ சந்நிதியானை வேண்டுதல் செய்கின்றோம்.

-பேரவையினர்-

# என் அப்பாவுக்கு...

(08.02.2015 ஞாயிற்றுக்கிழமை அப்புத்தளை கோணமுட்டாவ அறநெறிப் பாடசாலையில் கண்ணப்ப நாயனார் குருபூசை நிகழ்வின்போது இடம்பெற்ற கவிதை)

கண்ணப்பர் பூசையிலே
கண்ணீருடன் கேட்கிறேன்
கருத்து ஒன்று சொல்லுகிறேன்
கவனமாய்க் கேளுங்கள்
கடவுளுக்கு கண்ணையே
கொடுத்தாரே கண்ணப்பன்
எங்களுக்கு நீங்க
நாளை விடியும் என்ற
நம்பிக்கையாவது கொடுங்கள்
எங்கள் அப்பாக்களே...
பழைய கோயிலைச் சுற்றி
கிட்டி அடித்து
கொஞ்சி விளையாடிய
கூத்தெல்லாம்
கோபுரம் எழுந்ததில் இருந்தே-
காணாமல் போயிடிச்சே
நினைச்சால் நெஞ்சு வலிக்குதப்பா
சின்னவன் சொல்லுரேன்னு
கல்லால் அடிக்காதீங்க...
"கருத்தா சொல்லுரே" - என்று
காதை திருகாதிங்க...
நீங்க ஒத்துப்போனா
ஒன்னும் குறைஞ்சிடாது
சிறுவர்கள் நாங்க
செத்துப் பிழைக்றோப்பா...
வருடத்தில் ஐந்து நாள்
வரும் ஆடிப் பூசையப்பா
பேமண்டில் விற்கும்
பழைய களுசான் வாங்கி
பூசைக்குப் போட்டு
புழுதியோடு புரண்டு விளையாடி
பூரிச்சுப் போவோமே...
பெரியவங்க உங்களுக்கு - அதுகூட
புடிக்காம போச்சே அப்பா...
அத்தனையும் நினைச்சா எனக்கு
அழுகை வருதப்பா...
விளையாட்டுப் போட்டியிலே
வேகாத பணிஸ் கடித்து...
பலூன் உடைத்து
சின்னப் பசங்கள் எல்லாம்
ஒன்றாய் கூடிஓடி விளையாடி
சிரித்து மகிழ்வோமே...
உங்களின்
உருப்படாத கதையால - ஊருக்குள்
ஒன்றுமே நடக்கலப்பா...
சாமியின் பெயரைச் சொல்லி
சனமெல்லாம் விளையாட - இந்த
பூமி பொறுக்கலயே - அது
புதுசா வெடிச்சிரிச்சே
சாகத்தான் போரோம் என்று - நம்ம
சனமெல்லாம் ஓடயிலே
சாமி எங்கோ போயிடிச்சோ - என்று
சரியா தெரியலப்பா!
பொதுவாகக் கேட்கிறேன்
போன தெல்லாம் போகட்டும்
பொது கூட்டம் கூடி
பொதுவாக பேசி நிலையாக வாழ
நியாயம் ஒன்று செய்திடுங்க...
ஆறாம் மலை இடிந்து - நம்மை
அப்படியே மூடிடுமாம் - என்று
யார் யாரோ சொல்லுராங்க
அது வரைக்கும் நாங்க
அமைதியா வாழுறோமப்பா...
வேண்டாம் என்றால் சொல்லுங்கப்பா
நான் வேறயாப் போயிடுறேன்!

– திரு R. இராஜகோபால் அவர்கள் –

# திருக்கேதீஸ்வரம் அம்மை அப்பன் மடாலய இல்லத்தில் பரவசமாய் நடைபெற்ற பகவான் ஸ்ரீ ரமணமகரிஷி குருவின் பாலித்த குருபூஜை

– சந்நிதியான் ஆச்சிரமம் –

மன்னார் திருக்கேதீஸ்வரம், அம்மை அப்பர் மடத்தில், 16.02.2015 பிற்பகல் 3.00 மணிக்கு, பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியின் குருபூஜை, பக்திபூர்வமாகவும், பரவசமாகவும் நடைபெற்றது.

வருடந்தோறும் நடைபெறும் மேற்படி குருபூஜையில் இம்முறை, நுவரெலியா, மட்டக்களப்பு, கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலிருந்து பல அடியார்கள் வந்திருந்தமை சிறப்பிற்குரியதாக அமைந்தது.

தற்காலம் மகரிஷி அவரிடம் நிறையக் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. காரணம் ஆன்மீகத்தை மிகமிக எளிமையாக வாழ்ந்து காட்டினார். எளிமையை நாம் தொலைத்து விட்டதனாலன்றோ துன்பத்தை விலைக்கு வாங்கியுள்ளோம். கூடுதலாக மிருகங்கள், பறவைகளிடத்தே இறைவனைக் கண்டு மகிழ்ந்தார்.

நுவரெலியா கல்வி வலய உதவிக் கல்விப் பணிபாளர் திருமதி நிர்மலா பத்மநாதன் அவர்களும், இளைப்பாறிய இசையாசிரியர் சிற்றம்பலம் சிவஞானராஜா அவர்களும், யாழ்ப்பாணம் சைவசமய ஆன்மீகச் செல்வி அவர்களும் மற்றும் அம்மை அப்பன் மடாலய இல்லத்தில் தங்கியுள்ள அடியார்களும் இந்நிகழ்வைச் சிறப்பித்தனர்.

மதுரைக்கு 60 கி.மீ தொலைவில் உள்ள திருச்சுழியில் அழகம்மையார், சுந்தரனார் தம்பதிகளுக்கு இரண்டாவது மகனாக வேங்கடராமன் என்ற ஸ்ரீ ரமண பகவான் அவதரித்தார். அபார ஞாபகசக்தி. விளையாட்டிலிருந்த நாட்டம் புத்தகப்படிப்பில் இல்லை. 16 வயதில் ஏற்பட்ட மரண பயம், இறப்பது உடம்பேயன்றி, உயிரல்ல என்பதைத் தெளிவாக உணர்ந்தார். மற்றவர்களுக்கும் உணர்த்தினார். 1879இல் பிறந்த இவர், 1896இல் உள்ளத்தில் ஏற்பட்ட ஒளிப்பிரவாகத்தால் திருவெண்ணாமலை விருப்பாட்சிக் குகையிலும், கந்தாச்சிரமத்திலும், மலையடிவார பாலித் தீர்த்தக்கரையிலும், அருளுக்கும், திருவருளுக்கும் பாத்திரமானார். 1950இல், முத்திபெற்ற இவர், நான் யார்? என்ற கேள்விக்கு “ஆன்ம சுகமே” விடையான, இறைசுகத்தை எல்லோரிடமும் கண்டார். மௌன மொழியே தனது தாரகப் பிரசாதமாக அள்ளி வழ்ங்கினார். இவரது அன்பையும், அருளையும் பசுக்கள், நாய்கள், காகங்கள், மான்கள், அணில்கள், அவற்றிற்கு அப்பால் மனித இனம் பெற்றுக்கொண்டதெனலாம். ரமண மகரிஷியால் அருளப்பட்ட பாடல்களில், நாயக - நாயகி பாவத்தில் எழுதப்பட்ட ஸ்ரீ அருணாசல அட்சர மணமாலை 108உம் அருச்சனைக்கு உரியதாகும். இந்தப் பாமாலையை எல்லோரும் பாடி அருச்சித்தமை பக்திப் பரவசமாக்கியதெனலாம். இசையாசிரியர்கள் சிவஞானராஜா மற்றும் கார்த்திகா, திருக்கேதீஸ்வர கௌரி அம்பாள், சிவன் அருள் இல்ல மாணவ - மாணவிகள் சேர்ந்த கூட்டுப்பிரார்த்தனையும், திருமதி. நிர்மலா பத்மநாதன் அவர்களது ரமண மகரிஷி பற்றிய அற்புதங்கள் நிறைந்த பேச்சும், இந்நிகழ்வினை ஒழுங்கு செய்த அம்மை - அப்பன் இல்ல ஸ்தாபகர் திருமதி சி. வல்லிபுரம் அம்மா அவர்களது பெருமுயற்சியும் என்றும் நின்று வாழ்விக்க வல்ல பேறாக மன்னாரில் இடம்பெற்றமை, நாம் பெற்ற வரப்பிரசாதமாகும்.

# ஸ்கந்தவேல் (வேல்ஸ் முருகன் ஆலயம்)

- வல்வையூர் அப்பாண்ணா -

இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, வட அயர்லாந்து, வேல்ஸ் ஆகிய நான்கு பெரிய மாநிலங்கள் உள்ளடங்கிய கூட்டமைப்பே பிரித்தானியா. நான்கு மாநிலங்களுக்கும் தனித் தனிக் கொடிகள் இருந்தபோதும், நான்கு மாநிலங்களையும் உள்ளடக்கிய பிரித்தானியாவுக்கென தனியான கொடியும் வேறாக உள்ளது. இந்த நான்கு மாநிலங்களில் மிகப்பெரிய நிலப்பரப்பினையும், சகல வசதிகளையும் கொண்டுள்ள அழகிய மாநிலமான இங்கிலாந்தில் நிறைய வேலை வாய்ப்புகள் உள்ளதனைக் கருத்திற்கொண்டு உலகின் சகல பகுதிகளிலிருந்தும் மக்கள் நிரந்தர குடியேற்றத்திற்காக இங்கே வருகிறார்கள். வரும் மக்கள் எதிர்பார்ப்புக்கேற்றபடி வளமாக இருக்கிறார்கள் என்பதும் உண்மையே.

ஸ்கந்தவேல் ஆலயத்தின் ஸ்தாபகர் ஒரு இலங்கையரே. பதுளை மாவட்டத்தின் ஒரு கிராமத்து சிங்கள குடும்பத்தாருக்கு மகனாகப் பிறந்தவர் அவர். தந்தையர் பதுளை மாவட்டத்தின் பிரபல வைத்திய அதிகாரி ஆவார். கதிர்காமம் முருகன்மீது நிறைந்த பக்தி கொண்டிருந்த காரணத்தால், அன்பு- அகிம்சை- சமாதானம் ஆகியவற்றினில் தீராத ஈடுபாடு கொண்டிருந்தார் அவர். கதிர்காமம் முருகன் அவருக்கு "சுப்பிரமணியன்" என்று நாமம் சூட்ட அதுவே காலம் முழுவதும் அவரது பெயராக நிலைத்தது. "சனாதன தர்ம" சிந்தனையை இவர்மூலம் மேலை நாடுகளில் பரப்ப முருகன் திருவுளம் கொண்டதால் சுப்பிரமணியரை லண்டனுக்கு இடம் பெயரச் செய்தார். அவரும் லண்டனில் பல்வேறு இடங்களிலும் ஒரு தர்ம சாலையை அமைக்க பெருமுயற்சி செய்தும் உரிய இடம் கிடைக்காமையினால், "வேல்ஸ்" மாநிலத்தின் அழகிய மலைப்பகுதியினைத் தேர்ந்தெடுத்து முருகன் கோவிலை ஸ்தாபித்தார்.

1973இன் ஆரம்பத்தில் ஆறுபேர் மட்டுமே அமர்ந்திருந்து பிரார்த்தனை செய்யக்கூடிய ஒரு இடமாகவே "முருகன் நிலையம்" அமைந்திருந்தது. அவரது இறைபணியை உணர்ந்த பலரும் அவரை "குருஜி சுப்பிரமணியர்" என்றே அழைத்தனர். படிப்படியாக அது ஒரு இறைபணி நிலையமாக மாற்றம் பெற 1991இல் மகாசக்தி (காளி) கோவிலும், பின்னர் ஸ்ரீரங்கநாதர் ஆலயமும் அமைக்கப்பட்டுள்ளது. குருஜியைப் பின்பற்றும் பலரும் அவரின் சிஷ்யர்களாக இணைந்தனர். குரு சுப்பிரமணியம் 2007இல் தனது 76 வயதில் காலமாகிய பின்னர் அவரது சிஷ்யர்களால் இக்கோவில் பராபரிக்கப்பட்டு வருகிறது. கோவில் பராபரிப்புக்காக ஒரு ஏழெட்டுப் பேர்வரையும், பண்ணைகளைப் பராபரிக்க பதினைந்துபேர் வரையிலுமாக உள்ள அனைவரும் ஆங்கிலேயர்களே. இவர்கள் வேதனம் பெறாமல் கடமைபுரியும் முழுநேரத் தொண்டர்கள். "சனாதன தர்ம" கோட்பாட்டினூடாக இறைபணி ஒன்றையே மனதில் நிறுத்தி கடமை புரிபவர்கள்.

பூசை வேளைகளில் பூசைக்கு உதவுவது - பாடுவது - பஜனை செய்வது, ஏனைய நேரங்களில் பண்ணைகளைப் பராபரிப்பது, பண்ணைகளிலிருந்து கிடைக்கும் பால், தயிர், நெய் போன்றவற்றை விற்பனைக்கு விடுவது, வருடந்தோறும் முருகனைத் தரிசிக்க வரும் லெட்சக்கணக்கான அடியார்களை வரவேற்று - உபசரித்து - உணவளித்து வழியனுப்புவது இவ்வாறாக அனைத்து வேலைகளையும் அவர்களே செய்கின்றனர். உதாரணத்திற்கு ஒன்றினைக்

குறிப்பிட்டுச் சொல்லலாம். பூஜை இல்லாத ஒரு இடைவேளையில் பிரதமகுரு, (சுவாமிஜி-ஆங்கிலேயர்) அடியார்கள் பயன்படுத்தும் கழிப்பறைகளை கையில் வாளியும்- துடப்பமும் கொண்டு சுத்தம் செய்ததை நாம் நேரடியாகப் பார்த்து ஆச்சரியப்பட்டோம். அங்குள்ள அனைவரும் எல்லா வேலைகளையும் எவ்வித வேறுபாடுமின்றிக் கூட்டாக இணைந்து செய்கிறார்கள்.

பிரித்தானியாவின் நான்கு மாநிலங்களில் ஒன்றான "வேல்ஸ்" மாநிலத்திலேயே பிரபலமான ஸ்கந்தவேல் ஆலயம் உள்ளது. லண்டனில் இலங்கைத் தமிழ் மக்கள் கூடுதலாக வாழுகின்ற Tooting, Mitcham ஆகிய பகுதிகளிலிருந்து அல்லது லண்டன் மைய நகரத்திலிருந்து A3, M25, M4 ஆகிய மூன்று நெடுஞ்சாலைகளினூடாக $4^1/_2$ மணி நேரத்தில் 235மைல் தூரத்தைக் கடந்து சென்றால் (தூரம் என்பது லண்டனில் "மைல்"இலேயே இப்போதும் கணக்கிடப்படுகிறது. (கி.மீற்றரில் அல்ல) கூடிய வேகத்துடனான 8 வழிப்பாதைகள் கொண்ட நெடுஞ்சாலைகளின் நேர்த்தி, வீதி சமிக்ஞைகள், வீதி எச்சரிக்கைகள், வீதி மாற்றங்கள் ஆகியன மிகச் சீரானவை. ஆச்சரியப்படுத்துபவை. வேல்ஸ் முருகன் ஆலயத்தின் அமைவிடம் பற்றி சுருங்கக் கூறுவதாயின், மத்திய லண்டன் பகுதியின் கிழக்குப் பக்கமாக, லண்டனின் மிகப்பெரிய விமான நிலையமான ஹீத்றூ (Heathrow) விமான நிலையம் - பிரிஸ்ரல் பெருநகரம் ஆகியவற்றைத் தாண்டி வர "Carmarthen" எனும் நகரம் வருகிறது. இங்கிருந்து ஐந்து மைல் தூரத்தில் "Lampeter" எனும் ஊருக்குப் போகும் வழியில் வேல்ஸ் முருகன் ஆலயம் உள்ளது.

பொதுவாகவே "வேல்ஸ்" மாநிலத்தில் மலைகள் - பள்ளத்தாக்குகளில் வளைந்து வளைந்து செல்லும் நெடுஞ்சாலைகளும், மலைகளில் மேலும் கீழுமாகத் தெரிகின்ற கட்டிடங்கள், தொழிலகங்கள் அடிக்கடி பனிப்படலங்களாலும் முகிற் கூட்டங்களாலும் மூடப்படுவதால் இரவில் வாகனங்களில் பயணிப்போருக்கு பெரும் மனக்கிலேசத்தை ஏற்படுத்துகிறது. அதே மலைப்பாதையின் பகற்பிரயாணம் இயற்கையின் எழில்மிகு காட்சிகளைக் கண்குளிரக் கண்டுகளிக்க அருமையானதொரு வாய்ப்பாகவும் அமைகிறது.

பிரதான வீதியிலிருந்து, எந்த அறிவிப்புப் பலகையும் இல்லாமல் திடீரென இடது பக்கம் பிரிந்து செல்லும் பாதையின் ஆரம்பத்தில் இரு புறமும் ஒரு சில குடியிருப்புகள் காணப்பட்டபோதும், அந்த 4 மைல் தூர காட்டுப் பாதையும் மிக ஒடுங்கிய சீரற்ற பாதையாகவே உள்ளது. சாதாரணமான கார்கள், எங்கள் நாட்டு Hiace போன்ற சிறிய வாகனங்கள் மட்டுமே இந்த ஒடுங்கிய வீதியால் செல்லமுடியும். இந்த சீரற்ற கிரவல் பாதையால் பயணிக்கும் இந்த வாகனங்களைக்கூட வீதியை நெருங்கி வளர்ந்துள்ள முட்செடிகள் உரஞ்சித் தள்ளுகின்றன. இதற்கும் மேலாக, கூடிய இருக்கைகள் கொண்ட எந்த வாகனமும் இந்த வீதியில் பயணிக்க முடியாது. பாதையின் ஒரு பக்கம் மிகச் சரிவான பள்ளம். மறுபக்கம் உயர்ந்து செல்லும் காடடர்ந்த மலைப்பகுதி. கீழிருந்து மேலேறிச் செல்லும் வாகனமும், எதிரே மேலிருந்து கீழே வரும் வாகனமும் விலகிச் செல்ல வசதியாக ஒரு சில இடங்களில் கூடுதலாக முட்செடிகளைக் களைந்து இடம் ஒதுக்கியுள்ளார்கள். இந்தப் பாதையில் எதிரே வரும் வாகனங்கள், வீதியின் குறுக்காகச் செல்லும் காட்டு மிருகங்கள், பாதை அருகே உள்ள பயங்கரமான பள்ளம் ஆகிய இவற்றினைக் கருத்திற் கொண்டு எல்லா வாகனங்களும் முன்- பின் விளக்குகளை பகலிலும், இரவிலும் எரியவிட்டபடியே பயணிக்கிறார்கள்.

பனி மூட்டத்தினால் உண்டான கடுங்குளிரின் மத்தியிலும் ஒருவாறாக எமது வாகனம் மேலேறி சிறிய சமதளப்பகுதிக்கு வருகிறது. விடியல் வராத அதிகாலை சரியாக 5 மணிக்கு கோவில் மணி ஒலிக்கிறது. எங்கள் கோவில்களில் இருப்பது போன்று பெரிய கண்டாமணியோசை

அங்கில்லை. வாகனத் தரிப்பிடத்தருகே, நாம் ஏறிவந்த வீதியின் முடிவில் மிகப்பெரிய விநாயகர், பெரிய பீடத்தில் நான்கு தூண்கள் கொண்ட பெரிய கூடாரத்தினுள்ளே அமர்ந்துள்ளார். விநாயகரின் கழுத்தில் ஒற்றை மாலை மட்டுமே உள்ளது. அபிஷேகம் - பூசை நடைபெறுவதற் கான அறிகுறி எதுவும் அங்கு காணப்படவில்லை.

வேல்ஸ் மாநிலத்தின் கடுங் குளிர் காலத்திலும் கூட அதிகாலைப்பூஜை 5 மணிக்கு நடைபெறத் தவறுவதேயில்லை. ஒரு சிறிய வாசல் கொண்ட மண்டபம், மண்டப முடிவில் பெரிய திரையினால் தடுக்கப்பட்டுள்ள ஸ்கந்தவேல் அமர்ந்துள்ள தனிப்பகுதி. கடுங்குளிரினைத் தாக்குப் பிடிப்பதற்காக மலை நாடுகளில் பொதுவாகக் காணப்படும் கண்ணாடி வீடுகள் போன்ற அமைப்பினை ஒத்ததே மண்டபமும்- கருவறை போன்ற அமைப்பும். மண்டப ஆரம்பத்திலேயே சிறு மாடங்களில் ஒரு புறம் கௌதம புத்தரும், மறுபுறம் யேசுபிரானும் மெல்லிய விளக்கொளியில் உள்ளனர். மண்டபத்தின் ஒரு மூலையில் 100க்கும் குறையாத தட்டையான தலையணைகள் (சதுர வடிவில்) குவிக்கப்பட்டிருக்கிறது. உள்ளே வரும் ஒவ்வொருவரும் ஒரு தலையணையைக் கையிலெடுத்து, விரும்பிய இடத்தில் தரையில் போட்டு அதன்மீது அமர்ந்து கொள்கின்றனர். தரையின் குளிரைத் தாங்கிக்கொள்ள இந்த ஏற்பாடு. கீழே அமர்ந்துகொள்ள முடியாதவர்களுக்காகவும், முதியோருக்காகவும் வாசலின் உட்புறத்திலேயே 10 கதிரைகள் வரை உள்ளது. எம்மைப்போன்று ஒரு நாற்பது பேர்வரை அன்றைய அதிகாலைப் பொழுதில் ஸ்கந்தவேல் முகதரிசனம் பெறக் காத்திருந்தனர். எமது புலம்பெயர் உறவுகள் அநேகர்; சிலர் தமிழகத்துத் தமிழ்க் குடும்பங்கள்; வட நாட்டினர் சிலர்; ஒரு சில வெள்ளையர்கள்.

நேரம் சரியாக அதிகாலை 5 மணி. பெரிய திரையின் உள்ளே சிறிய மணிச்சத்தம் கேட்கிறது. திரை விலகுகிறது. மென்மையான காவி நிறத்தில் மேற்சட்டையும் (எமது தேசிய உடையான நசனலை ஒத்தது.) காவிவேட்டியும் அணிந்தபடி பிரதமகுரு பூசைகளை ஆரம்பிக்கிறார். மென்மையான ஒரு மேளச் சத்தமும் (எம்மூர் மேளம் போன்றதல்ல) ஆர்மோனியம் போன்ற கருவி ஒன்றின் இசையும், தாள ஒலியும் சேர்ந்து ஒரு உணர்வுபூர்வமான சூழலை உண்டாக்குகிறது. மந்திர உச்சாடனங்கள் இல்லை. ஒரு கூட்டுப் பிரார்த்தனையை ஒத்த இசையுடன் கூடிய வணக் கமே அங்கு நடைபெறுகிறது. முருகனின் திருநாமங்கள் ஏனைய தெய்வங்களின் திருப்பெயர்கள், காயத்திரி மந்திரம் போன்ற இவைகளை ஒருவித ஓசையுடன் பாடிப் பணியும் ஆங்கிலேயர்களின் தமிழ் உச்சரிப்பு நமக்கு வித்தியாசமான அனுபவமாயிருந்த போதிலும், அந்த இசையும்- பாடலும் - உச்சரிப்பும் மீண்டும் மீண்டும் கேட்கவேண்டும் எனும் ஆவலைத் தூண்டின.

உள்ளே, நமது கோவில்களின் மஞ்சத்தை ஒத்ததான சிறு அறுகோண அமைப்புக் கொண்ட வேலைப்பாடமைந்த மஞ்சதின் மையத்தில் அருள்பொழியும் ஆறுமுகங்களும், பன்னிரு கரங்களுடனும், வேலும் மயிலும் கொடி தாங்கி, நின்ற திருக்கோலத்தில் அழகான- அளவான அலங்காரத்துடன் ஸ்கந்தவேல்- வேல்ஸ் முருகன் அருள் பாலிக்கிறார். ஆறுமுகனின் ஒவ்வொரு முகத்திற்கும் நேராக தீபாராதனைகள் தனித்தனியாக நடைபெறுகிறது. பிரதம குரு - அவரது உதவியாளர்கள் - இசை எழுப்பும் ஏனையவர்கள் அனைவரும் ஆங்கிலேயர் களாக இருந்தும் நெற்றியில் நீறணிந்து சந்தனம் குங்குமமிட்டு நிறைந்த பயபக்தியுடன் பூசையினை நிறைவு செய்கிறார்கள். பூசை முடிந்ததும் பிரதம குருவும் இன்னும் இருவருமாக மூவர் பஞ்சதீபம், திருநீறு, குங்குமம் ஆகியவற்றினைக் கையிற்கொண்டு பக்தர்கள் இருக்கும் இடம்தேடி வந்து நீட்டுகிறார்கள். ஸ்கந்தவேலைத் தரிசிக்கவரும் பக்தர்கள் அரிசி, வெங்காயம், உருளைக்கிழங்கு, பருப்பு, சீனி, வெல்லம், பயறு, சோயா, பால், எண்ணை, பலவிதமான

பழவகைகள் ஆகியவற்றை நேர்த்திக்காகக் கொண்டு வருகிறார்கள். பூசையின் முடிவில் இந்தப் பொருட்கள் அனைத்தும் முருகன் காலடியில் நிவேதிக்கப்பட்டு மீண்டும் தீபம் காட்டப்படுகிறது. தீபங்கள் அனைத்தும் நெய்த் தீபங்களே. கர்ப்பூர தீபம் அங்கில்லை. சரியாக 40 நிமிட நேரம் நீடித்த இந்த பூசை ஆராதனை நிறைவுபெற்றதும் பிரதமகுரு, "சரியாக காலை 6.30 மணிக்கு மகாசக்தி (காளி) கோவிலில் பூசை ஆரம்பமாகும்" என்ற அறிவிப்பினை ஆங்கிலத்தில் விடுக்கிறார். ஸ்கந்தவேல் முருகனுக்கான அடுத்த பூசை பகல் 12 மணிக்கு நடைபெறும். இக்கோவில் மூன்று பகுதிகளாக உள்ளது. (1) ஸ்கந்தவேல் ஆலயம் (2) மகாசக்தி (காளி) கோவில் (3) ஸ்ரீரங்கநாதர் கோயில்.

"ஆறரை மணிக்கு மகாசக்தி (காளிகோவில்) கோவிலில் பூசை ஆரம்பமாகும்" என சுவாமிஜி (பிரதமகுரு) ஆங்கிலத்தில் அறிவித்ததும் கோவில் மண்டபத்தைவிட்டு அனைவரும் வெளியே வருகின்றனர். நீளத்திற் குறைவான பேருந்து ஒன்று மேலே மகாசக்தி கோவில் நோக்கிப் புறப்படத் தயாராக நின்றது. வயது முதிர்ந்தவர்கள் - மலையேற முடியாதவர்கள் மட்டுமே அந்தப் பேருந்தில் ஏறிக்கொள்ள, மற்றையவர்கள் நடந்தே மேலேறிச் செல்கிறார்கள். குடை விரித்து நிழல்தரும் பெருமரங்களினூடாக பரந்துள்ள புல்வெளியினை ஊடறுத்துச் செல்லும் அந்த கிரவல் பாதை வளைந்து வளைந்து மேலேறிச் செல்கிறது. எங்களருகே மான் கூட்டமும் சற்று மேலே உயரத்தில் காட்டெருமைகளும் கூட்டம் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்ததைக் காண முடிந்தது.

மேலே, நிழல்தரு மரங்களால் மூடப்பட்ட ஒரு சிறிய தளத்தில் பெரிய கண்ணாடி வீட்டினுள் அம்பிகை மகாசக்தி வீற்றிருக்கிறாள். நாம் இங்கே காளிகோவில்களில் பார்க்கின்ற அதே உருவ அமைப்போடு, சிவப்புநிற சேலையுடன் - கபாலங்களைக் கழுத்தில் அணிந்து- நாக்கை வெளியே நீட்டியபடி உக்கிர கோலத்தில் மகாசக்தி காணப்படுகிறாள். கீழே ஸ்கந்தவேல் கோவிலில் நடைபெற்ற அதே பூஜைமுறை இங்கேயும் தொடர்கிறது. உள் மண்டபத்தில் அமர்ந்து கொண்டவர்கள் போக, வெளி வராந்தாவில் அமர்ந்திருந்தவர்களின் வசதிக்காக, ஒரு மூலையில் வைக்கப்பட்டிருந்த தொலைக்காட்சிப் பெட்டியில் - உள்ளே நடைபெறும் அனைத்து நிகழ்வுகளும் ஒளிபரப்பாகிறது. பாடல்களும், அம்பாளின் பல பெயர்கள் கூறும் சொற்களும், அபிராமி அந்தாதியின் சில பாடல்களும் அவர்களது உச்சரிப்பில் செவிக்கு விருந்தாக இசைக்கிறார்கள். தீப ஆராதனைகள் நிறைவு பெற்றதும், அடுத்த அறிவிப்பு ஆங்கிலத்தில் வருகிறது. "அனைவரும் கீழே சென்று உணவருந்தி ஆறுதலடைந்தபின் சரியாக 10 மணிக்கு ஸ்ரீரங்கநாதர் கோவிலுக்கு வரவும்" என அறியத் தருகிறார் பிரதமகுரு. மகாசக்தி கோவிலில் அனைவருக்கும் குங்குமம் வழங்கப்படுவதுடன் அவல், கற்கண்டு முதலானவையும் வழங்கப்படுகின்றது. பேருந்தில் வரவேண்டியவர்கள் பேருந்திலும், ஏனையவர்கள் நடந்தும் கீழே இறங்குகின்றனர். மேலே ஏறிச் சென்றதைவிடக் கீழே இறங்குவது கடினமாக இருந்தது. அநேகர் கைகளில் கிடைத்த தடிகளின் உதவியுடன் கீழே இறங்கி வந்தனர்.

வரும் வழியில் கிரவல் வீதி ஓரத்தில் புல்வெளி நடுவே ஐந்தடிவரை உயரமுள்ள ஒரு சிறு குன்றின்மீது மிக நீளமான- தடிப்பான பூமாலையொன்று சாத்தப்பட்டிருந்ததையும், குன்றின் ஒரு பக்கத்தில் நிலத்தில் பூக்களின் குவியலும் காணப்பட்டது. எந்த அறிவிப்புப் பலகையும் அங்கில்லாததால் அவ்விடத்தில் எதையும் அறிந்துகொள்ள முடியவில்லை. கீழே ஸ்கந்தவேல் ஆலயம் சேர்ந்த பின்னர், அங்குள்ள தொண்டர் ஒருவரிடம் விபரம் கேட்டறிந்தோம். 2007இல் தமது 76ஆவது வயதில் காலமான குருஜி சுப்பிரமணியத்தின்

புகழுடல் புதைக்கப்பட்டு தினமும் மாலை அணிவித்து வணங்கப்பட்டு வருவதாய் விபரம் கூறினர் அத்தொண்டர்.

ஸ்கந்தவேல் ஆலயத்திற்கு அண்மையில் உணவு பரிமாறும் அறைகள் கண்ணாடி யன்னல்கள் கொண்ட இரு பெரிய வீடுகளாக அமைந்திருந்தன. மண்டபத்தில் வட்ட வடிவமான மேசைகளின் நடுவே ஐந்து கதிரைகள் வீதம் போடப்பட்டிருக்கிறது. மேசைகளின்மீது அழகான மேசை விரிப்புகளும், நடுவே பெரிய பழத்தட்டுகளும் ஒவ்வொரு மேசையிலும் காணப்படுகிறது. பழத்தட்டில் வாழைப்பழம் - ஆரேஞ்சு - அப்பிள் - பேரீந்து போன்ற பழவகைகள் நிறைய வைக்கப்பட்டிருந்தது. ஒரு பக்கமாக நீண்ட மேசைமீது வரிசையாக வைக்கப்பட்டிருந்த காலை உணவு வகைகளில் நாமே நமக்கு வேண்டும் அளவை எடுத்துக்கொண்டு கதிரைகளில் உட்கார்ந்து சாப்பிட்டபின், வேண்டுமளவு பழங்களையும் எடுத்துச் சாப்பிடலாம். உணவு மண்டபத்தினூடாக நடந்து வரும் பிரதமகுரு, "வேண்டுமளவு எடுத்துக் கொள்ளுங்கள். தயவு செய்து சிறிதளவேனும் வீணாக்காதீர்கள்'' என ஆங்கிலத்தில் பணிவாகக் கேட்டுக்கொள்கின்றார். கடலைக்கறி, தேங்காய்ப்பூ கடுகு சாதம், பருப்புக் கறி, புரிந்துகொள்ள முடியாத பொரியல் - கூட்டு ஆகியவையே காலை உணவாக நமக்கு வழங்கப்பட்டவை. பூசை வேளைகளில் ஸ்கந்தவேளுக்கு நேர்த்திக்காக வழங்கப்படும் அத்தனை உணவுப் பொருட்களும் பழங்களும் வருகைதரும் அத்தனை பக்தர்களுக்கும் மூன்று வேளையும் தாராளமாகத் தருகிறார்கள். கோவிலுக்கு அடிக்கடி வந்துபோகும் அன்பர்கள் உணவறைகளில், உணவு பரிமாறப்படும் வேளைகளில் பலவிதத்திலும் உதவி புரிகிறார்கள். நிர்வாகமும் அந்த உதவிகளை ஏற்றுக்கொள்கிறார்கள். சமையலுக்கான காய்கறிகளின் கழிவுகள், பழங்களின் தோல் முதலான மிகுதிப் பொருட்கள் பண்ணைகளில் பராபரிக்கப்படும் பன்றி, ஆடு, கோழி, முயல் போன்றவற்றுக்கு உணவாகின்றது. ஸ்கந்தவேல் ஆலய ஸ்தாபகர் குருஜி சுப்பிரமணியரின் சிறிய அளவினதான புகைப்படம் உணவுக் கூடத்தில் மாட்டப்பட்டிருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

சற்றுநேர ஓய்வின்பின் சரியாக 10 மணிக்கு அருகிலுள்ள ஸ்ரீரங்கநாதர் ஆலயத்திற்குச் செல்கிறோம். திருப்பாற்கடலில் அரங்கன் பள்ளி கொள்வது போன்ற ஒரு அமைப்பு நீர்த்தடாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீரங்கநாதரின் காலடியில் லக்குமியும், தலைமாட்டில் ஹனுமனும் உள்ளனர். தடாகத்தின் புறச்சுவரில் பரந்தாமனின் பல்வேறு அவதாரங்கள் ஓவியமாக வரையப்பட்டுள்ளது. பூசை முடிந்து அந்த கண்ணாடி மண்டபம் பூட்டப்பட்டாலும், கண்ணாடி யன்னலுக்கு வெளியே இருந்தபடி ஸ்ரீரங்கநாதரைத் தரிசிக்க முடியும்.

லண்டனில் பல்வேறு கோவில்கள் காணப்பட்ட போதிலும் பலநூறு மைல்களுக்கு அப்பால் உள்ள ஸ்கந்தவேல் மீது புலம்பெயர்ந்த நம்மவர்கள் ஆழமான பக்திகொண்டுள்ளனர். அதனால் வருடத்திற்கு ஒருமுறையேனும் ஸ்கந்தவேலைத் தரிசிப்பதுடன் நேர்த்திகளையும் நிறைவேற்றுகிறார்கள். தற்காலிக விசாமூலம் லண்டன் போகும் நம்மையும் அழைத்துச் சென்று வேல்ஸ் முருகனைத் தரிசிக்கும் பாக்கியத்தையும் பெற்றுத் தருகிறார்கள்.

பி.கு:

ஸ்கந்தவேலைத் தரிசிக்க முடிவு செய்யும் அனைவரும் முதல் மூன்று நாட்களும் மச்ச மாமிசம் தவிர்த்து, முடிந்தவரை சுத்தமாக பக்குவமாக இருந்தே வேல்ஸ் புறப்படுகின்றனர். இதனை அனைவரும் கண்டிப்பாக அனுசரிக்கின்றனர்.

# பங்குனிமாத வாராந்த நிகழ்வுகள்

06.03.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "பஜனை"

வழங்குபவர் :- ஸ்ரீ முருகன் பஜனைக் குழுவினர் (கொழும்புத்துறை)
(பக்கவாத்திய சகிதம்)

---

13.03.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "இன்னிசை"

வழங்குபவர் :- கலாவித்தகர் திரு K.S. சிவஞானராஜா அவர்கள்
[இளை. இசை ஆசிரியர்]

வயலின் :வித்துவான் அ. ஜெயராமன்

மிருதங்கம் :வித்துவான் சதா. வேல்மாறன்

---

20.03.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்
[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

27.03.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்

## ஞானச்சுடர் பங்குனிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு வ. கணேசமூர்த்தி அவர்கள்
[இளை. அதிபர்]

**207ஆவது மலர்**

மதிப்பீட்டுரை :- திரு க. ஆனந்தராசா அவர்கள்
[இளை. அதிபர்]

பதிவு இல. QD/112/NEWS/2015

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

